1000

M. L. A. Debates

Official Report

Vol. I No. 11

1967

V2.11, 2.1' N67
N67.1.11
123200

R.R. NO. 315/67 ஆ.(B)

வெளியீடு—20—10—1967 ]
Issued—20—10—1967]

MADRAS RECORD OFFICE
16 NOV
EGMORE, MADRAS-8

வாய்மையே வெல்லும்

1000

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1967 மார்ச் 30
Thursday 30th March 1967

தொகுதி I—எண் 11
Volume I—No. 11

11

©
தமிழக அரசு
1967
©
GOVERNMENT OF MADRAS
1967

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

D

V211,31 'N67

N67-1-11

123200

## உள்ளடக்கம்

பக்கங்கள்

1 வினக்கள், விடைகள் .. .. .. .. .. .. 885–899

2 ஒத்திவைப்புத் தீர்மானம்—
உணவுப் பங்கீட்டில் குடும்பக் கார்டு முறை .. .. 899–900

3 அரசினர் தீர்மானம்—
41 (3) விதியைத் தளர்த்துதல் .. .. .. .. 900

4 கவன ஈர்ப்பு—
(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணை வசூல் ஒத்திவைப்பு .. ... 900–901
(இ) "மை காப்பி பார்" உணவுச்சாலை கதவடைப்பு .. 901–903
(உ) பவானி, ஈரோடு தாலுக்காக்களில் விவசாயிகளிடமிருந்து கட்டாயமாக அபிவிருத்தி வரி வசூல் .. 903–904

5 அறிவிப்புக்கள்—
(அ) அரசாங்க உறுதிமொழிக் குழுவிற்கான நியமனம் .. 904
(இ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் .. 984
(உ) பொதுக் கணக்குக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. .. .. 984
(எ) மதிப்பீட்டுக் குழுவில் மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல் .. .. .. .. .. .. 985

6 கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி) .. 905–984

7 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 985

# தமிழகச் சட்டப் பேரவை

*வியாழக்கிழமை, 1967 மார்ச் 30.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## வினாக்கள் விடைகள்

### நட்சத்திரக் குறியிட்ட வினாக்கள்:

*Free education in Pre-University class*

* 7. *Q.*—THIRU. K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to make education free at Pre-University level from the academic year 1967–68 irrespective of the incomes of the parents and their communities?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இவ்விஷயம் பரிசீலனையிலிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** இந்தப் பரிசீலனையின் முடிவு தெரி வதற்கு எத்தனை நாட்களாகும்? கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்தக் கல்லூரிகள் எல்லாம் ஜூன் மாதத்தில் திறக்கப் போகிறார்கள். ஆகவே, மே மாத கடைசிக்குள் ஆகவாவது சர்க்கார் இதுபற்றி எடுக்கிற முடிவுகளைத் தெளிவாக மக்களுக்கு விளம்பரம் மூலமாகவாவது அறிவிக்க ஏற்பாடுகள் செய்வார்களா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, மே மாத இறுதிக்குள் இதுபற்றி பரிசீலிக்கப்பட்டு எந்த அடிப்படையில், எந்த வகையில், எந்த முறையில் இலவசக் கல்வி அளிக்கலாம் என்பதுபற்றி தெளிவாக முடிவு எடுக்கப்படும்.

**திரு. எட்மண்ட் பெர்னாண்டோ:** ஹிந்து மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிற சலுகைகள் கிறிஸ்தவ மதத்திலே சேர்ந்துள்ளவர்களுக்கும் கொடுக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுதே கொடுக்கப்பட்டு வருகிறது என்று அறிகிறேன். இல்லையென்றால் அது பரிசீலிக்கப்படும்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, every year there is unprecedented rush in the Colleges, especially, at the Pre-University Course level and every year in the month of July whenever the Legislature met, we used to draw the attention of the Ministers to this great rush in Colleges and every year the Chief

Minister used to address the University requesting them to relax the rules and increase the number of seats in these classes. In view of this experience every year in the past, will the Hon. the Minister for Education be pleased to make early arrangements, as a precautionary measure, in advance so that it may be possible for all the students to secure admission in the P.U.C. classes?

***மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்*** : கிட்டத்தட்ட 1,90,000 பேர் பரீட்சை எழுதுகிறார்கள். இதில் பாதி பேராவது வெற்றி பெறுவார்கள் என்று நம்பலாம். புகுமுக வகுப்பில் 45 ஆயிரம் பேர்களுக்குத்தான் இடம் இருக்கின்றது. அந்த இடங்களை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளும்படி துணைவேந்தர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டும், புதிதாக இரண்டு மூன்று கல்லூரிகளைத் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

***திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்*** : சார். ப்ரொஃபஷனல் காலேஜ்களாகிய மெடிகல், இன்ஜினீரிங் கல்லூரிகளில் படிக்கக்கூடிய 'மோஸ்ட்' பேக்வார்டு கிளாஸ் கம்யூனிடி, தாழ்த்தப்பட்ட கம்யூனிடி ஆகியவைகளைச் சேர்ந்தவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

***மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்*** : இது முதற் கேள்வியோடு தொடர்புடையது அல்லவென்றாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, மலைச்சாதி வகுப்பினருக்கென்று 16 சதவிகிதமும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சதவிகிதமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வகுப்பினரும். தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பொதுவான துறையிலும் மார்க் விகிதங்களின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட வாய்ப்பு இருக்கிறது. அதனால் தான் இந்த ஆண்டு பொறியியல் கல்லூரியில் பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும் மொத்தத்தில் 47 சதவிகிதம் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினருக்கு முழுச் சம்பள சலுகையும், மற்ற பிற்பட்ட வகுப்பினருக்கு அரைச்சம்பள சலுகையும் தருகின்ற நிலைமை இருக்கிறது. பொதுவாக, இலவசக் கல்வியைப் பெற வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கு எல்லாம் சலுகை தரப்பட வேண்டுமென்பதே நமது நோக்கமாகும்.

***திரு. இராம. அரங்கண்ணல்*** : மொத்தமாக பி.யு.சி. வகுப்பினர் அனைவருக்கும் இலவசக் கல்வியை அளிக்க வேண்டுமென்பதாக தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் ஏதேனும் அரசாங்கத்திற்குக் கோரிக்கை அனுப்பியிருக்கிறதா ?

***மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்*** : அதுபற்றி விவரம் என்னிடம் இல்லை.



1000.

THIRU. K. VINAYAKAM : If in case the Government decides to give free education at the P.U.C. level, the main difficulty which the Chief Minister would be beset with is want of accommodation. Will the Government, therefore, take steps either to introduce the shift system in colleges or at least to provide temporary accommodation so as not to be worried with this difficulty and the necessity of turning away the students?

***மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்*** : கனம் உறுப்பினர் கூறுகிறபடி புகுமுகவகுப்பில் எல்லோருக்கும் இலவசக் கல்வி தருவது என்று முடிவு எடுப்போமானால், கனம் உறுப்பினர் சொல்லுகிற யோசனையைக் கவனிக்க வேண்டியதாக இருக்கும். அதுபற்றி பரிசீலனை செய்யும்போது இக்கருத்தும் கவனிக்கப் படும்.

***திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி*** : மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, இப்போதுள்ள கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 45,000 பேர்கள் படிக்கத்தான் வசதி இருக்கிறது என்றார். கள். இவ்வாண்டு கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்களுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதுகிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே, இதுபற்றி பரிசீலனை செய்ய கன்சல்டேடிவ் கமிட்டி அமைக்கப்படும் என்று சொன்னார்களே, அது அமைக்கப்பட்டு முடிவு பரிசீலனை செய்து அறிவிக்கப்படுமா?

***மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்*** : கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி கன்சல்டேடிவ் கமிட்டி போடுவதாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் அதிகம் பரிசீலிக்கப்படும்.

***திரு. வி. கே. கோதண்டராமன்*** : இலவசக் கல்வி என்பது கல்லூரிகளில் ஃபீஸ் இல்லாமல் செய்து, ஸ்காலர்ஷிப் கொடுப்பது என்றுதான் இருக்கிறது. ஏழைக் குடும்பத்திலுள்ள பல மாணவர் களுக்கு இன்றையதினம் இந்த உதவி கொடுத்தால்கூட படிக்க முடியாமல் இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே. உணவு, உடை, இருப்பிடம் என்பதாக இப்படி எல்லா வற்றையுமே இலவசமாக ஏழை மாணவர்களுக்கு வழங்க ஜில்லா வாரியாக தற்சமயம் ஒரு கல்லூரியாவது ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

***மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்*** : இப்போது இலவசக் கல்வி தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைச்சாதி யினருக்குமே அளிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பினருக்கு பாதிச் சம்பளம் அளிக்கப்படுகிறது. இதில் 1,500 என்று வருமான வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வருமான வரம்பை உயர்த்துவதன் மூலமாக இன்னும் அதிகப்படியான பேர்களுக்கு உதவி கிடைக்க வழி ஏற்படுமா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. இதுபற்றி விரிவான முறையில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** மேலைநாடுகளில் உள்ளதுபோல. வருமான வரி செலுத்துவோர்களிடமே எஜுகேஷனல் செஸ் என்பதாக வசூலித்து, அதன்மூலம் இலவசக் கல்வியை அளிக்க உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த யோசனைகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இந்தச் சலுகை அளிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று சொல்ல முடியுமா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போதிருக்கிற நிலைமையில் புதுமுக வகுப்பில் எல்லோருக்கும் இலவசக் கல்வியை அளிப்பது என்றால், 75 லட்சத்திற்கு மேல் ஆகுமென்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** இப்போது பள்ளிகளில் வசூலித்துவரும் ஸ்பெஷல் கட்டணங்களையெல்லாம் நிறுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி இப்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. விரிவாகப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எஸ் ராமலிங்கம் :** சர்க்கார் கல்லூரிகளில் கொடுக்கப்படுகிற சலுகைகள். தனியார் கல்லூரிகளிலும் விஸ்தரிக்கப்படுமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** சர்க்கார் கல்லூரிகளில் என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றன, தனியார் கல்லூரிகளில் என்னென்ன கொடுக்கப்படுகின்றன. கொடுக்கப்படவில்லை என்கிற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இது பற்றி பரிசீலனை செய்யும்போது கவனிக்கப்படும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, having been informed in this Hon'ble House that the present Ministry is the successor of the old Justice Party, may I request the Minister for Education to state whether the present Ministry will consider the question of reviving the old Communal G.O. which has been declared invalid by the High Court or evolve any other scheme like that for providing proportionate representation with regard to admission in professional colleges?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது இருக்கின்ற முறையைப் பொறுத்தவரையில் 16 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று ஒதுக்கியும், 25 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கு என்று ஒதுக்கியும் வரப்படுகிறது. இப்பொழுது அதுதான் மேற்கொள்ளப்படும்.



**திரு. கெ. இர. ஞானசம்பந்தன் :** கனம் சபாநாயகர் அவர்களே இப்பொழுது ஏற்கனவே ஏழு கோடி ரூபாய் வரையிலே துண்டு விழக்கூடிய நிலையிலே அரசு இருக்கும்பொழுது புகுமுக வகுப்பிலே படித்து வருகின்ற ஏழை மாணவர்களுக்குப் பரிபூரணமாகக் கட்டணம் இல்லாமல் செய்து வசதி இருப்பவர்களிடத்திலே அதிகக் கட்டணம் வசூல்செய்வதற்கும் உத்திரவு பிறப்பிப்பதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது ஒன்றும் அது முடிவு செய்யப்படவில்லை. இதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்பொழுது இவையெல்லாம் ஆராயப்படும்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கல்விச் சலுகைகள் கவுண்டர் சமுதாயம் ஃபார்வாடு கம்யூனிட்டியிலே சேர்த்திருப்பதால் அவர்களுக்கு 1,500 ரூபாய்க்கு வருடம் ஒன்றுக்கு வருமானம் குறைந்து இருந்தாலும் கல்லூரிகளிலே அவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பது இல்லை. ஆகவே அதை ஆழ்ந்து பரிசீலனை செய்து, பரிகாரம் தேட அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பிரச்னையில் அந்தக் கேள்வி எழவில்லை.

**திரு. கே. போஜன் :** அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பின்தங்கிய வகுப்பினருக்கும், மலைச் சாதியினருக்கும் சர்க்கார் கொடுக்கின்ற உதவிப்பணம் விலைவாசி உயர்வின் காரணமாக கட்டுபடியாகவில்லை. ஆகவே அதையும் அதிகமாக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதிலே எல்லாம் ஒன்றும் பணமாகக் கொடுக்கும் நிலையில்லை. ஆகவே விலைவாசிப் பிரச்சினை இதிலே வரவில்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்தியாவில் உள்ள மற்ற சர்வ கலாசாலைகளைப்போல் தபால் முறையிலே சென்னை சர்வகலாசாலை மட்டத்திலும் படிப்பதற்கு அனுமதியளித்தால் இந்த இலவசக் கல்விப்பிரச்னை இல்லாமல் இருக்கும் அல்லவா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதை யோசிக்க வேண்டியதும், அதைப்பற்றி முடிவெடுக்கவேண்டியதும் சர்வகலாசாலை தான் அதுதான் உரிமை படைத்தது.

**திரு. பு. செ. முத்துச்செல்வன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கல்லூரிகளிலே நடக்கின்ற மாலைக் கல்லூரிகளிலே படிக்கின்ற பதிவு செய்யப்படாத அரசாங்க அலுவலர்களுக்கு இலவசக் கல்வி அளிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது அவையின் முன் உள்ள கேள்வியுடன் தொடர்பு உடையது அல்ல.

**திரு. தோ. மு. நல்லசாமி :** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் இலவசக் கல்வி புகுமுக வகுப்பிற்கு அளிப்பதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று. அதிகப்படியான மாணவர்கள் அடுத்த கல்வியாண்டில் பி.யூ.சி.-யில் வருவார்கள் என்ற காரணத்தாலே இப்பொழுதுள்ள உயர்நிலைப்பள்ளிகளிலேயே பி.யூ.சி. வகுப்பை விஸ்தரித்து, அதே சமயத்திலே இலவசமாகவும் ஆக்குவதற்கு முன் வருவார்களா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதுபற்றி முடிவு செய்யப்படவில்லை. ஏற்கனவே இதைப்பற்றி ஆராயப்பட்ட பொழுது, புகுமுக வகுப்பை உயர்நிலைப்பள்ளியோடு சேர்த்து விடுவதா அல்லது கல்லூரி வகுப்பாக வைத்துவிடுவதா என்று ஆராயப்பட்டு, உயர்நிலைப்பள்ளியோடு சேர்ப்பது சரியல்ல என்றும், அது ப்ரி-யுனிவர்சிடி கோர்ஸ் என்று இருப்பதால் அது யுனிவர்சிடிக்குக் கீழே வருகின்ற கல்லூரி வகுப்பாகத் தான் இருக்கவேண்டுமென்று அதுதான் இப்பொழுது மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதுதான் தொடரும்.

**திரு. பி. துரைராஜ் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கல்வி, உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியவை செய்து தருவதற்கு உத்தேசம் உண்டா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது தரப் படுகின்ற சலுகைகள் தொடர்ந்து தரப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தற்பொழுது மத அடிப்படையில் எந்தக் கல்விச் சலுகையாவது கொடுக்கப்படுகிறதா ? அப்படியிருந்தால் அதை மாற்றி எல்லா மதத்தினருக்கும் ஒரே மாதிரி சலுகை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** மத அடிப்படையில் எந்தச் சலுகையும் தனியாகத் தரப்படுவதாகத் தெரியவில்லை.

**திரு. எம். பூபதி :** ஹரிஜன மக்கள் கிறிஸ்துவ மதத்திலே சேர்ந்ததின் விளைவாக அவர்களுக்கு ஹிந்து ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் கொடுக்கப்படுகிறதா? சலவைத் தொழிலாளர்கள் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள், அவர்களுக்கும் மற்றவர்களைப்போல் பரிபூரணமான சலுகைகள் அரசாங்கம் கொடுத்து வருகிறதா ?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** சமயம் காரணமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் புறக்கணிக்கப்படவில்லை. அதைப்பற்றி ஏதாவது தகவல் கொண்டுவந்தால் அரசாங்கம் அதைக் கவனிக்கும். சலவைத் தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள், அது தனியாகக் கவனிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** நான்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக இங்கே முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, இதனாலே ஏற்படுகின்ற செலவும் நஷ்டமும் 55 லட்சம் ரூபாய் என்று



குறிப்பிட்டார்கள். ஆனால் நான்கு நாட்களுக்குப் பிறகு இன்று கல்வியமைச்சர் அவர்கள் 75 லட்சம் ரூபாய அதனால் நஷ்டமும், செலவும் ஆகும் என்று சொன்னார்கள். ஒரு வாரத்திற்குள்ளேயே 20 லட்சம் அதிகமாகச் சொல்கிறார்கள். அவர் சொன்னது சரியா அல்லது ஐயா அவர்கள் சொல்வது சரியா என்று யோசித்துச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஐம்பத்தைந்து லட்ச ரூபாயிலிருந்து 75 லட்ச ரூபாய் வரையில் ஆகும் என்று சொல்லப்படுகிறது. உத்தேசமாகத்தான் போடப்படும். அதைப் பற்றி நான் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. ஐம்பத்தைந்து லட்சத்திலிருந்து, 75 லட்சத்திற்கு வரக்கூடும். நான் புதிதாக வருகின்ற எண்ணிக்கையையும் சேர்த்துச் சொன்னேன். அவர்கள் சொல்லும்பொழுது அதைச் சேர்க்காமல் சொன்னார்கள்.

**திரு. வெ. முனுசாமி :** சம்பளச் சலுகை, ஸ்காலர்ஷிப் இவற்றிற்காக வருட வருமானம் 1,500-க்கு குறைந்திருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அதிலே குமாஸ்தாக்கள் வாங்கக்கூடிய பஞ்சப்படி போன்றவற்றையும் சேர்த்துக்கொள்கிறார்கள். அதனால் அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்கவில்லை. ஆகவே பஞ்சப்படி போன்றவற்றைக் கழித்து அவர்களுக்குச சலுகை கொடுக்க முன் வருவார்களா ?

(பதில் இல்லை.)

**திரு. கே. ஆர். கோவிந்தன் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கொடுக்கப்படும் சலுகைகள் இன அடிப்படையை வைத்துக் கொடுக்காமல் ஏழ்மையின் அடிப்படையில் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

(பதில் இல்லை.)

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, கல்விச் சலுகைகளிலே தொழிலாளர்களுடைய சம்பளத்தையும், போனஸையும் ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டுக்கொள்வதால் அவர்களுக்கு சலுகைகள் கிடைக்கவில்லை. இதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கும் சலுகைகள் கிடைப்பதற்கு சர்க்கார் முயற்சியெடுக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிக்கேள்வி போட வேண்டும்.

**உறுப்பினர்கள் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதி**

* 8 கேள்வி.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு இந்தியா பூராவும் 1-வது வகுப்பில் ரயிலில் பிரயாணம் செய்ய அனுமதிப்பது போல் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தமிழ்நாடு பூராவும் ரயிலில் போக அனுமதிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

* 9 கேள்வி.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு பூராவும் ஓடும் சர்க்கார் பஸ்களில் சட்டசபை அங்கத்தினர்கள் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதிக்கும் உத்தேசமுண்டா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

*Arts College in Tiruttani*

* 10 *Q.*—THIRU. K. VINAYAKAM: Wili the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an Arts College in Tiruttani Taluk, Chingleput district from the next academic year 1967–68?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the fact that there are about 30 high schools in the Tiruttani taluk and about 30,000 students are coming out of those schools successfully after passing the S.S.L.C. Examination every year and in view of the fact that most of them migrate to the Andhra University because they are denied seats in the Madras City Colleges, will the Government consider the possibility of opening an Arts College there provided the Devasthanam of the Tiruttani Temple or the public come forward to contribute money for the starting of the college?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : திருத்தணிப் பகுதியில் இருந்து ஒரு கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை இது வரை வந்ததாகத் தெரியவில்லை. அங்கு ஒரு கல்லூரியை வைக்க வேண்டுமென்றால் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். கனம் உறுப்பினர் அவர்கள் ஐந்து லட்சம் ரூபாயைச் சேர்த்துத் தருவார்களேயானால் அரசாங்கம் அங்கு ஒரு கல்லூரியை வைக்க முயற்சி எடுக்கும். முறைப்படி அவர்கள் விண்ணப்பத்தைக் கொடுப்பார்களேயானால் கவனிக்கப்படும்.

## சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புது விடுதி

*11. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டப்படும் தங்கும் விடுதி எப்போது திறக்கப்படும்?



மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர்கள் தங்கும் புதிய விடுதி கட்டும் வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. இவ்வேலை இவ்வாண்டு இறுதிக்குள் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் இக்கட்டிடத்தின் தென் பகுதியில் சுமார் 65 அறைகள் கட்டி முடித்துவிட முடியுமென்று நம்புகிறோம்.

திரு. முனு ஆதி : அண்டை மாநிலத்தில் சட்ட மன்றம் நடக்கிறபோது உறுப்பினர்களுக்கு விடுதிகள் அறைக்கான கட்டணம் வசூலிப்பதில்லை. அந்த நிலையை நம்முடைய அரசாங்கமும் கடைப்பிடிக்குமா ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது இல்லை; இனிமேல் அது பரிசீலிக்கப்படலாம்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தப் புதிய ஹாஸ்டல் கட்டடத்தில் ஒவ்வொரு ரூமுக்கும் ஃபோன் வசதி, மெம்பர்களுடைய கார்கள் தங்குவதற்கான ஷெட்டுகள் வசதி ஆகியவற்றையும் இதிலே அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : நிதி வசதி இடம் கொடுக்குமானால் செய்யலாம். போகப் போக பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இந்தப் புதிய கட்டடத்தில் எத்தனை அங்கத்தினர்கள் தங்கத்தக்க அளவுக்கு அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் புதிய கட்டடத்தில், தனி அறைகள் 172, இரண்டு பேர் தங்கக் கூடிய அறைகள் 28, சைவ உணவு சாப்பிடுவதற்கு ஒரு இடம், அசைவ உணவு சாப்பிடுவதற்கு ஒரு இடம், லிப்டுகள் 4, விருந்தினர் தங்கும் அறைகள் 3, காரேஜஸ் 16, நூல்நிலையம் 1, லாண்டரிக்கு 1, சலூனுக்கு 1—என்ற வகையில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

*Nationalisation of bus transport.*

* 12 *Q.*—THIRU. K. VINAYAKAM:<br>
THIRU. V. K. KOTHANDARAMAN:<br>
THIRU. K. CHEEMAICHAMY:<br>
} Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to nationalise the bus transport in the State;

(*b*) if so, how is it proposed to be implemented; and

(*c*) in what stages?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி : ((அ & இ) சென்னை மாநகரின் பஸ் போக்குவரத்தும் வெளியூர்ப் பகுதிகளில் ஒருசில பஸ் வழித் தடங்களும் (route) ஏற்கெனவே தேசியமயமாக்கப் பட்டுள்ளன. இம்மாநிலத்தில் பஸ் போக்குவரத்தை மேலும் தேசியமயமாக்குவது பற்றித் தொடர்ந்து பரிசிலனை செய்யப்பட்டு வந்திருக்கிறது; இப்போதும் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

[1967 மார்ச் 30

**திரு. கே. விநாயகம்** : அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிற பஸ் போக்குவரத்துத் துறையிலே பெரும்பாலும் அதிக நஷ்டம் ஏற்பட்டிருப்பதால் மாகாணத்தில் இருக்கிற பஸ்களை எல்லாம் எடுத்து நடத்தும்போது மேலும் அதிக நஷ்டம் ஏற்படும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தால் இந்த முயற்சியைக் கைவிடுவதற்கு முயற்சிப்பார்களா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : சென்னை நகரில் பஸ் துறையில் ஏற்படக் கூடிய நஷ்டம் வெளியூர் பஸ்களின் மூலம் ஈடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, வெளியூரில் அதிகமான பஸ்களை எடுக்கிற நேரத்தில் இன்னும் லாபம் அதிகமாக வர முடியும்.

**திரு. நா. காசிராமன்** : விபத்துக்கள் ஏற்படும்போது தனியார் துறையில் விபத்துக்குரிய நஷ்ட ஈடு கொடுப்பதோடு தனியார் துறை பஸ்களை இன்ஷூரன்சும் செய்யப்பட வேண்டுமென்று கட்டாயத்தின் பேரில் நஷ்ட ஈடு பெற்று அளிக்கப்படுகிறது. அவ்வாறு சர்க்கார் பஸ் துறையில் இன்ஷூரன்ஸ் செய்து அதற்கேற்ப நஷ்ட ஈடும் அளிக்கப்படுகிறதா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : நஷ்ட ஈடுகள் அளிக்கப்படுகின்றன.

**திரு. வி. எஸ். எஸ். மணி** : அரசாங்க பஸ் போக்குவரத்தில் இந்திய அரசாங்கத்தாரால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: 1965--66 வரை கணக்கு இருக்கிறது.—

1962-63-ம் ஆண்டில்—12.42 லட்சம் லாபம்.

1963–64-ம் ஆண்டில்—28·09 லட்சம் நஷ்டம்.

1964–65-ம் ஆண்டில்—18·24 லட்சம் நஷ்டம்.

1965–66-ம் ஆண்டில்—28·93 லட்சம் நஷ்டம்.

அதற்கு மேல் உள்ள கணக்குகள் ல்இலை.

**திரு. எ. பாலசுப்பிரமணியம்** : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் இந்தியா முழுவதும் பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கிவிட வேண்டுமென்று டெல்லியில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம் திட்டமிட்டிருந்தது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: அதற்கான முயற்சியாக 1947–48-ம் ஆண்டிலே சென்னை மாநிலத்திலே தேசிய மயமாக்குவதற்கான கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வழியில் திட்டங்கள் தீட்டப்பட்டன. என்ன காரணத்தாலோ முடக்கி வைக்கப்பட்டன. இப்போது மறுபடியும் பரிசீலனை செய்யப்பட்டு அந்த வேலை தீவிரப்படுத்தப்படும் என்ற என்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1967 மார்ச் 30]

**திரு. க. இராமமூர்த்தி** : நம்முடைய அரசாங்கம் பஸ் போக்குவரத்துத் துறையைத் தேசிய மயமாக்குவதில் தீவிரமான அக்கறை செலுத்துவதால், தனியார் துறைக்குக் கொடுக்கப்படுகிற புதிய பஸ் ரூட்களைக் கொடுக்காமல் நிறுத்தி அரசாங்கமே நடத்துவதற்கு வழி வகைகளை வகுக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: அதை எப்படி எப்படிச் செய்ய வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். பிறகு அது பற்றி யோசிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்**: கள்ளக்கடத்தலுக்கு பிரதான காரணமாகவும் உதவியாகவும் இருப்பது லாரி டிரான்ஸ்போர்ட் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அதையும் உடனடியாக இதனுடன் சேர்த்து தேசிய மயமாக்குவதன் மூலம் கள்ளக்கடத்தலைத் தடுக்க முடியும் என்பதால் அதைப் பற்றியும் சர்க்கார் ஆலோசிக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி**: இந்தக் கேள்வியில் அது அடங்கவில்லை.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி** : பஸ்ஸை தேசியமயமாக்குகின்ற நேரத்தில் குறைந்தபட்சம் இத்தனை பஸ் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்ற திட்டம் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : திட்டம் யோசிக்கின்ற நிலையில் இருக்கிறது. பிறகுதான் பரிசீலிக்கப்படும்.

**திரு. நா. காசிராமன்**: தனியார் துறையில் விடப்படும் பஸ்களுக்குக் கொடுக்கப்படும் அளவுக்கு மீறிய அளவுக்கு பாசஞ்சர்களை ஏற்றினால் குற்றம் என்று கருதப்படுகிறது. அரசாங்க பஸ்களிலும் அது குற்றம் என்று கருதப்படுகிறதா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : தவறு எங்கு நடந்தாலும் கண்டிக்கப்படும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி**: சர்க்கார் நடத்துகிற பஸ்களில் நஷ்டம் காட்டப்பட்டிருப்பதை வைத்து இந்த அரசாங்கம் தேசிய மயமாக்கும் கொள்கையை விட்டு விட உத்தேசமுண்டா என்று திரு. விநாயகம் அவர்கள் கேட்டார்கள். இந்த நஷ்டம் நிர்வாகத் தவறினால் ஏற்பட்டதுதான் என்பது தனியாருக்கு லாபம் கிடைப்பதிலிருந்து தெரிய வருகிறது. ஆகவே, படிப்படியாக தேசிய மயமாக்கும் காரியத்தில் இந்த அரசாங்கம் ஈடுபடுமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : படிப்படியாக, நிச்சயமாக, உறுதியாக ஈடுபடும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்** : இப்போது நடக்கின்ற அரசாங்கத் துறை பஸ்களில் ஏற்படுகின்ற நஷ்டங்களைச் சரிக்கட்டிய பிறகு மேற்கொண்டு தனியார் துறையில் உள்ளதை சர்க்கார் எடுத்துக்கொள்ள முன்வருமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி** : மேலும் அதிக பஸ்களை எடுத்துக்கொள்ளுகிற காரணத்தால் நஷ்டத்தை ஈடு செய்யலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தமிழ்நாட்டில் இருக்கிற தனிப் பட்ட பஸ் ஆப்பரேட்டர்கள் எவ்வளவு பேர்? அவர்களில் நீண்ட தூர பஸ் ஆப்பரேட்டர்கள் எவ்வளவு பேர்?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** தனிப்பட்ட பஸ் ஆப்பரேட்டர்களின் மொத்த எண்ணிக்கை 1,760. அதிலே—

| | |
|---|---|
| 120 மைலுக்குக் கூடுதலாக உள்ளவர்கள் | 16 |
| 100-ல் இருந்து 120 மைல் வரை | 41 |
| 75 மைல் இருந்து 100 மைல் வரை | 187 |
| 76 மைலுக்குக் குறைவாக | 1,244 |
| டவுன் ரூட்ஸ் | 272 |

ஆக 1,760.

**திரு. சி. கோவிந்தராஜன்:** சென்னை நகரத்தில் இருந்து வெகு தூரத்திலுள்ள எண்ணூர் போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. பாரி கம்பெனி போன்ற தனிப்பட்ட தொழிலதிபர்கள் அங்கு இரவு வேலைக்குப் போகக்கூடிய தொழி லாளர்களுக்கு வசதியாக பஸ்களை விடுவதில்லை. ஆகவே, அரசாங்க பஸ்களை எண்ணூர் வரை விஸ்தரித்து இரவு நேரங் களிலும் அவர்களுக்கு பஸ் வசதி ஏற்படுவதற்கான வழிகளைச் செய்வார்களா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** இந்த அரசாங்கம் பதவியேற்று ஒரு மாத காலத்திற்குள்ளாகவே துணிச்சலாக பஸ் கட்டணத்தைக் குறைத்ததே; அதைப் பற்றி எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் யாராவது பாராட்டியிருக்கிறார்களா?

(பதில் இல்லை)

**திரு. நா. காசிராமன்:** சர்க்கார் பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொள்ளும் நேரத்தில் தனியார் சர்வீஸ்களில் உள்ள தொழிலாளர் களை வேலையில் எடுத்துக் கொள்ளவும், அவர்களுக்குக் கொடுக்கப் படும் சகல வசதிகளுடன் கன்டினுவன்ஸ் ஆஃப் சர்வீஸுடனும் அவர்களை வேலையில் எடுத்துக் கொள்ளும் உத்தேசமுண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** திட்டத்தை நிறைவேற்றும் போது அதில் ஏற்படுகிற கேடுபாடுகள் பற்றி பிறகுதான் பரிசீலிக்கப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி:** மாவட்டம் மாவட்டமாக பஸ்களை தேசீய மயமாக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா?

மு.ப. 9-30 **மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** அப்படி ஒன்றும் இப்போது உத்தேசமில்லை.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, having been informed by the Hon. Minister for Transport in this House that nationalisation of bus transport will be done step by step and that too definitely, may I request the Minister to state whether the first step in the nationalisation of bus transport has been taken so far and, if not taken, when the first step will be taken by him?



**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** உரிய சமயத்தில் அறிவிக்கவேண்டிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன்:** அமைச்சர் அவர்கள் பஸ்களை தேசீய மயமாக்குவது பற்றி குறிப்பிட்டார்கள். அப்படி தனியார் துறை பஸ்களை தேசியமயமாக்குவதில் ஆகும் உத்தேசச் செலவைக் குறிப்பிடமுடியுமா? அப்படியானால் மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு வேண்டிய செலவினங்களுக்கு ஓரளவு அதை ஏற்ப தற்கு மான்யம் வழங்குமா என்பதற்கு ஏதாவது விவரங்கள் உண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** அதுபற்றிய விவரங்கள் எதுவுமில்லை. அதுபற்றி யோசித்த பிறகுதான் எதுவும் அறிவிக்கப் படும்.

**திரு. சோ. அழகர்சாமி:** சென்ற ஆண்டு தனியார் பஸ்களில் கூட்டப்பட்ட கட்டணத்தைக் குறைக்க உத்தேசமுண்டா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** இந்தக் கேள்வியில் அது எழவில்லை.

**திரு. க. மு. ராஜகோபால்:** பஸ்களை தேசியமயமாக்கவேண்டு மென்ற நிர்ப்பந்தம் வந்தால் இனிமேல் கொடுக்க வேண்டிய ரூட்களை தனியார்களுக்கு கொடுக்காமல் இருக்கமுடியுமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** எல்லாம் சீர்தூக்கிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. போஜன்:** கனம் அமைச்சர் அவர்கள் பஸ் துறையில் 1962-63-ம் ஆண்டில் லாபமும் மற்ற மூன்றாண்டுகளில் நஷ்டமும் ஏற்பட்டிருப்பதாகவும் கூறினார்கள். பிந்திய மூன்றாண்டுகளில் நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்து இந்த சபைக்கு தெரிவிப்பார்களா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** பிரயாணிகள் வசதி நிதி, தேய்மான நிதி, வளர்ச்சி நிதி, தொழிலாளர்கள் வீட்டு வசதி நிதி ஆகியவற்றிற்கு வழங்கிய தொகை காரணமாக நஷ்டம் ஏற்பட் டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தேய்மான நிதி, வளர்ச்சி நிதி இவற்றால் எப்படி எப்படி நஷ்டம் ஏற்படுகிறது என்பதை நிர்வாகத் துறையை கலந்த பிறகு அதுபற்றி முடிவு செய்யப்படும்.

**திரு. ந. வீராசாமி:** பஸ்கள் தேசியமயமாக்கப்படுகிற நேரத் தில் கூட்டுறவு துறையில் பஸ் தொழிலை நடத்துகிறவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படுமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** அவை எல்லாம் யோசிக்கப் படும்.

**திரு ஏ. ஆர். பெருமாள்:** படிப்படியாக தேசீயமயமாக்குவதற்கு உத்தேசம் என்றால் படிப்படியாக அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்று திட்டவட்டமாக உத்தேசிக்கப்படுகிறது? எவ்வளவு வருமானம் வரும் என்று அனுமானமாகவாவது உத்தேசிக்கப்படுகிறது?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** அவற்றை எல்லாம் இப்போது சொல்வதற்கில்லை.

**திரு. கே. வினாயகம் :** நம் மாநிலத்தில் தனிப்பட்டவர்களின் பஸ்களின் எண்ணிக்கை 6,000 இருக்கிறது. இந்த 6,000 பஸ்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நஷ்டயீடு கொடுத்த பிறகு அவற்றை செவ்வனே நடத்தவேண்டும். அதற்கு வேண்டிய வொர்க்ஷாப்ஸ் இவற்றை எல்லாம் செய்யவேண்டுமென்றால் முன்பு இருந்த சர்க்கார் கணக்குப்படி 1,000 கோடி ரூபாய் செலவாகிறது என்று சொல்லி அதிலிருந்து வருகிற வருமானமும் நமக்குப் போய் விடுகிறது என்று தெரிந்துகொண்ட பிறகுதான் இதை கொஞ்சம் காலதாமதப்படுத்தியிருப்பது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியில்லை, துணிச்சலாகச் செய்வோம் என்ற முடிவிற்கு வந்தால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரையும் அழைத்து அவர்கள் யோசனைகளையும் கேட்டு அதன் பிறகு இத்துணிச்சலான காரியத்தில் இறங்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வி மூலம், இதை எப்படிச் செய்யப்போகிறோம் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொள்ள விரும்புகிறார்களென்று நினைக்கிறேன். தனியார் துறை பஸ்கள் 5,462 இருக்கின்றன. சர்க்கார் 1—1—1967 வரையில் எடுத்துக்கொண்ட பஸ்கள் 1,356. அதில் சென்னையில் ஓடுபவை 1,020. கன்னியாகுமரில் ஓடுபவை 167. நீண்டதூர பஸ்கள், எக்ஸ்பிரஸ் பஸ்கள் 169. இவ்வளவு குறைந்த அளவிற்குத்தான் பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே உடனடியாக 5,462 பஸ்களை எடுத்துக்கொள்வதா அல்லது படிப்படியாகவா என்பதுபற்றி உறுப்பினர் சிந்திக்கவேண்டும்.

**திரு. ஆ. கு. மூர்த்தி :** தனியார் துறையில் பணியாற்றுகிற பஸ் கண்டக்டர்கள், ட்ரைவர்கள் இவர்களை பஸ் முதலாளிகள் வேண்டுமென்றால் வைத்துக்கொள்கிறார்கள். தேவையில்லை என்றால் தள்ளி விடுகிறார்கள். அதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களின் குறைகளை நீக்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வி முதல் கேள்வியோடு தொடர்பு கொண்டதல்ல.

**திரு. ஆர். கருப்பையா :** தனியார் துறை பஸ்களை தேசியமயமாக்கும்போது அவ்வளவு பஸ்களையும் எடுத்துக்கொள்ளுமா? இல்லை, நஷ்டஈடாக பணத்தைத்தான் கொடுக்குமா?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** எப்படி எப்படிச் செய்வது என்பது பிறகு கலந்து ஆலோசிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** படிப்படியாக பஸ் போக்குவரத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளப் போவதாக சொல்வதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் எவ்வளவு மைல்களுக்கு



மேற்கொண்டு முதல்படியாக எடுக்க உத்தேசம்? அதேபோல் படிப்படியாக எடுக்கப்போவதாக சொல்வதுபோல் சர்க்கார் படிப்படியாக பணத்தையும் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு உத்தேசமுண்டா? இருபது வருடத் தவணையில்?

**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி :** இவைகள் எல்லாம் பரிசீலனையில் இருப்பதாக முன்பே சொன்னேன்.

THIRU. K. VINAYAKAM : In view of the gravity of this subject and the unusual national interest which this subject has evoked, will the Speaker be pleased to set apart a half-hour debate over this issue?

MR. SPEAKER : I hold that sufficiently large number of supplementary questions have been allowed under this question. We have actually devoted more than twenty-three minutes to this question. We have had nearly a half-hour discussion. I regret I am unable to grant the request.

THIRU. K. VINAYAKAM : One hour is set apart for question time. We have yet got twenty-five minutes. That time can be profitably utilised for this.

MR. SPEAKER : Under Rule 38(2) of the Assembly Rules 'if a sufficient or reasonable number of supplementary questions has already been put in respect of the same question, the Speaker may disallow any supplementary question'. Under that rule I hold that a sufficient number of supplementary questions have already been allowed.

THIRU. K. VINAYAKAM : On a point of personal explanation. I was raising my hand so as to attract your attention to put some more questions. I would like to say that your eye is the most elusive object that God has ever created on the face of the earth. It is very difficult to catch your eye. I tried my best to catch your eye, but it refuses to be caught by me. In view of that only. I asked for a half-hour debate. If the House is pleased to set apart the time, the Speaker also could have been more gracious.

MR. SPEAKER : The hon. Member Vinayakam mentioned very rightly that the Speaker's eye is elusive. The Speaker's eye is bound to be elusive.

இத்துடன் வினாக்கள், விடைகள் முடிவடைந்தன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**2. ஒத்திவைப்புத் தீர்மானம்.**

**உணவுப் பங்கீட்டில் குடும்பக் கார்டு முறை**

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** திரு. சோ. அழகர்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[பேரவைத் தலைவர்] [1967 மார்ச் 29

"திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலூகாவில், குடும்பக் கார்டு முறை அமுலில் இருந்தும் நகரப்புறங்களில் குறைந்த அளவிலும், கிராமங்களில் விநியோகம் முற்றிலும் நின்று விட்டதால், உணவு தானியம் கிடைக்காமல், மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று தகவல் வந்துள்ளதால் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க" என்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இது அரசினரின் சாதாரண நிர்வாக இயந்திரத்திற்கு உட்பட்ட காரியம் என்ற காரணத்தினால் அதற்காக அவையை ஒத்தி வைக்க தேவை இல்லை என்று கூறுகிறேன்.

### 3. அரசினர் தீர்மானம்.

#### 41 (3) விதியைத் தளர்த்துதல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்** : அடுத்தாற்போல, இன்று 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூன்று உள்ளன. ஒரே நாளில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேல் கொண்டு வருவதற்கு விதிகளிலே இடம் இல்லை. ஆகையால் மூன்று தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கு இந்தப் பேரவையின் விதியைத் தளர்த்தியாக வேண்டும். எனவே, மன்ற முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட விதியை இன்று மட்டும் தளர்த்தவேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை முன்னுரைப்பார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்னுரைக்கிறேன் :—

"சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது பிரிவின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேற்பட்டு எழுப்பக் கூடாது என்றுள்ள விதியைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

### 4. கவன ஈர்ப்பு

#### (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணை வசூல் ஒத்திவைப்பு

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : தலைவர் அவர்களே, 1966-ம் வருடம் பருவ மழைக் குறைவினால் திருநெல்வேலி ஜில்லாவில் செங்கோட்டை, தென்காசி, சங்கரன்கோவில் தாலூக்காக்களில் பயிர்கள் காய்ந்து சேதம் ஏற்பட்டதின் காரணமாக அங்குள்ள விவசாய மக்கள் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய பலவிதமான கடன் துறைகளின் தவணைத் தொகை ஒரு வருடத்திற்கு அரசாங்கத்தாரால் ஒத்திவைக்கப்பட்டது (ஜி.ஓ. எம்.எஸ். நெ. 1162, ரெவின்யூ, 6—4—1966). இவ்வருடம் (1967-ல்) மேற்படி கடன்களை



1967 மார்ச் 30] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

வசூல் செய்வதற்காக சென்ற வருடம் செலுத்த வேண்டிய தவணைத் தொகை. தவணைப்படி கட்டாததற்கு விதிப்படி அபராதம், இந்த வருட தவணைத் தொகை ஆகியவைகளைச் செலுத்த வேண்டுமென டிமாண்ட் கொடுத்திருப்பதால், அங்குள்ள விவசாய மக்கள் பெரிதும் இன்னலுற்றுள்ளனர். அதற்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்** : வருவாய்த் துறையின் 6—4—1966 தேதியுள்ள 1162-ம் எண் அரசாங்க ஆணையில், செங்கோட்டை, சங்கரன்கோயில், தென்காசி தாலூகாக்களில் 1374-ம் பசலிக்கு, கடன் தவணைகளையும் நிலவரியையும் வசூலிப்பதில் வலுக்கட்டாய நடைமுறையைப் பயன்படுத்தக் கூடாது என அரசாங்கம் திருநெல்வேலி கலெக்டருக்கு உத்தரவிட்டது. நிலைமை சீர்திருந்தியுள்ள போதிலும், ஏற்கெனவே நிலுவையாயுள்ள கடன் தவணைகளை வட்டியும் சேர்த்துக் கட்டுவதோடு நடப்புக் கடனின் தவணைகளையும் செலுத்துவதென்றால் குடியானவர்கள் இடர்ப்படுவர் என திரு. சுப்பையா முதலியார், எம்.எல்.ஏ. அவர்கள் அரசாங்கத்திடம் இப்பொழுது முறையிட்டுள்ளார். இது குறித்து திருநெல்வேலி கலெக்டருக்கு எழுதப்பட்டது. இந்த ஆண்டு நிலைமைகள் மிகத் திருப்திகரமாயுள்ளனவென்றும், குடியானவர்கள் தங்களது கடன் பொறுப்புகளை அறுவடைக்குப் பின்னர் கூடிய விரைவில் கொடுத்துத் தீர்க்க இயலும் என்றும், இது குறித்து இன்னல்களேதும் இருப்பதாகப் பொது மக்களிடமிருந்து பொதுவாக முறையீடு எதுவும் வரவில்லை என்றும் கலெக்டர் அறிவித்துள்ளார். எனவே, இந்த ஆண்டு கட்ட வேண்டிய நிலவரியையும், கடன் தொகையையும் குடியானவர்கள் தாங்களாகவே செலுத்த முடியுமென அரசாங்கம் நம்புகிறது. எனினும், சட்ட சபை உறுப்பினர் செய்துள்ள தனி முறையீட்டினைக் கருதி கடன் நிலுவைத் தொகையை வட்டியுடன் செலுத்தியுள்ள குடியானவர்கள் நடப்புக் கடன் தவணையைச் செலுத்த முடியாமற் போனால் அவர்களிடமிருந்து கடன்தொகைகளை வசூலிப்பதில் வலுக்கட்டாய நடவடிக்கைகள் எவற்றையும் இப்பொழுது மேற்கொள்ள வேண்டியதில்லை என அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்து வருகிறது.

#### (இ) "மை காப்பி பார்" உணவுச்சாலை கதவடைப்பு

**திரு. எ. பாலசுப்பிரமணியன்** : கனம் சபாநாயகர் அவர்களே, சட்ட சபை விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கொண்டு வருகிறேன்.

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை மாநகரின் முக்கிய சாலையான மவுண்ட்ரோட்டிலுள்ள "மை காப்பி பார்" ஓட்டல் முதலாளி ஓட்டலை மூடி, தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான நஷ்டஈடுகளைக் கொடுக்க மறுத்து வருவதால்

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1967 மார்ச் 30

100 தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஓட்டலைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பது, அல்லது நியாயமான நஷ்டஈடுகளை அளிப்பதுபற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** சென்னை, "மை காப்பி பார்" நிர்வாகம் 20—3—1967 அன்று தனது 85 ஊழியர்களுக்கு ஓர் அறிவிப்பை அனுப்பியது. உணவுச்சாலை நடந்து வந்த கட்டிடத்தைக் காலி செய்யும்படி உணவுச்சாலை நிர்வாகத்தினருக்கு உயர்நீதி மன்றம் பிறப்பித்த ஆணையின் காரணமாக அவர்கள் உணவுச்சாலையை மூட வேண்டியுள்ளது என்றும், எனவே 15—3—1967 முதல் அந்த ஊழியர்கள் வேலையினின்று நீக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிவிப்பில் கண்டிருந்தது. தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடு அளிக்கவும் நிர்வாகம் முன்வந்தது.

தொழிலாளர்கள் அதிக ஊதியம் கேட்டதாகவும், அவர்களது வேண்டுகோள் சென்னைத் தொழிலாளர் நடுவர் மன்றத்தின் விசாரணையில் இருப்பதாகவும், தொழிலாளர்களைப் பழி வாங்கவே நிர்வாகம் உணவுச்சாலையை மூட முடிவு செய்துள்ளது என்றும் தொழிலாளர் தரப்பில் அரசாங்கத்திடம் முறையீடு செய்யப்பட்டது. நிர்வாகத்தினர், கட்டிடச் சொந்தக்காரருடன் சதி செய்து, உயர்நீதி மன்றத்திடமிருந்து வெளியேற்ற ஆணையைப் பெற்றுள்ளனர் என்றும் தொழிலாளர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்துத் தொழிலாளர் துறை அலுவலர் ஒருவர் விசாரணை செய்தார். நிர்வாகத்தினர், தங்கள் கட்டுக்கு மீறிய சூழ்நிலைகளினால் நிறுவனத்தை மூட வேண்டி வந்தது என்றும், எனவே தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீடு, மூன்று மாத ஊதியத்துக்கு மேற்படக் கூடாது என்றும் மேற்படி அதிகாரியிடம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. ஆனால், தொழிலாளர்கள், இழப்பீடு மூன்று மாத ஊதியம் என்று வரையறுக்கப்படக் கூடாது என்றும், வேலை நீக்க முழு இழப்பீட்டுத் தொகையும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் வாதிடுகின்றனர்.

ஆயினும், சமரச அதிகாரி இருதரப்பினரிடையேயும் உடன்பாடு காண முயன்று வருகின்றார். அவரது அறிக்கை கிட்டியவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஹோட்டல் முதலாளியை. . . .

**மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்:** அவைத் தலைவர் அவர்களே, கால் அட்டென்ஷன் நோட்டீஸிலே நம் சபையில் கேள்வி கேட்கிற சம்பிரதாயங்கள் கிடையாது . . .



1967 மார்ச் 30]

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** நம்முடைய விதிகளில் ஓரிரண்டு கேள்விகள் கேட்கலாம் என்று இருக்கிறது. . . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அது அமைச்சருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** ஏற்கெனவே ஹோட்டல் முதலாளியை வெளியேற்ற வேண்டுமென்று கட்டட உரிமையாளர் முயற்சி செய்து இரண்டு கோர்ட்டுகளிலும் உரிமை இல்லை என்று தீர்ப்பாகி இருக்கிறது. வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் முதலாளி பக்கம் தீர்ப்பு இருந்தும், அதை மாற்றிக்கொள்ள ரகசிய ஏற்பாடு செய்து, 50,000 ரூபாய் பெற்றுக்கொண்டு. . .

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** விதியைச் சொன்ன காரணத்தினால் அதைப் படித்துக் காட்டுகிறேன்.

'There shall be no debate on such statement at the time it is made. But the Speaker may at his discretion permit one or two questions by the same member.

அருள்கூர்ந்து கேள்வியைக் கேட்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** அந்தத் தகவல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றித்தான் அதிகாரி சமரச உடன்பாடு செய்துகொண்டிருக்கிறார். அது முடியவில்லையென்றாலும், அவருடைய அறிக்கையில் விவரங்கள் இருக்கும் என்று கருதுகிறேன். அறிக்கை வந்தவுடன், தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

### (உ) பவானி, ஈரோடு தாலூக்காக்களில் விவசாயிகளிடமிருந்து கட்டாயமாக அபிவிருத்தி வரி வசூல்.

THIRU. A. M. RAJA: Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely, the precarious condition prevailing in Bhavani and Erode Taluks due to the compulsory collection of betterment tax from the agriculturists at a time when there is no water for paddy fields for the last two years and when there is no income for agriculturists, as a result of which cattle are being sold by them to pay kist and the need for postponement of collection of tax for this fasli and also for letting out water for irrigation from Lower Bhavani.

THE HON. THIRU. K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, the collection of Betterment Levy in respect of lands benefited by the Lower Bhavani Project is being done under the Betterment Levy Act of 1955 as amended by the Amending Act of 1963. The total betterment levy demand for the current fasli in respect of this Project is ascertained to be Rs. 10.32 lakhs in respect of the taluks of Bhavani and Erode. This issue of betterment levy is

applicable not only to Lower Bhavani Project but is also applicable to all other Projects constructed after 1947. The Collector of Coimbatore, in a special report, has stated that there is no clear justification for postponing the betterment levy in these two taluks. However, in view of the fact that four Legislators of this area have represented about the hardship caused to the ryots, the Government are requesting the Commissioner for Land Revenue (Board Member) to make a special study of the position and submit a report to the Government. Pending study of the Board Member's report, the Government are giving directions to the Collector not to collect the betterment levy in these two taluks. With regard to the question of letting out of water from Lower Bhavani, it is presumed that the reference to letting down of water for irrigation from Lower Bhavani is to the extension of supplies to the current crops. As per existing orders supplies will be given only up to 31st March 1967. It has, however, been represented that cultivation under the canal started late and that therefore extension of supplies for a period of three weeks beyond 31st March 1967 was required. It is proposed to concede the request and give extension of supplies up to 21st April 1967.

## 5. அறிவிப்புகள்

### (அ) அரசாங்க உறுதிமொழிக் குழுவிற்கான நியமனம்

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்**: அடுத்து, பேரவைக்கு தெரிவிக்க வேண்டிய ஒரு அறிவிப்பு உள்ளது.

இந்தப் பேரவையின் 214 (1)-வது விதிக்கு இணங்க கீழ்க் கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழி குழுவுக்கு (கமிட்டி ஆன் கவர்ன்மெண்டு அஷ்யூரன்ஸஸ்) உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. வி. எஸ். கோவிந்தராசன்.
2. திரு. செ. கோ. விசுவநாதன்.
3. திரு. எஸ். முருகையன்.
4. திரு. ஜி. முருகையா சேதுரார்.
5. திரு. எம். அலங்காரம்.
6. திரு. து. ப. அழகமுத்து.
7. திரு. இ. அ. சிதம்பரம் பிள்ளை.
8. திரு. டி. டி. எஸ். திப்பையா.
9. திரு. கே. எஸ். கோதண்டராமய்யா.
10. திரு. எம். அப்துல்கபூர் சாகிப்.

இந்தப் பேரவையின் 215(1)-வது விதிக்கு இணங்க திரு. இ. அ. சிதம்பரம் பிள்ளை அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.





## 6. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி).

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்**: இப்பொழுது கவர்னர் உரையின் மீது விவாதம் தொடர்ந்து நடைபெற வேண்டும். இன்றைக்கு இறுதி நாள் விவாதம். ஆகையால், கடைசியாக வாக்கெடுப்பு நடை பெறவேண்டும், திருத்தங்கள் மீதும், தீர்மானத்தின் மீதும். அதற்கு முன்னால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள். அதற்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றுவார்கள். எனவே, இன்று பேசுகின்ற உறுப்பினர்களுக்கு 10 நிமிடத்திற்கு மேல் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நமது பேரவையின் விதிகள் 205 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பேரவைக்காக இயற்றப்பட்டன. அந்த விதிகளைக் கொண்டு 235 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பேரவையை நடத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். விதிகள் விரைவிலே திருத்தப்பட இருக்கின்றன. அதுவரையிலும் அருள் கூர்ந்து பொறுத்தருளவேண்டும். பத்து நிமிட விதியை இன்றைக்கு அமுல் நடத்துவதற்காக உங்களுடைய மன்னிப்பை நான் கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. ரா. கனகசபை அவர்கள் உரையாற்றுவார்கள்.

**திரு. ரா. கனகசபை**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கவர்னர் உரை தேர்தலுக்குப் பின் முதன்முதலாக அரசாங்கத்தின் சார்பாக கொள்கைகளை வெளியிடுவதற்காக நடத்தப்படுகிற உரை. அதிலே அரசாங்கம் இந்த ஐந்து ஆண்டு காலத்தில் என்னென்ன காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று சொல்வதற்கு வாய்ப்பு இருந்தாலும், அவகாசம் இல்லாத காரணத்தினால், அவர்கள் நாட்டின் முக்கியமான பிரச்னையான உணவுப் பிரச்னையைப் பற்றி அவர்களுடைய உரையிலே அதிகமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல. அது ஒரு நாட்டுப் பிரச்சினை. உணவுப் பிரச்சினையை மக்களுக்கு நல்ல முறையிலே தீர்த்து வைப்பதற்காக அரசாங்கம் அதிலே அதிகமாக கண்ணோட்டத்தைக் காட்டியிருப்பது பற்றி நான் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால், அதே சமயத்தில் இப்பொழுது தீவிர கொள்முதல் பற்றி சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

தீவிர கொள்முதல் எங்கும் இப்பொழுது நடந்துவருகிறது. அதுவும் தஞ்சை ஜில்லா போன்ற இடங்களில் தீவிர கொள்முதல் நடத்திவிட்டதனால் சென்ற ஆண்டு கூட ஜூன் மாதத்தில் அங்கே அரிசி இல்லாமல் பலர் கஷ்டப் பட்டார்கள். தீவிர கொள்முதல் நடத்த வேண்டியது அவசியம். அப்படி நடத்துகின்ற நேரத்தில் அங்கும் விவசாயத்தில் ஈடுபடாத மக்களுக்கு நகர பஞ்சாயத்துக்களிலுள்ள மக்களுக்கு ரேஷன் முறையை அமுலுக்குக் கொண்டு வந்து வைத்துவிட்டால் மிகவும் நலம் என்று நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் இந்த ஆண்டு கூட ஜூன், ஜூலை மாதங்களில் உபரி ஜில்லாவாகிய தஞ்சாவூர் ஜில்லா, சிதம்பரம் தாலூகா

முதலிய இடங்களில் கொஞ்சம் அரிசித் தட்டுப்பாடு நிச்சயம் ஏற்படும் என்று இப்பொழுதே அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன். தீவிர கொள்முதல் நடத்தும்பொழுது மார்க்கெடபிள் சர்பிளஸ் என்னவென்று நிர்ணயிப்பதிலே ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறது. என்னவென்றால், அங்கு நெல் விவசாயம் செய்கின்ற இடங்கள் சில இருக்கின்றன. மற்றும் பல இடங்களில் அங்குள்ளவர்களின் பலர் செலவுக்காக நெல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நம் எல்லைக்கு வெளியிலே நெல் போகாமல் தடுத்திருப்பதினால், அவர்கள் வேறு இடங்களில் வாங்க முடியாது, வெளியிலே போக முடியாது. ஆகவே, அவர்களுக்கு அதிகமாக தொந்தரவு கொடுக்காமல் எடுத்துக்கொண்டால் நல்லது. திரும்பவும் சர்க்கார் விற்கவேண்டிய நிலைமை வரும் என்ற காரணத்தினால். அதிகமாக தொந்தரவு கொடுக்காமல் நல்ல முறையிலே கொள்முதல் செய்து நெல்லை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விலையைப்பற்றி எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றுகூட சொன்னார்கள். கொஞ்சம் விவசாயிகளுக்கு நெல்லுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் கொஞ்சம் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லுக்கு அதிகமான விலை கொடுத்துவிட்டால், விவசாயிகளுடைய கஷ்டம் தீர்ந்துவிடாது. ஏனென்றால் இன்னும் நாட்டிலே பணவீக்கத்தை உண்டுபண்ணும். நெல்லுக்கு விலை அதிகமாகக் கொடுத்த உடனே, மற்ற சாமான்களின் விலை ஏறி, திரும்பவும் இதே பிரச்னை எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். ஆகையால், விலை அதிகமாகக் கொடுப்பதைவிட, விவசாயிகளுக்கு குறைந்த விலைக்கு உரம், மற்ற உபகரணங்கள் எல்லாம் நல்ல முறையில் சரியான காலத்தில் கிடைக்கும்படிச் செய்தால், அது இதைவிட அவர்களுக்கு வசதியாக இருக்கும். நான் அன்று கூட சொன்னேன். கமெர்ஷியல் கிராப் பயிரிடுவதைவிட, நெல் பயிரிட்டால் அதிக லாபம் இல்லை. அமைச்சர் அவர்கள் திண்டிவனம், கன்யாகுமாரி பக்கம் போகும்பொழுது பார்த்தால் பல இடங்களில் நஞ்சை நிலங்களில் தென்னை போடப்பட்டிருக்கும், மற்றும் சில இடங்களில் சவுக்கு முதலியவைகள் போடப்பட்டிருக்கும். நெல் பயிரிடுவதற்குப் பதிலாக அம்மர்திரி மற்ற ஏதாவது பயிர்செய்தால், அவர்களுக்கு அதிக லாபம் வருகிறது, தொந்தரவு இல்லை. ப்ரொக்யூர்மெண்டு தொந்தரவு இல்லை என்ற பல காரணங்களினால், நெல் பயிரிடுவதை மாற்றி மற்ற பயிர்களைச் செய்வதற்கு முற்பட்டுவிடுகிறார்கள் அவர்களுக்கு கொஞ்சம் அதிகமாக மிச்சம் வரும்படியாகச் செய்வதற்கு, விலையை ஏற்றிக் கொடுப்பதால் மட்டும் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடாது. அவர்களுக்கு வேண்டிய உரம், மற்ற சாமான்கள் எல்லாம் நல்ல முறையிலே காலாகாலத்தில் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





உணவுப் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்றால், உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவது தான் உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்குச் சுலபமான வழி. அதற்கு நீண்டகாலத்திய திட்டம் பல இருந்தாலும், குறுகிய காலத் திட்டங்கள் பல இருக்கின்றன. முதலடியாக உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மராமத்து இலாகா, விவசாய இலாகா, கூட்டுறவு இலாகா மூன்றும் எவ்வளவு தீவிரமாக ஒத்துழைப்புக் கொடுக்கிறார்களோ அந்த அளவுக்குத் தான் உணவு அமைச்சர் அவர்களுடைய வேலை கொஞ்சம் சுலபமாக இருக்கும்.

அதில் முதலிலே மராமத்து இலாகா பற்றிச் சொல்லவேண்டும். மராமத்து என்று சொல்லும்போது இன்னொன்றையும் நினைவு படுத்த விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இப்பொழுது இந்த ஃபைனான்ஷியல் இயரை மாற்றப் போவதாக யோசித்துக் மு. ப. 10-00
கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதை காலண்டர் இயர் ஆகவே செய்ய வேண்டும் என்று யோசனையை இந்த சர்க்கார் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மராமத்து இலாகாவைப் பொறுத்தவரையில், மார்ச் 31-ந் தேதி நம்முடைய பட்ஜட் முடிந்த பிறகு ஜூன், ஜூலை உள்ளாக சாகுபடி வேலைகள் நடப்பதற்கு ஏற்றதாக இல்லை. அதன் பிறகு மழை வந்து விடுகிறது. மற்ற வேலைகளும் குந்தகமாகிவிடுகிறது. ஆகவே காலண்டர் மாதமாக வைத்துவிட்டால் விவசாய வேலைகள் நல்ல முறையில் நடைபெற சாதகமாக இருக்கும்.

சிதம்பரம் தாலுகா, தஞ்சை மாவட்டம் முதலிய இடங்களில் சாதாரணமாக சிறு சிறு வேலைகள் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கெல்லாம் பாய்ச்சலைவிட, ட்ரெயினேஜ்தான் குறைச்சல் ஆகவே, 1,000, 500 ரூபாய் செலவில் செய்து முடிக்கக் கூடிய சின்னச் சின்ன வேலைகள் செய்யப் பட்டால், சாகுபடிக்கு சுலபமாக இருக்கும். பல இடங்களில் எரிப்பாசனம் இருக்கும் இடங்களில், பெரிய நிலச்சுவாந்தார்கள், ஊருக்கு மின்சாரம் வந்தும் பம்பு செட்டுகளை வைத்துக்கொண்டு தண்ணீர் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். அப்படிச் செய்யப்படுவதால், ஆற்றிலிருந்து வரும் வாய்க்கால்கள் சரியாக வைக்கப் படவில்லை. அதனால் சிறு சிறு விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அதற்காகத்தான் இம்மாதிரியான சிறு சிறு வேலைகளைப் பரிசிலனை செய்து அரசாங்கமே, குடிமராமத்து சட்டத்தின்கீழ் வேலைகளைச் செய்து உடனடியாகச் செயல் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது மார்ச் 20-ந்தேதி வரையில் மேட்டூரிலிருந்து ஜலம் வந்தது. அப்படித் தண்ணீர் வந்தால், எர்லி குறுவை போடுவதற்கு வசதி குறைவாகப் போய்விட்டது. எல்லா வாய்க்கால்களிலும் அதிகமாகத் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அது எதனால் என்று தெரியவில்லை. அந்த ஜலத்தை சரியான படி விநியோகித்தால், மேட்டூர் ரிசர்வாயரில் தண்ணீர் இருந்து இருக்கும், முன்னாடியே குறுவையைப் போட வசதியாக இருந்திருக்கும்.

அதற்காக அடுத்து, ஏ.டி.டி. 27 நெல்விதையைக் கொண்டு சென்ற ஆண்டு சிதம்பரம் தாலுகாவில் புது முறையாக நாங்கள் செய்தோம். மத்திய பாங்கு ஆதரவில் 25,000 ஏகரில், எரு மற்றவைகளெல்லாம் கொடுத்து, திரும்பவும் நெல்லாக கொள்முதல் வாங்கினோம். ஒரு சிலர் மட்டும் கொடுக்கவில்லை. அப்படி தானியமாக வாங்குவதை ரிசர்வ் பாங்கியும் அனுமதித்து விதி ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருந்தும் எங்களிடம் சிலர் நெல் கொடுக்கவில்லை. சென்ற ஆண்டு துரதிர்ஷ்டவசமாக மழையாலும், வெள்ளத்தாலும் மகசூல் குறைந்து விட்டது. ஆனால் இந்த ஆண்டு அதற்கு மாறாக அதிக மகசூல் கிடைக்கும். ஆகவே இப்பொழுது அதிகமான முயற்சி எடுத்துக்கொண்டு, அந்த ஏ.டி.டி. 27 பயிரை, அது ஒரு குறுகிய காலப்பயிர், பயிர் செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும் போது, கட்டாய முறையாக வசூல் செய்துவிட வேண்டும். இந்தப் புது முறையில் நோய் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதற்காக தாங்களே கூட கட்டாயமாக ஸ்ப்ரேயர், மருந்து இவற்றைக் கொடுத்து, அரசாங்கமே மக்களுக்கு எடுத்துச் சொல்லி, எந்த எந்த முறைகளில் மருந்து தெளித்தால் விளைச்சல் கெடாமல் இருக்கும் என்று எடுத்துச் சொல்லி, உற்பத்தியைப் பெருக்க வேண்டும். 25,000 ஏக்கரிலும் நாங்கள் இந்தத் திட்டத்தை எடுக்கும் போது 25,000 டன் உணவு தானியத்தை அடைய வேண்டும் என்றுதான் செய்தோம். அந்த கண்டிஷன் பேரில்தான் கடன்கள் வழங்கப்பட்டன. 10,000 டன் வரை வசூல் செய்தாகி விட்டது. மீதி உள்ளவர்கள் கொடுக்கவில்லை. அதை இந்தத் தடவை நல்ல முறையில் நடத்தி, முயற்சி எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. நா. கிருட்டிணன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கவர்னர் பெருமகனார் உரையினுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றும் வாய்ப்புக் கொடுத்தமைக்கு என் நன்றியைத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். கவர்னர் உரையில் இந்த நாட்டிலே நடைபெற்ற தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றிருந்து ஆட்சியை மாற்றி அமைக்க வேண்டும் என்று உணர்ந்து செயல் படும் அளவிற்கு மக்களிடம் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கு அந்த விழிப்பிற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் இது விவசாய நாடு. பத்து ஆண்டுகளுக்கு முன்பே நான் பொருளாதாரம் எடுத்துப் படித்தபோதே படித்தேன், இந்த நாடு அத்தகைய நாடு என்று. இந்த நாட்டிலே முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அந்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை விவசாயத் திட்டம் என்றார்கள். பிறகு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்தது. அந்தத் திட்டத்தை தொழில் வளர்ச்சித் திட்டம் என்றார்கள். அதன் பிறகு வந்த மூன்றாவது திட்டத்தை எடுத்தபோது, தொழிலும் விவசாயமும் பெருக



வேண்டும் என்று, இரண்டுக்கும் முக்கியத்துவம் தந்தார்கள். ஆகவே இப்படி நிலையான கொள்கை இன்மையின் காரணமாக உணவுப் பஞ்சத்திற்கே ஏற்பாடு செய்தார்கள் என்று சொன்னால் அது உண்மையிலேயே பொருந்தும். அந்த நிலையை மாற்றி அமைக்கவேண்டும். உணவுப் பஞ்சம் நாட்டில் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் விளைச்சல் இல்லாததால் அல்ல என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. விளைச்சல் குறைவு என்றால் அதற்காக கொள்முதல் செய்ய வேண்டும். அப்படிக் கொள்முதலைத் தீவிரப் படுத்தும் போது, பெரும் முதலாளிகளிடமிருந்து ஆயிரக்கணக்கான மூட்டைகள் பெறப்படுகின்றன. அதிலிருந்து என்ன தெரிகிறது? விளைச்சல் இருந்து இருக்கிறது. ஆனால், முன்னால் இருந்த சர்க்கார் கொள்முதலைச் செம்மையாகச் செய்யாததால், இன்றைக்கு ஆட்சி ஏற்றுக் கொண்டிருக்கும் சர்க்கார் கொள்முதலைத் தீவிரப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்த மன்றத்திலே கேட்கிறார்கள், ஏன் மூன்று படி அரிசி போடவில்லை என்று. அவர்கள் ஆட்சியில் இருந்தகாலத்தில் கொள்முதலைச் சரியாகச் செய்திருந்தால், இன்றைக்கு நிச்சயம் கொடுத்திருக்க முடியும். இன்னொன்றும் சொல்லுகிறார்கள். நெல் பயிரிடுவதற்குப் பதிலாக கரும்பு போன்ற இதர விவசாயம் செய்வார்கள் என்று. அப்படி இருக்குமானால் அதைத் தடைச்செய்ய இந்த அரசாங்கம் உரிய முறையில் சட்டம் கொண்டு வந்து, சட்ட பூர்வமான நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். விவசாயிகளுக்கு உரிய காலத்தில் உரம் வழங்கப்படாவிட்டால், நிலத்தில் கிடைக்க வேண்டிய அளவிற்கு உற்பத்தி இருக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே உர வினியோகம் சரிவர நடைபெற இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உர வினியோகம் செய்ய தனிப்பட்டவர்களுக்கு பர்மிட்டுகள் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட பர்மிட்டுகளால் தான் வினியோகம் நல்ல முறையில் நடப்பதில்லை. ஆகவே, உர வினியோகத்தை ஊராட்சி மன்றத்திற்கும், ஒன்றிப்பு மன்றங்களுக்கும் கொடுத்து விட்டால் அதன் மூலம் சிறந்த முறையில் உர வினியோகம் நடக்க வசதியாக இருக்கும். மத்திய அரசு இந்த மாநில அரசிற்குக் கொடுக்க வேண்டிய அளவு உரம் கொடுக்க வில்லை என்று தெரிகிறது. நடப்பு ஆண்டில் அப்படியிருந்தாலும், வருகிற காலத்திலாவது துண்டு விழாத அளவிற்குக் கேட்டுப் பெற நம்முடைய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கூட்டுறவு முறையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் முறைகளை அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கூட்டுறவு முறையைப் பற்றிக் குறிப்பிடும் போது, நான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் காஞ்சீபுரம் தொகுதியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே நெசவாளர்கள் அதிகம். எங்கள் ஊரில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் அங்கு தயாராகும் நூலை

[திரு. நா. கிருட்டினன்] [1967 மார்ச் 30

அங்கேயே விற்பனை நிலையங்கள் மூலம் நேரடியாக நெசவாளிகளுக்கு விநியோகம் செய்யாமல் தனிப்பட்ட முதலாளிகளுக்கு அவ்வுரிமையைத் தந்து அவர்கள் நூலைப் பதுக்கி வைத்து விலை ஏறுவதற்கு வழி செய்கிறார்கள். அதனால் அந்த நெசவாளர்கள் அவதிப்படுகிறார்கள். அதன் காரணமாக மக்கள் அவதிப்படுகிறார்கள். ரூபாய்க்கு ஒரு படி கொடுத்தாலும், அதை வாங்க அவர்களுக்குச் சக்தியில்லை. அதையும் இன்னும் மற்றவைகளையும் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான்காவது திட்டத்திலே சேலம் இரும்பாலைத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் முயற்சியை நான் வரவேற்கின்றேன். அதை நிறைவேற்றித் தருகின்ற வகையிலே, உரிய பங்கினை இந்த அரசு அவசியம் கேட்டுப் பெற வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

திட்டங்கள் தீட்டப்படுகின்ற நேரங்களில் மாநிலங்கள் சரியாகக் கலக்கப்படவில்லை என்று கவர்னர் பெருமானுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முறையை மாற்றியமைத்து ஆகவேண்டும். திட்டங்கள் நாடு முழுவதற்குமாகத் தீட்டப்படுகின்றன. அப்படித் தீட்டப்படுகின்ற திட்டங்கள் ஒவ்வொரு பகுதிக்கும் நன்மை பயக்க வேண்டுமானால், அந்தந்தப் பகுதியினரை அரசாங்கம் கலந்து அந்தத் திட்டத்தைத் தீட்ட வேண்டும். அந்த முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசியல் சட்டத்தில் மூன்று பட்டியல்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசிற்கு என்று ஒரு தனிப் பட்டியல், மாநில அரசிற்கு என்று ஒரு தனிப் பட்டியல், இரண்டுக்கும் பொதுவான ஒரு பட்டியல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலான அதிகாரங்கள் மாநில அரசிற்கே தரப்பட வேண்டும் என்று இந்த அரசு வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். மாநிலப் பட்டியலில் 'நிதி' என்ற தலைப்பில் உள்ளதிலும் மத்திய அரசாங்கம் தலையிட்டு, "நீ இவ்வளவுதான் செய்யவேண்டும்" என்று வற்புறுத்தும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையில், இந்த அரசு மாநில அரசிற்கு உரிய உரிமையைப் பெற்றுக் காரியமாற்றும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மத்திய நிதி வளத்தைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நிதி வளமானது, எல்லா மாநிலங்களிலிருந்தும் செலுத்தப்படுகிற பங்குத் தொகையைக் கொண்டது தான். அந்த நிதி வளத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் நேரத்தில், அந்தந்த மாநிலத்திற்கு உரிய பங்கினை அவசியம் கேட்டுப் பெற வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1967 மார்ச் 30] [திரு. நா. கிருட்டினன்]

இறுதியாக, கடந்த சட்ட மன்றத்தில் குடியாட்சி மரபுகள் நன்றாக வளர்க்கப்பட்டிருக்கின்றன என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு எதிர்க் கட்சியாக இருந்த நேரத்திலே குடியாட்சி மரபுகள் நன்றாக வளர்க்கப் பாடுபட்டிருக்கிறது. இன்று அதே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய காரணத்தால், மேலும் அதை வளர்த்துக் கட்டிக் காக்கும் அளவிற்கு நாங்கள் நடந்து கொள்ளுவோம் என்று கூறி கவர்னர் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் உரையாற்ற வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

*திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமகனாருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிற முறையில் நான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். அந்த உரை எதைச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், விவசாயத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. விவசாயத் துறை ஒன்றையே அது எடுத்துக் கொண்டிருப்பதாகக் கூடக் கூறிவிடலாம். மற்ற தொழிலாளர்களைப் பற்றியும், தொழில் அதிபர்களைப் பற்றியும் அல்லது வேறு எதைப் பற்றியும் அதிகம் சொல்லவில்லையென்றாலும், அதற்குக் காலம் இல்லை, நேரம் இல்லை என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கவர்னர் உரையின் மீது நேற்று சொற்பொழிவாற்றிய மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள், உணவுத் தானியப் பெருக்கத்தைக் குறித்து விசேஷமாக விவரித்துப் பேசினார்கள். முதலிலே, தஞ்சை ஜில்லாவில் உணவு உற்பத்தி அதிகம் ஆவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும், அடுத்த மகசூலிலே ஒரு லட்சம் ஏக்கருக்கு அதிகமாக, மேலும் ஒரு போகம் சாகுபடி செய்து, நெல் அதிகம் விளையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். இதே சமயத்தில் நானும் ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் தலைமை.)

கோயமுத்தூர் ஜில்லாவிலும் மிக நெருக்கடியான நிலைமை இருக்கிறது என்று நேற்று பேசிய உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். இங்கே சென்னை நகரத்திலே ஒரு படி அரிசி ரூ. 1.50, ரூ. 1.75 என்கிற விலைக்கு மேல் இல்லாதபோது, அதே பட்டணம் படி அரிசி கோவை மாவட்டத்தில் மூன்று ரூபாய், மூன்றரை ரூபாய் அளவிற்கு, அதாவது ஏறக்குறைய இரட்டிப்பு விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறது. கோவை மாவட்ட மக்கள் உணவுப் பொருள்கள் கிடைக்காமல் மிகவும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இப்பொழுது பவானிசாகர் நீர்த் தேக்கத்தில் நிறையத் தண்ணீர் இருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு அந்த நீர்த் தேக்கத்திலிருந்து மூன்று போகம் சாகுபடி செய்வதற்குத்

தண்ணீர் கொடுக்கப்பட்டது. ஆகஸ்டு 15-ந் தேதி அல்லது செப்டம்பர் முதல் தேதியிலிருந்து டிசம்பர் வரையிலும் ஒரு போகம், பிறகு டிசம்பரிலிருந்து மார்ச் வரையிலும் இன்னொரு போகம் என்று இரண்டு போகங்களுக்குச் சாதாரணமாக நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படுவது உண்டு. இன்றைய உணவு நெருக்கடி நிலையை முன்னிட்டு, ஏறக்குறைய நூறு அடிக்கு மேல் தண்ணீர் இருப்பதால், மே முதல் செப்டம்பர் வரையில் அல்லது ஆகஸ்ட் வரையிலுமாவது ஒரு போகத்திற்குத் தண்ணீர் கொடுத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும், விளைச்சலும் அதிகமாகும். அதை நமது அமைச்சரவை அவசியம் கவனித்து, பவானிசாகர் நீர்த் தேக்கத்திலிருந்து இந்த மே மாதத்திலிருந்து தண்ணீர் விடுவதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏடிடி 27 ரக நெல்லுக்கு உகந்த போகம். பனியும் குளிரும் இல்லாத வெளிற்காலமாக இருப்பதால் மகசூல் நன்றாக விளையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

அதே மாதிரி, மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்தும் இன்னொரு போகத்திற்குத் தண்ணீர் கொடுக்கலாம். இப்பொழுது மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தண்ணீர் நிறைய இருப்பதால், கோவை மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் ஓடுகின்ற கால்வாய்கள் வழியாகத் தண்ணீர் விட்டால், அங்கேயும் ஒரு போகம் சாகுபடி செய்யக்கூடிய பூமியில் இரண்டு போகம் சாகுபடி செய்வதற்கான வசதி ஏற்படும். இவைகளையெல்லாம் கவனித்துச் செய்தால் கோவை மாவட்டத்தில் இருக்கும் உணவு நெருக்கடி ஓரளவு தீரக் கூடும். அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். மதிப்பிற்குரிய நமது முதல் அமைச்சர் அவர்கள் தங்களுடைய பேச்சிலே 'ப்ரையாரிடி' என்ற வார்த்தையைப் பல முறை குறிப்பிட்டதற்கு இணங்க கோவை மாவட்டத்திற்கு மேலும் தண்ணீர் வசதியைக் கொடுப்பதற்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் உணவுப் பொருள்களின் விலை விஷம் போல் ஏறிக் கொண்டிருப்பதை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி, மற்ற மாவட்டங்களில் நிலவும் விலையில், அதாவது பட்டணம் படி ரூ. 1.75 என்கிற விலைக்குக் கிடைக்கச் செய்தாலும் எங்களுக்குப் போதும். ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்க வேண்டும், ரூபாய்க்கு இரண்டு படி அரிசி விற்கவேண்டும் என்பது கூட எங்களுடைய பிரச்சினை அல்ல. எங்களுக்கு மற்ற மாவட்டங்களில் அல்லது சென்னை நகரத்தில் வெளி மார்க்கெட்டில் விற்கின்ற விலையின் அளவிற்காவது கோவை மாவட்டத்தில் அரிசி விலை இருக்க வேண்டும். அரிசி விலை இந்த அளவிற்கு அதிகமாக இருந்தால், மக்கள் பிழைப்பதே கஷ்டம். இப்போதே அரைப் பட்டினி, கால் பட்டினி நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். பாலுக்குச் சர்க்கரை வேண்டும் என்று கூடக் கேட்கவில்லை; கூழுக்கு உப்பு வேண்டும் என்று கூடச் சொல்லவில்லை; கூழே இல்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. சோற்றுக்கே பஞ்சம், அன்ன விசாரம் அதுவே விசாரம் பெரிதாக



இருக்கிறது என்பதை நான் மிக அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த நிலைமையைக் கண்டிப்பாக நிவர்த்தி செய்தாக வேண்டும்.

மாவட்டத்திற்கு மாவட்டம் செக் போஸ்ட் இல்லாமல், மாநிலம் முழுவதிலும் உணவுத் தானியம் தடையின்றி போக வசதி இருக்க வேண்டும் என்று நினைக்கும் நேரத்திலே கோயமுத்தூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஈரோடு, பவானி தாலூக்காக்களிலிருந்து மற்ற தாலூக்காக்களுக்கு உணவுத் தானியம் போகக் கூடாது என்ற விதி விதிக்கப்பட்டு, செக் போஸ்ட் வைத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இதனால் மக்களுக்கு மேலும் துன்பம் அதிகமாகிக்கொண்டே போகிறது. இவைகளையும் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய அமைச்சரவை முற்பட வேண்டும்.

நேற்று மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் பேசும் போது, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்டைப் பலப்படுத்துவது, ரெவின்யூ போர்டை விஸ்தரிப்பது அல்லது அந்த போர்டுக்கு அதிக வேலை கொடுப்பது போன்ற பல திட்டங்களைச் சொன்னார்கள். அதே சமயத்தில், இப்பொழுதுள்ள கட்டாயக் கொள்முதலோ அல்லது பங்கீட்டு முறையோ தற்காலிகமானதுதான், இதை யாரும் எப்போதுமே நிலைக்கச் செய்ய வேண்டுமென்ற ஆசை இல்லை என்றும் சொன்னார்கள். 1952-ம் ஆண்டிலே இருந்த நிலை இன்று நமது மாநிலத்திலோ அல்லது நாட்டிலோ இல்லாததனால்தான் இன்று பங்கீட்டு முறையைத் தற்காலிகமாக மேற்கொள்ளுகிறோம் என்றும் சொன்னார்கள். ஆனால், அதே சமயத்தில், விசாரணை செய்ய அதிகாரிகள் நியமிக்கப்படுவது, இதற்காக ஸிவில் ஸப்ளைஸ் டிபார்ட்மென்டைப் பலப்படுத்திக் கொண்டு போவது, இன்னும் பெரிய பெரிய "காமதேனு", "சிந்தாமணி" போன்ற சூபர் மார்க்கெட்டுகளை விரிவுபடுத்திக்கொண்டு போவதெல்லாம் அவசியம் தானா? இதனால் நம்முடைய வரிப் பணம் எவ்வளவு வீணாகிறது, விரயமாகிறது என்பதையெல்லாம் யோசித்து, ஓரளவு அந்தத் திட்டங்களைத் தளர்த்துவதற்கு செலவினங்களையெல்லாம் குறைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். கொள்முதல் என்பது தற்காலிக ஏற்பாடுதான் என்றால் அடுத்த ஜூன் அல்லது ஜூலை மாதத்திலாவது இந்தக் கொள்முதல் திட்டத்தை தளர்த்த வேண்டும், எவ்வளவு விரைவில் அதைத் தளர்த்த வேண்டுமோ அவ்வளவு விரைவில் அதைத் தளர்த்த வேண்டும், பங்கீட்டு முறையையும் தளர்த்தவேண்டும். அதல்லாமல், சர்க்காரே வியாபாரம் செய்கிற நிலை வந்தால் பெரிய தொல்லையும் கஷ்டமும் ஏற்படும் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

குஜராத்தி பாஷையில் ஒரு பழமொழி உண்டு. அதன் மொழி பெயர்ப்பை கீழே கொடுக்கிறேன். "அரசு வாணிகம் செய்ய முற்பட்டால் குடிமக்கள் பிச்சை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்" சற்றேறக்குறைய சரியான மொழி பெயர்ப்பைத்தான் கொடுத்திருக்கிறேன். அந்த நிலையில்தான் இன்றைய சர்க்கார் இருந்து கொண்டிருக்கிறது. நெசவாளர்களுக்கு வேலை கிடைப்பதில்லை.

அவர்கள் எல்லா வகையிலும் கஷ்டப்படுகிருர்கள். வேலை கிடைத்தாலும் உணவுப் பண்டங்களை வாங்குவதற்கு அவர்களால் முடியவில்லை. கூடுமான வரையில் நாமே வியாபாரத்தை மேற்கொள்வது அல்லது சரக்கை விஸ்தாரமாக வழங்க, ஒருசிலருக்கு மட்டும் லைசென்ஸ் போன்றவைகளை வழங்கி வியாபாரம் செய்ய அனுமதிப்பது சரியல்ல. சரக்கு நயமோ, சுத்தமோ இல்லாது—சரக்கு முடுக்கில்லாது—'செட்டி முடுக்கு' என்ற நிலையில் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றவர்களிடத்தில்தான் பொருள்களை வாங்க வேண்டிய நிலையில் வைத்துவிடக் கூடாது. இத்யாதி காரணங்களினுல்தான் இந்த அரசாங்கம் அவசியம் வியாபாரத்தை தற்காலிகமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு துறையிலும் நாம் கட்டுப்பாட்டை மிக அதிகமாகப் பலப்படுத்திக்கொண்டே போனுல் மக்களுடைய கை கால்களை கட்டிப் போடுகின்ற நிலைக்கு மக்களுக்கு கஷ்டமே வந்துவிடுகிறது. மக்களுக்கு சுயநிலை, சுய அறிவு, சுயாட்சி என்பது இருப்பதில்லை. அதற்கு ஒரே ஒரு திருஷ்டாந்தத்தை மட்டும் இங்கு கூறுகிறேன். நம்முடைய தேசப்பிதா 1925-ல் ஒரு கருத்தைச் சொன்னுர். அதை மட்டும் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். "அந்நிய சர்க்காராக இருந்தாலும், தேசிய சர்க்காராக இருந்தாலும் சர்க்காரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுவதற்காக இடைவிடாது செய்யும் முயற்சியே சுயாட்சி ஆகும். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தால் சுயாட்சி என்பது பரிதாபத்திற்குரிய விஷயமாகவே முடியும்". அந்த அளவில்தான் முன் இருந்த சர்க்காரும் இருந்தது. இன்று அதையொட்டியே போகிற இந்தச் சர்க்காரின் உத்தரவுகள் மக்களுக்கு இருக்கின்ற கட்டுப்பாடுகள் அப்படியே கொஞ்சம் அதிகமாகக்கூட இருந்துவர வழி வகுத்திருக்கிறது. அதை எப்படியும் தளர்த்தி, விரைவில் சுயாட்சி பெற்று, மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், இந்த அவைக்கும் என்னுடைய இதயங் கலந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் 'நடந்து முடிந்த பொதுத் தேர்தலைப்பற்றியும், உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றியும், நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றியும், உணவுச் சிக்கலைப்பற்றியும், நாட்டின் முன்னேற்றம் காண புத்தாட்சியின் புதுக்கொள்கையைப்பற்றியும் திட்டவட்டமாக நல்ல நம்பிக்கையூட்டும் வகையில் தம் உரையை ஆற்றியிருக்கிருர்கள். அவர்கள் ஊட்டிய நம்பிக்கைக்கு ஆதாரமாகத்தான் நம்முடைய அரசு, சிறப்பாக நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் சிறப்பான பல திட்டங்களை மெதுவாகச் செய்யும் என்ற ஆணித்தரமான உறுதியை இந்தப் பேரவையில் தந்திருக்கிருர்கள். எனக்கு முன்னுல் பேசிய எதிர்க்





கட்சி உறுப்பினர்கள், கவர்னர் அவர்களின் உரையைத் திட்டவட்டமாக, வரிவரியாக ஆராய்ந்து படிக்காத காரணத்தால், பல குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். நீங்கள் கூறிய அத்துணை குறைபாடுகளும் நீக்கப்படும் என்ற உறுதியை கவர்னர் அவர்கள் தம் உரையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் இன்றைய நிலையில் நாம் செய்ய வேண்டிய சிறந்த செயல் உணவு உற்பத்தியைப் பெருக்குவதுதான். உணவு உற்பத்திக்கு இன்றியமையாத திட்டம் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றுதான். நம்முடைய நாட்டில் விளைநிலம் அதிகமாக இருக்கின்றன. பயன்படுத்த முடியாத காட்டு நிலம் அதிகம் இருக்கின்றன. தண்ணீரே பார்க்காத வறட்சி நிலம் ஏராளமாக இருக்கின்றன. அத்துணை நிலங்களையும் விளைநிலமாக ஆக்குவதற்குத் தலைச்சிறந்த சாதனம் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றேதான். அந்த மாபெரும் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு முழுவதும் மத்திய அமைச்சரவையின் கையிலே இருக்கிறது. ஆகவேதான் மாநில அரசு நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தயங்கித் தடுமாறிக் கொண்டிருக்கிறது. இதைப் போக்க, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மத்திய அரசுக்கு தங்களுடைய கருத்தை எடுத்துக்கூறி, ஆவன செய்யவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை மூன்று வழிகளில் நிறைவேற்றலாம். ஆற்றிலே கிடைக்கும் நீரைப் பல்வேறு பகுதிக்கு எடுத்துச் சொல்லலாம், மழைக் காலங்களில் வீணுகும் நீரை மேட்டுப் பகுதியில் செலுத்தி ஆவன செய்யலாம்; ஊற்றுநீரைப் பயன் படுத்தி முக்கிய திட்டங்களைச் செய்யலாம். இந்த மூன்று வகையான நீர்ப்பாசனத் திட்டங்களையும் செய்தால், ஏராளமான நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெற்றுவிடும். இதன் மூலம் நிச்சயமாக நமது நாடு வளம் பெறும். நீரையே காணுத நிலங்களில் பயிரிட ஏதுவாகும். என்னுடைய தொகுதி கரூர் வட்டத்தில் குடகனுறு திட்டம்பற்றி பல ஆண்டுகளாக பேசப்பட்டு வந்தது. இன்றுவரை அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. இந்த ஒரு திட்டத்தினுல் என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 50 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள். ஏறத்தாழ 1 லட்சம் ஏக்கருக்கு மேல் விளைநிலங்களாக மாறும். இந்தத் திட்டத்தினுல் தண்ணீர் காணுத குளங்களில் தண்ணீர் நிரம்ப வழியேற்படும். தண்ணீர் இல்லாத கிணறுகளில் நல்ல ஊற்று நீர் ஏற்பட வழி உண்டாகும். அதனுல் விளைநிலம் பெருகும். இந்தத் திட்டத்தைப்பற்றி நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணுநிதி அவர்கள், 1957-ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், "எங்களுக்குத் தேவையானது குடகனுறு திட்டம் ஒன்றேதான். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் நான் என்னுடைய உறுப்பினர் பொறுப்பை

கூட ராஜினாமா செய்யத் தயார்" என்று மிக அருமையாக எடுத்துக் காட்டினார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும் வகையில் அவரே அந்தப் பொறுப்பில் இருக்கிறார் என்று எண்ணும்போது மிகமிக மகிழ்ச்சியடைகிறேன். அவருடைய காலத்தில் இந்தத் திட்டம் நிறை வேற வேண்டுமென்றுதான் என்னுடைய தொகுதி மக்கள் பேராவலுடன் எதிர்பார்க்கிறார்கள். என்னுடைய தொகுதியில் வெள்ளியணை பகுதி மக்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், 'உண்ண உணவில்லை—கொடுங்கள் என்று கேட்கவில்லை, உடுக்க உடையில்லை—கொடுங்கள் என்று கேட்க வில்லை, அவர்கள் கேட்பதெல்லாம் குடிதண்ணீர்தான். இந்த குடகனாறு திட்டம் நிறை வேறினால் அங்குள்ள மக்களின் பிரச்சினை தீரும், விளைநிலம் பெருகும், உழவர்களின் பிரச்சினையும் தீரும் என்ற யோசனையை இந்தப் புதிய அரசாங்கத்திற்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட மறந்தால், அது என்னுடைய தொகுதி மக்களுக்கு நான் இழைத்த துரோக மாகும். நான் என்னுடைய தொகுதியில் சின்னமநாய்க்கன்பட்டி என்ற பகுதிக்குச் சென்றிருந்த நேரத்தில், மக்கள் பலர் ஓடோடி வந்தனர். அவர்கள் என்னைப் பார்த்து 'இந்தக் கேணியைப் பாருங்கள் என்றார்கள். நான் கேணிக்கு அருகில் சென்று பார்க் கும்போது பல அடி ஆழம் பாடுபட்டு தோண்டிய கேணியில் நீரே இல்லை. சுற்று வட்டத்திலும் இதே நிலைமைதான் இருக்கிறது. கடந்த இருபதாண்டு காலமாக காங்கிரஸ் ஆண்டபோது மக்களின் குடி தண்ணீர் பிரச்சினைகூட தீர்க்க முடியாமல் இருந்து வந்திருக் கிறது. நம்முடைய பாசனத் திட்டத்தைப் பெருக்கினால்தான் உழவர்களின் வாழ்வு மலரும், விளைநிலம் பெருகும், உற்பத்தியைப் பெருக்க முடியும். உற்பத்தியைப் பெருக்க முதன்மையான வழி நீர்ப்பாசனத் திட்டம்தான்.

என்னுடைய தொகுதியில் பஞ்சப்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அது 'பஞ்சப்பட்டியோ' என்று நினைக்கும் அளவுக்கு அங்கு பஞ்சம் நிறைந்திருக்கிறது. அதைப் போன்ற பகுதிகள் நிறைய இருக்கின்றன. அங்கே இருக்கும் மாபெரும் ஏரியில் ஆண்டு தோறும் மழைக் காலத்தில் நீர் வழிந்து வீணாகப் போய்விடுகிறது. நீர் நிறைய இருந்தும் அதைப் பயன்படுத்த முடியாமல் மக்கள் இருக்கிறார்கள். வயலூர் என்ற பகுதியில் சிறிய அணை ஒன்றைக் கட்டி, பல கண்மாய்களை ஏற்படுத்தித் தந்தால், அந்தப் பகுதியிலுள்ள பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு, அங்குள்ள மக்கள் பயன் அடைய வழி இருக்கிறது. விவசாயப் பெருநாடாகிய நம் **தமிழ்** நாட்டில் நீர்ப்பாசனத் திட்டத்திற்கு முதன்மையான இடம் தரப்
10-30 படவேண்டுமென்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.
மு.ப. வள்ளுவப் பெருந்தகையார்

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு



என்று குறிப்பிட்டுள்ளார்கள். இன்றைக்கு தக்கார்—சான்றோர் கள் ஆட்சியிலே அமர்ந்து இருக்கிறார்கள். தள்ளா விளையுள்—குன்றாத விளையுளைச் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கத்தை நாம் அளிக்க வேண்டும். தாழ்விலாத செல்வர்களாக விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வதற்கு நாம் எல்லா வகையான நீர்ப்பாசன திட்டங்களையும் அமைத்துக் கொடுத்தாகவேண்டும். ஆகவே நாட்டில் உணவுப் பஞ்சம் நீக்கப்பட வேண்டுமானால் அதற்கு முதற்கண் நீர்ப்பாசனத் திட்டம்தான். சிறிய சிறிய ஆற்று நீரை எல்லாம் காட்டுப் பகுதியில் திருப்பி, காட்டு நிலங்களை நல்ல விளைநிலங்களாக நாம் மாற்றியாக வேண்டும். மேலும் மழை காலங்களில் கடலில் கலக்கும் நீரைத் தேக்கி மேட்டுப் பகுதி களுக்குத் திருப்பிவிட்டால் அதன் மூலம் நீர் காணாது இருக்கிற மேட்டுப் பகுதிகளை எல்லாம் வளமுள்ள பகுதியாக்க நிறைய வாய்ப்பு இருக்கிறது. இப்படி நீர்ப்பாசனத் திட்டத்தை விரிவு படுத்தி, ஏரிகளை ஆழப்படுத்தி, சிறு சிறு ஆற்று நீரை ஏரி, குளம் குட்டைகளுக்குத் திருப்பி விட்டால் உணவுப் பற்றாக்குறை கண்டிப்பாக நீங்கிவிடும் என்பது எனது தாழ்மையான அபிப் பிராயம். இந்தக் காரியங்களில் நம் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்பதாக கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் நமது அரசாங்கம் பிற்பட்ட பகுதிக்கு அதிக மானியம் ஒதுக்கி, ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக சலுகை அளித்து அந்தப் பகுதிகள் முன்னேற்றம் அடைய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த விவாதத்திலே பங்கு கொள்ள எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக சட்டமன்றத் தலைவ ருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*** திரு: கோ. பாரதி மோகன்:** அவை துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இங்கே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தற்காக தங்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்றையதினம் நம்முடைய நாட்டிலே ஒரு விஷயத்தைப் பிரதானமாகக் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். காங்கிரஸ் அரசாங்கம் இந்த நாட்டிலே முன்பு ராம ராஜ்யத்தைப் பற்றியும், நிர்மாணத் திட்டங்களைப்பற்றியும் பேசிக்கொண்டு வந்தது. இந்த நாடு சுதந்திரம் அடைந்த பிறகு உலகம் பூராவிலும் சோஷலிசக் கருத்து செல்வாக்கு பெற்றிருப்பதைத் தெரிந்து கொண்டவுடன் தங்களுடைய நிர்மாணத் திட்டங்களை மாற்றிக் கொண்டு சோஷலிசம் என்று பேசியது. என்றாலும் கடந்த இருபது ஆண்டு காலங்களில் சோஷலிசம் என்ற அடிப்படையில் நிலப் பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகியவற்றை ஸ்தாபிக்க வேண்டுமென்றுதான் உறுதியாகச் செயல்பட்டு வந்திருக்கிறது. இந்த நாட்டு மக்களின் அபிப்பிராயம் முழுவதும் இதை எதிர்த்து மாறுபட்டு வருவதைக் கண்டவுடன் அந்த சோஷலிசத்தைக்

கலப்படம் செய்வதற்கு—ஜனநாயக சோஷலிசம் என்று பெயரை மாற்றிப் பேசினார்கள். இந்த நான்காவது பொதுத் தேர்தலில் இவர்களது ஜனநாயக சோஷலிசம் என்ற கொள்கை அடியோடு முறியடிக்கப்பட்டுவிட்டது. ஜனங்கள் அவர்களையே தூக்கி எறிந்துவிட்டார்கள். நேற்று பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இந்தக் கடைசி நேரத்திலும்கூட அதற்கு மாற்றுக் கட்சியாக வந்திருக்கக்கூடிய நம் தலையில் அவர்களது போர்டைத் தூக்கி வைக்க முயற்சி செய்கிறார்கள். நம்முடைய விஞ்ஞான சோஷலிசம்தான் இந்த நாட்டுக்குச் சரியானது என்பதை நாம் நிர்மாணித்தாக வேண்டும். மக்கள் அரிசிக்காகப் போராடினார்கள். அரிசி வேண்டுமென்று கோரினார்கள். அரிசி பிரச்சினைதான் அரசியல் பிரச்சினை என்றும்கூடச் சொன்னார்கள். மகத்தான பிரஞ்சுப் புரட்சியின் அடிப்படையே ரொட்டிப் பிரச்சினைதான் என்பதை எல்லோரும் அறிவார்கள். ரொட்டிப் பிரச்சினைதான் அங்கு அரசியல் பிரச்சினையாயிற்று. இங்கு அரிசிப் பிரச்சினை அரசியல் பிரச்சினையாக இருந்தாலும் தவறு என்ன?

இன்றைக்கு நாட்டு மக்களிடையே முதன்மையாக இருப்பது "பொருள் முதல்வாதமா" அல்லது "கருத்து முதல்வாதமா" என்று பார்க்கவேண்டும். கருத்தை முதல்வாதமாகக் கொண்டு காங்கிரஸ் ஆட்சி தோல்வியுற்றிருப்பதை நாம் அறிவோம். ஆக "பொருள் முதல்வாத" மாகக் கொண்ட நமது விஞ்ஞான சோஷலிசம்தான் நிர்மாணிக்கப்பட்டாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, விஷயத்திற்கு வருகிறேன். நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன். அங்கே உள்ள நிலங்களை எப்படி ஒரு போகத்தை இரண்டு போகமாக ஆக்கலாம், இரண்டு போகத்தை மூன்று போகமாக ஆக்கலாம் என்பதுபற்றி கவனம் செலுத்தலாம். ஆனாலும், ஒரு விஷயத்தைப் பிரதானமாக வைத்துக் கவனிக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது. வெள்ளம் வரும் அல்லது வறட்சி வரும். மேட்டூர் அணையை மட்டும் நம்பி காலாகாலத்தில் சாகுபடி செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது. ஆக உணவு உற்பத்திக்காக நாம் விரிவான திட்டங்களை அமைக்கிறபோது மேட்டூர் அணையை மட்டும் நம்பி விவசாயம் செய்ய முடியாது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். ஆக அங்கே விவசாயம் நல்ல முறையில் செய்யப்பட வேண்டுமென்றால் பெரிய பெரிய பம்பு செட்டுகளை எல்லாம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அவற்றையும் பெரிய பெரிய நிலப் பிரபுக்களுக்குக் கொடுக்காமல் வாய்க்கால்களின் தலைப்பில் வைத்து பொதுவாக அவை இயங்க ஏற்பாடு செய்தால் அந்த வாய்க்காலை ஒட்டியுள்ள எல்லா விவசாயிகளுடைய நிலங்களுக்கும் பாசன வசதி ஏற்படும். கிராமத்தில் உள்ள அத்தனை பேரும் சாகுபடி செய்ய முடியும் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.





இன்றையதினம் விவசாயிகள், விவசாயிகள் என்று பொதுப் படையாகவே கூறி வருகிறார்கள். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இன்றையதினம் நிலம் வைத்திருப்பவர்களைக் காட்டிலும் சாகுபடியாளர்கள்தான் அதிகம். அவர்களுக்கு என்று சொந்த நிலம் கிடையாது. குத்தகைக்கு நிலத்தை எடுத்துப் பாடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு பம்பு செட்டு கொடுப்பதே இல்லை. சாகுபடியாளர்களுக்குப் பம்பு செட்டு கொடுத்தால்தான் சாகுபடி பெருகும். இன்றைய தினம் எங்கள் மாவட்டத்தில் உள்ள தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய மடங்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு மடத்திற்கும் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலம் இருக்கிறது. அந்தத் திமிங்கிலங்களுக்குச் சொந்தமான நிலங்களை இந்தச் சர்க்கார் தங்களுடைய நேரடிப் பொறுப்பில் எடுத்துக் கொண்டாக வேண்டும். அவர்களின் மூலம் பல லட்சக் கணக்கான பணம் விரயமடிக்கப்படுகிறது. அங்கு இருக்கிற பண்டார சந்நிதிகளை எங்காவது குடிசையைக் கட்டிக் கொடுத்து வேத வேதாந்த விசாரம் செய்ய அனுப்பிவிட்டு, அந்த மடங்களின் சொத்துக்கள் பூராவையும் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சாகுபடியாளர் சட்டம், பண்ணையாள் பாது காப்புச் சட்டம் என்று பல வகையான சட்டங்கள் இருக்கலாம். அவற்றை எல்லாம் ஒன்றாக்க வேண்டும். 1957-க்கு பிறகு ஏற்பட்டுள்ள நியாயமற்ற பாகப்பிரிவினைகள் எல்லாவற்றையும் ரத்து செய்யவேண்டும். பெயர் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உடையவர்கள் எல்லாம் பத்து ஏக்கர், ஐந்து ஏக்கர், 30 ஏக்கர் என்பதாக பொய்யாக பாகப் பிரிவினை செய்து வைத்திருக்கிறார்கள். அவற்றை ரத்து செய்தாலே நிறைய நிலம் கிடைக்கும். அந்த நிலங்களை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு, சாகுபடியாளர்களுக்குக் கொடுக்கலாம். தரிசு நிலங்களை ஏழை விவசாயத் தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டும். காரணம் மனித உழைப்பு இருந்தால்தான் உற்பத்தி பெருகும். நாம் டிராக்டர்களை கொடுக்கலாம், பம்பு செட்டுகள் வைக்கலாம், நவீன இயந்திரக் கலப்பைகளைக் கொடுக்கலாம். ஆனால் மனித உழைப்பு அவற்றோடு சேர்ந்தால்தான் உற்பத்தி பெருகும். நிலம் அற்ற ஏழை விவசாய தொழிலாளிகளின் கையில் நிலம் கொடுக்கப்பட்டாக வேண்டும். இதை ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, மூன்று முறை சிவப்பு மையினால் அடியில் கோடிட்டுக் காட்டுகிறேன். இந்த விஷயத்தில் இந்த அமைச்சரவை கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திட்டக் கமிஷனைப் பொறுத்தவரையில் இரண்டாவது திட்டக் கமிஷன் என்று நான் நினைக்கிறேன், அந்தத் திட்டக் கமிஷன் இந்த நாட்டிலே உள்ள நிலச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக சில சிபார்சுகளைக் கொடுத்திருக்கிறது. அதற்காகப் போடப்பட்ட நிலச்சீர்திருத்த உப குழு திட்டக் கமிஷனிடம் நிலச்சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட சிபாரிசைக் கொடுத்திருக்கிறது. ஆனால், அவற்றை இன்னும் அமலுக்குக் கொண்டுவரவில்லை.

அவற்றை உடனடியாக அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று நமது ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் தஞ்சையிலே இருக்கிற நிலைமை விளைவை எல்லாம் நாசமாகியிருக்கிறது. இப்பொழுது அங்கேயிருக்கிற குத்தகை சாகுபடியாளருக்கு பாக்கி இருக்கிறது. அதற்காக முனிசீப் கோர்ட்டிலே போட்டு டிகிரி வாங்கி வைத்திருக்கிறார்கள் சாதாரணமாக, வைத்திருக்கக்கூடிய மாட்டை, ஆட்டுக் குட்டியை, மற்ற மற்ற பண்ட பாத்திரங்களை யெல்லாம் கூட ஜப்தி செய்யப்படுகிற நிலைமை இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொடுக்கப்பட்ட கடனுக்காகவும் இன்றைய தினம் வீட்டுக்கு வீடு ஜப்தி செய்யப்படுகிறது. இதனால் தஞ்சை மாவட்டம் ஒரு கொந்தளிப்பான நிலையில் இருக்கிறது. பழைய நினைவிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் இன்னும் அங்கே இருக்கிறார்கள் என்று நான் சந்தேகிக்கிறேன், உறுதியாகச் சொல்ல முடியாது. ஆகவே இப்பொழுது சூட்டோடு சூடு ஏறிக் கொண்டிருக்கின்ற நிலைமையிலே அவர்கள் ஜப்தியையும் செய்து நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்கு நிறைய மனுக்கள் வந்திருக்கின்றன; நான் அவற்றை அமைச்சரவைக்கு கொடுத்திருக்கிறேன். அங்கே சாகுபடியாளருக்கு இருக்கின்ற குத்தகை பாக்கி தள்ளுபடி செய்யப்பட வேண்டும். கோயில், மடங்களில் உள்ள நிலங்களுக்கான பாக்கியையும் தள்ளுபடி செய்யவேண்டும். சிறு நிலச் சுவான்தார்கள் கஷ்டப்படாமல் இருக்க அவர்களுக்கும் பாக்கியை ஒத்தி வைக்க வேண்டும். பெரிய நிலச்சுவான்தார்களுக்கு கொடுக்க வேண்டிய குத்தகையையும் தள்ளுபடி செய்யவேண்டும், என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அடுத்தப்படியாக டிரஸ்டி முறை இருக்கிறது, இதிலே ஒரு கோவிலுக்கு ஒரு கட்டளைத் தம்பிரான் இருக்கிறார். அதற்குப் பிறகு ஒரு டிரஸ்டி இருக்கிறார். அம்மாதிரி இல்லாமல் இருப்பதற்காக இந்த டிரஸ்டி முறையையே மாற்றி முறையாகக் கவனிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேரெழுந்தூரிலே கம்பர் விழா நடந்து வருகிறது. அது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக கட்சி விழாவாக அரசியல் விழாவாகத்தான் நடந்தது. அதிலே நாங்கள் தலையிட்டு இலக்கிய விழாவாக மாற்றினோம். இப்பொழுது இந்த ஆண்டு காங்கிரஸ் கட்சியினர் தலையிட்டு அதை நடத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். இந்தத் தடவை நாங்கள் முதல் அமைச்சரையோ அல்லது கல்வி அமைச்சரையோ அழைக்க வேண்டுமென்று சொன்னோம். அந்தக் காரணத்தாலே அவர்கள் அதைச் சுருக்கமாக நடத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்காக கோவில் அறநிலையப் பாதுகாப்புப் பணமும் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதற்காக அதிலேயிருந்து 5,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாக தெரி





கிறது. இதை அறநிலைய அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே கம்பருக்கு கம்பர் மேட்டில் ஒரு சிலை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது அது அரசியல் விழாவாக தேரெழுந்தூரில் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். கம்பன் எல்லாவற்றிற்கும், அரசியலுக்கும் அப்பாற்பட்டவனாக இருக்கிறான். அந்தக் குழுவிற்கு அடியேன் தான் தலைவராக இருக்கிறேன். முதலமைச்சராக இருந்தாலும், கல்வியமைச்சராக இருந்தாலும், அவர்களை அழைப்பதை நான் வரவேற்கிறேன். கம்பன் உலகத்திற்கே பொதுவானவன், ஆகவே, இதைக் குறுகிய நோக்கத்தோடு கவனிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கோ. ஆர். கோவிந்தன் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை வரவேற்று அதை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக, நடந்து முடிந்த தேர்தல் நல்ல முறையில் நடைபெற்றிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது உண்மைதான் என்றாலும், ஒரு சில இடங்களில் நடைபெற்றதை வைத்துப் பார்த்தால், சென்று மறைந்த காங்கிரஸ் ஆட்சியில் காங்கிரஸ் நண்பர்கள் எல்லாம் அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அராஜகமான, இழிவான செயல்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் சொல்லாமல் இருக்கமுடியாது. ஆனால் அவர்கள் செய்த இந்த அராஜகத்தால்தான், இழிவான செயல்களால்தான் அதைப் பார்த்துப் பொறுக்க முடியாத மக்கள் பெருவாரியான வாக்குகளை நமக்கு அளித்து அமைச்சரவை அமைப்பதற்கேற்ற அளவில் ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

மாவட்ட ரீதியில் பார்க்கும்பொழுது சேலம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதை தமிழகம் அறிந்திருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்த ஆளுங்கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த நன்மையான காரியத்தையும் செய்யவில்லை சேலத்திலே. 20 ஆண்டுகளாக சேலம் பின்தங்கித்தான் இருக்கிறது. அதிலும், குறிப்பாக, தாரமங்கலம் தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அங்கே சிறு சிறு நிலச்சுவான்தார்கள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலைமைதான் இருக்கிறது. ஆகவே அங்கே உணவுக் கொள்முதல் திட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். தாரமங்கலம் நகர்ப்புறத்திலோ, மேச்சேரி நகர்ப்புறத்திலோ பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் இல்லை, ஆகவே ஒரு பெண்கள் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்தித் தருவார்கள் என நம்புகிறேன். மேச்சேரியிலே அல்லது மேட்டூரிலோ ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான வசதிகள் இருப்பதன் காரணத்தால் அங்கே

ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேச்சேரி நகரத்திலே உள்ள மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அங்கே பக்கத்தில் உள்ள நங்கவல்லி என்ற இடத்திலிருந்து குடிநீர் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நிச்சயமாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கையும் நான் கொண்டிருக்கிறேன். சென்ற பத்து ஆண்டுகளாகவே காவேரியிலிருந்து அங்கே பைப் லைன் மூலம் தண்ணீர் கொண்டு வந்து விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்துதர வேண்டுமென்ற திட்டம் பேச்சு அடிப்படையிலேதான் இருந்து வந்திருக்கிறது. செயல் முறையிலே நிறைவேற்றப்படவில்லை, சென்று மறைந்த அரசாங்கம் அதைச் செய்துதரவில்லை, ஆனால் நம்முடைய அரசாங்கமாவது அதைச் செயதுதரும் என்று நம்புகிறேன். நெசவாளர்கள் மேச்சேரியிலும், தாரமங்கலத்திலும் அதிகமாக இருக்கும் காரணத்தினால் விலைவாசியும் அதிகமாகி விட்ட காரணத்தினாலே அவர்கள் உணவிற்காக மிகவும் கஷ்டப்படுகின்ற காரணத்தினாலே நூல் விலையை நிர்ணயம் செய்து அந்த விலைக்கு மேல் விற்கும் வியாபாரிகளை கண்டுபிடித்து கோர்ட்டு மூலம் அவர்களை தண்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியப் பெருமக்களுக்கு இந்த அரசாங்கம் நகர அவைக் குழு, புத்தகக் குழு, பஞ்சாயத்து யூனியன் குழு போன்றவற்றிலே பங்கெடுத்துக்கொள்ள எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** கனம் துணைச்சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் உரையின்மீது ஒரு சில, வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அமைந்தவுடனே கவர்னருடைய உரை நல்ல முறையில் இருக்குமென்று நினைத்தேன். ஆனால் அதற்குப் பதிலாக என்னைப் போன்ற ஊழியர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி அரசாங்கமானது இந்த நாட்டுக்கு என்னென்ன நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமோ அத்தனை காரியங்களையும் செய்திருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில்கூட அதை உணர்ந்திருக்கிறார்கள்.

விவசாயிகளுக்காக முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலிருந்தே நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆறுகளிலும் அணைகளைக் கட்டியிருக்கிறது. இனி அணை கட்ட ஆறுகளே இல்லை என்ற நிலைமையால் எல்லா அணைகளும் கட்டியாகிவிட்டது. இப்போது வந்திருக்கிற அரசாங்கம் அணைகளைக் கட்ட வேண்டுமென்று நினைத்தாலும் ஆறுகள் இல்லை. ஆறுகளைத் தேடிக் கொண்டிருக்கிறது.





**மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி:** இனி எந்த அணையையும் கட்ட வேண்டாமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா ?

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** காங்கிரஸ் அரசாங்கம் செய்ததைத்தான் சொல்கிறேன். விவசாயிகளுக்கு நல்லது செய்வதற்காகத்தான் இந்த அணைக்கட்டுத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தஞ்சைக்கு இணையாக வட ஆற்காடு மாவட்டத்தில் விளைச்சல் பெருகியிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் காங்கிரஸ் அரசாங்கம். ஏராளமான பம்ப் செட்டுகளையும் மின்சாரத்தையும் கொடுத்து பூமிக்கடியில் இருக்கும் நீரைப் பயன்படுத்திக் கொள்ள வசதி செய்து கொடுத்ததுதான். இவ்வாறு காங்கிரஸ் அரசாங்கம் நம்முடைய நாட்டுக்குத் தேவையான அத்தனை காரியங்களையும் செய்து இருக்கிறது என்பதை மக்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தாய்-மொழி, தமிழ் தமிழ் என்று சொல்லிக் கொண்டே மக்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்து விடலாம் என்றோ, செய்து விட்டதாகவோ நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழி சோறு போடுகிறதா ? அரிசியை வைத்து அரசாங்கத்தைப் பிடித்த திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு வேண்டிய காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்களா ? மூன்று படி அரிசி, இரண்டு படி அரிசி என்று பேசியதற்கு நிச்சயமான ஒரு வழியைக் கண்டு பிடியுங்கள். திட்டம் போட்டுச் செயலாற்றுங்கள். ஒரு கமிட்டி அமையுங்கள். வெளியிலும் படித்தவர்கள் இருக்கிறார்கள், விஷயம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் ; காங்கிரஸ் கட்சியிலும் அறிவாளிகள் இருக்கிறார்கள் ; அவர்களையெல்லாம் கலந்து உணவுப் பெருக்கத்திற்கான வழிகளை இந்த அரசாங்கம் ஆராய வேண்டும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சியின் மகத்தான சாதனைகளைக் கனம் உறுப்பினர் அவர்கள் பாராட்ட ஆரம்பித்தது எந்த வருஷத்தில் இருந்து என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** ஒரு சில அங்கத்தினர்கள் கூறியது போல் கவர்னர் உரையை முன்பு பகிஷ்கரித்து வந்ததை விட்டு விட்டு, இப்பொழுது பாராட்ட வந்துவிட்டார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் திராவிட நாடு பிரச்சனையை விட்டு விட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் கட்சி அங்கத்தினர் ஒருவர் பேசும்போது, திராவிட நாடு பிரச்சினையை விட்டு விட்டாலும் அது எங்கள் கையில் இல்லை ; மத்திய அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு அர்த்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கனம் முதலமைச்சர் அவர்கள் விட்டு விட்டோம் என்று சொன்னார்கள் ; ஆனால்

[திரு. எஸ். சிவசுப்பிரமணியன்] [1967 மார்ச் 30

அங்கத்தினர் அது எங்கள் கையில் இல்லை என்று சொல்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இதைப் பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நம்முடைய மாகாணத்தில் எஸ். எஸ். எல். சி. பரிட்சை நடந்து கொண்டிருக்கிறது. பரிட்சை பேப்பர்கள் வெளியாகியிருப்பதாகப் பரவலான அபிப்பிராயங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. என்னிடத்திலே கூட நாளைக்கு வரக்கூடிய கேள்வித்தாள் ஒன்று இருக்கிறது.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் மட்டும் கூறுவது நல்லது என்று கருதுகிறேன். கேள்விகள் முன்கூட்டியே வெளியாவது பற்றிய வதந்திகள் பலவகையில் உலவிக் கொண்டிருக்கின்றன. சிலபல கேள்விகளின் பட்டியல் ஒன்று நேற்றைக்கு முன்தினம் என்னிடம் கொண்டு தரப்பட்டு அதைப் பற்றி ஆராயுமாறு உரிய செய லாளரிடம் கொடுத்தேன். ஆனால் அந்தக் கேள்விகளை மதிப்பிட்டுப் பார்த்து அவர்கள் ஒரு அறிக்கையை எனக்குச் சமர்ப்பித்ததி லிருந்து உண்மையான கேள்வித் தாளுக்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்பது தெரிய வருகிறது. வதந்திகளின் பேரில் பல கேள்விகள் வருகின்றன என்ற நிலைமை இருக்கிறது. அதைப் பற்றி இங்கு நாமே அதிகமாக எடுத்துச் சொல்வோமேயானால் வதந்திகளைப் பரப்ப நாமே காரணமாக இருந்து பயங்கரமான நிலைமைகள் உருவாக வழி ஏற்படும். ஆகவே கனம் உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றி என்னிடம் தெரிவித்தால் நான் செயலாளர் மூலமாக விசாரித்து அறிய முடியும். அதைப் பற்றி இங்கு அதிகம் தெரிவித்து விபரீதத்துக்கு வழி வகுக்கக்கூடாது என்ற காரணத்தால்தான் நான் இடை மறித்துச் சொல்கிறேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** ஹரிஜனங்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் நல்லது செய்யப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சி அரசாங்கம் இருந்த சமயத்தில் ஹரிஜன மக்கள் சார்பாக இரண்டு ஹரிஜன அமைச்சர்கள் போட்டு இருந்தார்கள். இப்போது ஹரிஜனங்கள் சார்பாக ஒரு அமைச்சர்தான் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சாதனைகளில் இதுவும் ஒன்று. இன்னும், அதிகமாக ஹரிஜனங்களுக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கவேண்டும்.

**திரு. பி. எஸ். சந்தானம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் அங்கத்தினர் அவர்கள், காங்கிரஸ் அரசாங்கத்தில் ஹரிஜனங் களுக்கு இரண்டு அமைச்சர்கள் கொடுத்திருந்தார்கள் என்று சொன்னார்கள். அத்தகைய முறையில் இதுவரை இரண்டு அமைச்சர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் சொல்லு கின்ற இரண்டு பேரிலே ஒருவர் தான் ஆதித் திராவிடர்; இன்னொருவர் ஆரியர்.



1967, மார்ச் 30]

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** இது ஒழுங்குப் பிரச்சினை ஆகாது.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** நம்முடைய மாநிலத்திலே குறிப்பாக விவசாயச் சட்டங்கள் நிறையப் போட்டிருக்கிறார்கள். அவற்றால் விவசாயிகளுக்கு நல்லது கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. விவசாயிகள் துன்பப்படுகிறார்கள். குறிப்பாக, 60-40 என்று வைத்தார்கள். விவசாயிக்கு 60 என்றைக்காவது கிடைத் திருக்கிறதா என்றால் இல்லை. அதற்குப் பதிலாக 30, 35, 40 என்று தான் இருக்கிறது. விவசாயிகள் போலீஸ் உதவியை நாடினால் அவர்கள் உதவி கொடுப்பதில்லை. விவசாயிகள் பக்கம் போலீஸ் இல்லை; மிராசுதார்கள் பக்கந்தான் போலீசார் இருக்கிறார்கள். குமராட்சி பகுதியில் விவசாயிகள் மீது கேஸ் போட்டிருக் கிறார்கள். விவசாயிகள் வாரம் கேட்டால் அதற்கு அவர்கள் சாராயம் குடித்திருக்கிறார்கள் என்று கேஸ் போடுகிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் சி.ஐ.டி. ரிப்போர்ட் கேட்டு அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகளுக்கும், மிராசுதார்களுக்கும் இடையே உள்ள நிலைமை என்ன என்று அறிந்து பரிகாரம் காண வேண்டும். இரண்டு பேருக்கும் தகராறு வரும்போது போலீஸ் காரர்கள் விவசாயிகளைப் பார்த்து சிவில் கோர்ட்டுக்குப் போ என்று சொல்லுகிறார்கள். பயிர் வைத்தவர்களா கோர்ட்டுக்குப் போகவேண்டும்? பயிர் வைத்தவன் அறுவடை செய்கின்ற நேரத் திலே விவசாயிகளைப் பார்த்து 'நீ கோர்ட்டுக்குப் போ' என்று சொன்னால் விவசாயிகள் நிலைமை என்ன ஆவது?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் அந்த வழக்குகளைப் பற்றி சி.ஐ.டி. போட்டு விசாரிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். நான் விசாரித்துத் தெரிந்து கொண்ட அளவுக்கு அவர்கள் இருக்கின்ற பகுதியில் காங்கிரசிலே இருக்கின்ற இரண்டு அரிசன தலைவர்களுக் கிடையே உள்ள போட்டியினால்தான் இந்த வழக்குகள் என்று அறிந்திருக்கிறேன். (ஆரவாரம்.)

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** கோர்ட்டிலே போட்ட வழக்கு களிலே காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்கள் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. முற் பகல் 11-00

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** காங்கிரசிலே இருக்கிற ஹரிஜனத் தலைவர்கள் 'இரண்டு' என்று மட்டும் இப்போது சொல்லி நிறுத்துகிறேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** அதை நான் மறுக்கிறேன். என்னுடைய பகுதியில் அதிகமான கிராமங்கள் இன்னும் மின்சார வசதி பெறாத நிலைமையில் இருக்கின்றன. பல கிராமங்களில் மின்சார வசதி இன்னும் ஏற்படவில்லை. அப்படி மின்சார வசதி கிடைத்தாலும்கூட அது ஹரிஜனத் தெருக்களை எட்டிப்பார்ப் பதேயில்லை. அதை ஜாதி ஹிந்து தெருவோடு நிறுத்திவிடுகிறார்கள்.

ஹரிஜனங்களுக்கு நல்லது செய்யப்போகிறோம் என்று சொல்கிற நீங்கள் இதைச் சிறிது கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையில் சேரி அபிவிருத்தித் திட்டம்பற்றி ஒன்றுமே இல்லை. அது இருந்தால் நிச்சயமாக இதை நான் வரவேற்பேன். ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு மனைகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கு வீடுகள் சில கட்டப்பட்டிருந்தாலும் இன்னும் கட்டப்படவேண்டியது அதிகம் இருக்கிறது. கிராமங்களுக்குச் சென்று பெண் ஆசிரியைகள் குடியேற வேண்டுமென்றால் அவர்களுக்கு வீடு கிடைப்பதில்லை. அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் போனால் அவர்களுக்கு நிச்சயமாக இடம் கிடைப்பதில்லை. நான் ஆசிரியனாக இருந்தவன். ஆசிரியர்கள் கஷ்டம் எனக்குத் தெரியும். ஆசிரியர்களுக்கு வீடுகள் இல்லாத கஷ்டம் பெரிதாக இருக்கிறது. ஆகவே அவர்கள் பத்து மைல்கள் தினம் செல்லவேண்டியிருக்கிறது. அதன் காரணமாக பள்ளிக்கு 9 மணிக்குச் செல்லவேண்டியவர்கள் 10 மணிக்குத்தான் செல்கிறார்கள். அதனால் பள்ளி வேலையும் நிச்சயமாகக் கெடுகிறது. ஆகவே, ஆசிரியர்களுக்கு, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிச்சயமாக இந்த அரசாங்கம் ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU. K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, arising out of the statement made by the Hon. Minister for Education that if S.S.L.C. questions papers were unauthorisedly distributed before the date of the examination, he would institute an enquiry into the allegations, I am passing on a copy of the questions which are to be given tomorrow in the examination hall. Let the Minister institute an enquiry into the allegation.

Thiru K. Vinayakam passed on the papers to the Hon. Minister for Education.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** எந்த விதியின்கீழ் இந்தப் பேச்சைப் பேசுகிறீர்கள் ?

THIRU K. VINAYAKAM : Whenever a Minister makes a statement, a Member has got the right to elicit information or supply more information.

**மதிப்பிற்குரிய துணைப் பேரவைத் தலைவர் :** அவர் பேசியவுடனே கொடுத்திருக்கவேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** It is allowed. அப்போது வேறொருவர் பேசிக்கொண்டிருந்தார்.

*** திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** அவைத் துணைத் தலைவர் அவர்களே, கனம் கவர்னர் அவர்களின் பேருரையை ஆதரித்து நானும் என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்



என்னுடைய பழனி தொகுதியானது ஏழை விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். விவசாயத்தையே நம்பி வாழும் ஏழை தாழ்த்தப்பட்டவர்களும், கூலி விவசாயிகளும் அதிகமாக உள்ள அந்தத் தொகுதி மக்களுக்குக் கடந்த 20 ஆண்டு காலமாக ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு எந்தவித நன்மையும் செய்யவில்லை.

1903-ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் சர்வே செய்யப்பட்ட பாலாறு—பொருந்தலையாறு நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எனது தொகுதி மக்கள் பல தடவை முறையிட்டும் காங்கிரஸ் அரசாங்கம் செயலுக்குக் கொண்டு வரவில்லை. ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காகத்தான் பக்ரா நங்கல் நீர்த்தேக்கத்திலிருந்து பரம்பிக்குளம் நீர்த்தேக்கம் வரை பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம் என்றும், ஒவ்வொரு அங்குல நிலத்திலும் தானியம் விளையவேண்டும், ஒவ்வொரு மணி தானியமும் உயிர்களைக் காக்கும் என்று மறைந்த மாமேதை பெருமதிப்பிற்குரிய பண்டிதர் நேரு அவர்கள் கூறிய பொன் மொழிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் அவர் கூறிய கருத்துக்கு மாறாக நமது மாநிலத்தை ஆட்சி புரிந்த காங்கிரஸ் அமைச்சர்கள் பாலாறு-பொருந்தலையாறு திட்டத்தை நிறைவேற்றாமல் 1960-ம் ஆண்டு சென்னை மாநில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு பொது விபரம் என்ற புத்தகத்தில் 43-வது பக்கத்தில் இதன் விபரத்தை வெளியிட்டார்களேயொழிய அதற்கான வேலைத் திட்டங்களை எடுத்துக் கொள்ளவில்லை. காரணம் 1952 பொதுத் தேர்தலிலும், 1962 தேர்தலிலும் காங்கிரஸ் பழனி தொகுதியில் தோற்கடிக்கப்பட்டதின் காரணத்தினால்தான் இந்தத் திட்டத்தையே கைவிட்டு விட்டார்களோ என்று கருத வேண்டியிருக்கிறது. என்னுடைய தொகுதி மலைவளம் மிகுந்த பகுதி, மழைக் காலங்களிலே பெருக்கெடுத்து வரும் ஆற்று வெள்ளம் நீர்த் தேக்கம் இல்லாத காரணத்தினால் வீணாகக் கடலிலே போய்ச் சேருகிறது. ஆகையால் இந்த பாலாறு-பொருந்தலையாறுத் திட்டத்தை நமது அரசு உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 10,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறவும், தற்போது உள்ள ஏரிகளின் கீழ் உள்ள சுமார் 872 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும். இன்று நம்முடைய அரசின் முக்கிய குறிக்கோள் அதிக உணவு உற்பத்தியும், மக்களுக்கு வயிறார உண்ண உணவும் கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்திற்கு இந்தத் திட்டம் பெரும் உறுதுணையாக இருக்கும் என்று கூறி இந்தத் திட்டம் விரைவில் நிறைவேற ஆவன செய்யவேண்டும் என்று அமைச்சரவையைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்

எனது தொகுதியிலுள்ள ஏரிகள் பல ஆண்டுகளாக ஆழப்படுத்தாத காரணத்தினால் மேடு உண்டாகி நீர் பிடிப்பு பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் இரு போகம் விளைய வேண்டிய நன்செய் நிலங்களுக்கு ஒரு போகத்திற்கே தண்ணீர் பற்றாக் குறையாகப் போய் விடுகிறது. ஏரிகளை ஆழப்படுத்தி நீர்

[திரு. கு. கிருஷ்ணமூர்த்தி] [1967, மார்ச் 30

தேக்கினால் இரு போகம் நன்செய் விளைச்சலுக்கும், அதிக உணவு உற்பத்திக்கும் ஏற்றதாக இருக்கும். ஆகவே உடனடியாக ஏரிகள் ஆழப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் குறிப்பாக பாலசமுத்திரம், தாமரைக்குளம் மானூர் இந்த மூன்று கிராமங்களுக்குப் பக்கத்தில் ஓடும் நதிகளின் மீது பாலம் இல்லாத காரணத்தினால் மழைக் காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து வருகின்ற காலத்தில் பழனி நகருக்கும் மற்றப் பகுதிகளுக்கும் தங்களுடைய விளைபொருள்களைக் கொண்டு வந்து விற்பனை செய்ய முடியாமல் பல கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் ஆளாகிறார்கள். ஆகையால் இந்த மூன்று நதிகளின் மேல் பாலம் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்திக்கு உரம் இன்றியமையாதது. உர விநியோகம் சர்க்காருடைய நேரடி நிர்வாகத்தின்கீழ் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மூலமாக நிலச் சொந்தக்காரர்களுக்கும், குத்தகை நிலத்தைச் சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகளுக்கும் நிலத்திற்குத் தக்க அளவு உரம் விநியோகம் செய்வது நல்லது என்று கூறிக் கொள்கிறேன். கலப்பு உரம் தயார் செய்வதற்கு பலருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தயார் செய்யும் கலப்பு உரங்களில் உணவுக்கு உபயோகிக்கும் உப்பைக் கலந்து விடுகிறார்கள். இதனால் எதிர்பார்க்கப்படும் அதிக உற்பத்திக்குப் பதிலாக விவசாயமே பாழ்பட்டுப் போகிறது. இதில் அரசு தனிக் கவனம் செலுத்தவேண்டும்.

நிலம் ஜாரி செய்யும் விஷயத்தில் ஆற்றோரங்களில் உள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங்களை அந்த அந்தப் பகுதியில் உள்ள நிலமில்லாத ஏழை விவசாய மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஜாரி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் பலவிடங்களில், நகரங்களிலும் கிராமங்களிலும் காமராஜபுரம் என்றிருக்கிறது. சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக்கொண்டு ஏழைகள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு அந்த இடங்களை ஜாரி செய்து கொடுக்க காங்கிரஸ் அரசு எந்தவித நடவடிக்கையும் எடுத்து எந்தவித நன்மையும் செய்யவில்லை. காமராஜபுரம் என்றிருந்தாலும் அவ்விடங்களை அந்த ஏழை மக்களுக்கு உடனடியாக ஜாரி செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி இல்லாததால் பெண்களுடைய கல்லூரிக் கல்வி பெரிதும் பாதிக்கப் படுகிறது. ஆகவே பெண்கள் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவில் பக்தர்கள் வழிபடும் நகரங்களில் பழனி ஒரு முக்கிய நகரம். இங்கு நாள் ஒன்றுக்கு 10,000-க்கு குறைவில்லாத பக்தர்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வேண்டிய சுகாதார வசதியும் குடிதண்ணீர் வசதியும் பழனி நகரசபையே பொறுப்பேற்றுச்



1967, மார்ச் 30] [திரு. கு. கிருஷ்ணமூர்த்தி]

செய்து கொண்டிருக்கிறது. பழனி நகரம் ஏழை மக்கள் நிறைந்த நகரம். இவர்களிடம் வசூல் செய்யும் வரிப் பணத்தைக்கொண்டு யாத்திரிகர்களுக்கு பல வசதிகள் செய்து கொடுப்பதில் பெரும் தொகை செலவாகி விடுகிறது. இதனால் நகரசபை நகர மக்களுக்குச் செய்யவேண்டிய பல நன்மைகளைச் செய்ய முடியாமல் போய் விடுகிறதென்பதை பல ஆண்டுகளாக நகரமன்ற உறுப்பினராக இன்றுவரை இருந்து வருவதால் அனுபவத்தின் வாயிலாக இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன். ஆகவே, மாநில அரசு பஸ்ஸுக்கு யாத்திரீகர்கள் வரி விதித்தும், ரயில்வேக்கு யாத்திரிகர்கள் வரி விதிக்க மத்திய சர்க்காருக்கும் சிபார்சு செய்யும்படியும் கேட்டுக் கொண்டு இந்த மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. இல. பலராமன் :** மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, தற்போது கவர்னர் அவர்கள் உரைமீது சொற்பொழிவாற்ற எனக்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பாக வேளாண்மைக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள். வேளாண்மை எந்த நிலையில் இருக்கிறது ? வேளாண்மை செய்பவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று பார்த்தால் அது வருந்துவதற்குரிய நிலையில் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள், எந்தத் துறையும் ஒருவனுக்கு இல்லையென்றால் அவன் கடைசியாக வேளாண்மைத் துறையை கைக்கொள்கிறான் என்று குறிப்பிட்டார்கள். அத்துறை அபிவிருத்திப் படுத்தவேண்டும் என்று பாடுபடும் எந்த அரசுக்கும் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் சார்பாக நன்றி செலுத்த கடமைப்பட்டவர்களாவோமென்று மக்கள் பிரதிநிதி என்ற நிலையில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கும் மக்களோடு, விவசாயம் செய்யும் மக்களோடு நெருங்கி தொடர்பு கொள்ளும் அதிகாரிகள் என்று சொல்பவர்கள் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளாகத்தான் இருக்கமுடியும். அவர்கள் விஞ்ஞான முறையில் உள்ள கருவிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று கூறும்போது விவசாயிகளுக்குப் போதிய கல்வி அறிவு இல்லாததால் அவற்றை எப்படி உபயோகப் படுத்துவது என்று தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்த விவசாய மக்களுக்கு நல்ல போதனாமுறை மூலம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்றால், நெருக்கமான தொடர்பு வேண்டுமென்றால் அதற்கு இந்த அதிகாரிகள் முறை சரி அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களில் நிர்வாக அதிகாரியாக இருக்கும் கமிஷனர் பல்வேறு துறைகளிலிருந்து வருகிறார்கள். இந்த முறையை மாற்றி அமைத்து, அவர்களெல்லாம் விவசாயம் படித்தவர்களாக இருக்கும் முறையில், அவர்களைக் கமிஷனர்களாகப் போட்டால் நலமாக இருக்கும் என்று இந்த அவைக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். மற்றப் பிரிவுகளிலிருந்து வந்திருப்பவர்கள் விவசாயத்தைப் பற்றி அக்கறை இல்லாமல், அவர்கள் எந்தப் பிரிவிலிருந்து வந்திருக்

கிறார்களோ அந்தப் பிரிவு பற்றிய காரியங்களிலேயே நாட்டம் காட்டுகிறார்களே தவிர, விவசாயத்தில் அக்கறை காட்டுவதில்லை என்பது எனது அபிப்ராயம். ஆகவே, விவசாயம் தெரிந்த அதிகாரியாக பஞ்சாயத்து யூனியன் அதிகாரி இருப்பது நலம் என்று குறிப்பிடுகிறேன்.

விவசாயத்தை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றால், குறிப்பாக விவசாயிகளுக்குக் கடன் வழங்குதல் போன்றவைகளை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும். இப்போது கிணறு வெட்ட சப்ஸிடியாக 2,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அது ரொம்பவும் குறைந்த தொகை; இன்றைய விலைவாசி ஏற்றத்தில் 2,000 ரூபாயில் கிணறு வெட்ட முடியாது என்று கூற முடியும். அதுவும் வட ஆற்காடு ஜில்லாவில் மிகவும் ஆழமாக வெட்டவேண்டியிருப்பதால், அந்தப் பகுதியில் 2,000 ரூபாயில் கிணறு வெட்டுவது என்பது சாத்தியமானதல்ல. அந்தத் தொகையை 5,000 ரூபாயாக உயர்த்தலாம் என்று நான் கருதுகிறேன். அதற்கு மான்யம் வழங்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

பூச்சி மருந்துகளை விவசாயிகள் இன்றைக்கு எப்படி உபயோகப்படுத்துவது என்று தெரிந்துக்கொள்ளாத நிலையில், மருந்துகளை மான்யமாக வழங்காமல் முழு விலையில் கொடுக்கிறார்கள். அதற்கும் மான்யம் கொடுத்து விவசாயிகளுக்கு விலை இல்லாமல் பூச்சி மருந்துகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் மேலும் அபிவிருத்தி அடையவேண்டுமென்றால், விவசாய என்ஜினீயரிங் பகுதியிலிருந்து கிணறுகளுக்கு போரிங் போட வேண்டிய கருவிகளையும், விவசாய டிராக்டர்களையும் அதிகமாக வாடகைக்கு வழங்கினால் நலமாக இருக்கும். அப்படி வாடகைக்கு வழங்கும் நிலையில் அரசாங்கத்திடம் எந்த விதமான டிராக்டர்களும் கிடையாது, கேட்டாலும் தருவதில்லை. அதைப் பரிசீலித்து விவசாய என்ஜினீயரிங் டிபார்ட்மென்டிலிருந்து வாடகைக்கு தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.டி.டி. 27 போன்ற நெல் ரகங்கள் நல்ல முறையில் விளைந்தாலும் அந்த விதைகளைச் சர்க்கார் பண்ணைகளில் அதிகாரிகளைக் கொண்டு தயாரிக்கும் நிலையில் சில சமயங்களில் அவைகள் முளைக்காத நிலைமை ஏற்படுகிறது. நல்ல தரமான விதைகளைக் கொடுக்கும் முறையில் ஜில்லாவாரியாக விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவது உசிதம் என்று கருதுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் முறையில் ஏற்கனவே இருந்த அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கையாண்டு வந்தது. அதை மேலும் நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

என்னுடைய தொகுதியில், வேலூர் தாலூகாவில் கீழரசம்பட்டு கிராமத்தில் ஓர் ஏரி ஒன்று வெட்ட சிபாரிசு செய்திருந்தார்கள். அதை மேலும் கவனம் செலுத்தி வெட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏரிகள் என்று குறிப்பிடும்போது, மூன்று மாதப் பாசனம் என்று சர்க்கார் பதிவேட்டில் இருக்கும்போது ஏரிகளில் 15 நாட்களுக்கு வேண்டிய தண்ணீர் கூட நிரம்பாமல் தூர்ந்திருக்கின்றன. டீஸில்ட்டிங் ஸ்கிமில் விரைவாகத் தூர்வாருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





**திரு. என். ராஜாங்கம்:** பெருமதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடந்து வருகிற கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி செலுத்தும் தீர்மானம் பற்றிய விவாதத்தில் நான் கலந்துகொண்டு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டொரு அங்கத்தினர்களுக்கு முன்னால் பேசிய மதிப்பு மிக்க நண்பர் சிவசுப்பிரமணியன் அவர்கள் காங்கிரஸ் அரசாங்கம் அத்தனையும் செய்துவிட்டது என்று முதலிலே பொதுவாகக் குறிப்பிட்டு, ஹரிஜனங்களுக்கு காங்கிரஸ் அரசாங்கம் செய்த நன்மைகளையும் குறிப்பிட்டு, விவசாயத்தைப் பொறுத்த வரையில் எல்லா ஆறுகளிலும் அணைகள் கட்டியாகிவிட்டது; மேலும் அணை கட்டுவதானால் ஆற்றைத் தேடவேண்டிய நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் அணைகளெல்லாம் கட்டிவிட்ட பிறகு தண்ணீர் எங்கே ஓடுவது? கட்டிய அணைகளுக்குத் தண்ணீர் வருவது என்றால், தேவையான நிலங்களுக்குத் தானே பாயவேண்டும்? காங்கிரஸ் அரசாங்கம் கண்ட இடத்தில், எங்கே கட்டுவது, எங்கே தேக்குவது, எங்கே விடுவது என்று பாராமல் அலைந்தார்களா? இதனால்தான் விவசாயத் துறையில் குழப்பம் ஏற்பட்டு, பஞ்சம் ஏற்பட்டது என்பதை அவர்கள் மறைமுகமாக ஒத்துக்கொண்டார்கள் என்று நினைக்கிறேன்.

முன்பு இருந்த அமைச்சரவையில் ஹரிஜனங்களில் மந்திரிகளாக இரண்டு பேர்களைப் போட்டார்கள். இங்கே ஒரே மந்திரியைப் போட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதிகமாக போடுவதைக் காட்டிலும், இலாகாவின் வேலைகளை நல்ல முறையில் பரிசீலனை செய்து, ஒதுக்கப்படுகிற தொகை நல்ல முறையில் செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒருவரே போதும். பல ஆட்களை வைத்து ஒரு வேலையும் செய்யாமல் இருப்பதைவிட ஒருவரைப் போட்டே நல்ல முறையில் கண்காணிக்கலாம். இரண்டு பேர்களைப் போட்டோம் என்று சொல்லுவது, வேண்டுமென்றால் கட்சி நலனுக்கு, கிராமங்களில் ஒன்றும் புரியாத மக்களை ஏமாற்றப் பயன்படுமே தவிர, நல்ல காரியம் செய்யப் பயன்படாது என்று தெளிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிதம்பரம் தாலூகாவில் விவசாய மக்களுக்கு நன்மை செய்தது அரசாங்கம் என்றால், அதில் உள்ளபடியே காங்கிரஸ் கட்சியிலிருந்து பேசுவதைவிட, நண்பர்

சிவசுப்பிரமணியன் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி செய்ததை காங்கிரஸ் அரசாங்கத்திடம் ஏற்றிப் பேசுவது, அந்தக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயராலே அல்லது விவசாய சங்கத் தலைவர் என்ற பெயராலே போராடியதைக் கண்டு அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை மறந்துவிட்டு ஒரு அரசியல் கட்சிக்குச் சாதகம் ஏற்படவேண்டுமென்று பேசுவது அவருக்கே நல்லதல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் தஞ்சையில் ஏற்பட்ட பிறகு, சிதம்பரத்தில் குழப்பம் ஏற்பட்டது. அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் திரு. சிவசுப்பிரமணியன். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, இதே சட்டசபைக்குத் தந்தி மூலமாகப் போலீஸ் பாதுகாப்பு வேண்டும், ஆயிரக் கணக்கான ஹரிஜனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், அண்ணன், தங்கை என்று பேதம் கூடக் காட்டாமல் இழுத்துச் செல்லப்படுகிறார்கள் என்று தெரிவித்து அவருடைய மரியாதையை காப்பாற்றியவர்கள் நாங்கள். காங்கிரஸ் அரசாங்கத்தால் மக்களுக்குப் பலன் ஏற்படவில்லை. உள்ளபடியே விவசாய சங்கத்தினால் அவர்களுடைய உழைப்பினால் இந்த நிலைமை உருவாகியது. அப்போது பயந்து காங்கிரஸ் சர்க்கார் சட்டமாக்கியது. கம்யூனிஸ்டுகள் போராடி, காங்கிரஸ் அரசாங்கம் சட்டமாக்க வேண்டுமென்று திரு. ராஜகோபாலாச்சாரியார் முதல் மந்திரியாக இருந்தபோது சட்டம் வந்ததே தவிர, தாங்களாக, விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று காங்கிரஸ் அரசாங்கம், முழுவதாக, மனமாரக் கொண்டுவரவில்லை என்பதை அவர்கள் மனதைத் தொட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீடு கட்டும் பிரச்சினையைப்பற்றி மற்றவர்கள் சொன்னார்கள். இருபது ஆண்டு காலமாக வீடு கட்டும் பிரச்சினை இருக்கிறது. இதே சட்டசபையில் போன ஐந்து ஆண்டுகளில் காங்கிரஸ் உறுப்பினர், நல்லெண்ணம் படைத்தவர்கள். செய்த தவறைச் சுட்டிக்காட்டினார்கள். இதை இன்றைக்கு மறந்துவிட்டு 20 நாட்களாக ஆளும் அரசாங்கத்தின் மீது அதிலே குறை காணுவதாகக் கூறுவது சரியல்ல.

இந்த சட்டசபைக்குள் ஜாதி, மந்திரி, இனம் என்று யாரும் பேசுவது நல்லதல்ல, ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. ஜாதி மத பேதம் இல்லாத சமஷ்டி நம் அரசாங்கம் என்பதை உணர்ந்து பேசவேண்டுமென்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜயராஜ் :** கனம் உபதலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பண்ணையாள் பாதுகாப்பு சட்டமோ, வேறு எந்தச் சட்டமோ கொண்டுவரப்படவில்லை என்று சொன்னார்கள். மாயவரம் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. நாராயணசுவாமி நாயுடு அவர்களுடைய ஒப்பந்தத்தின் அடிப்படையின்





பேரில்தான் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். ராஜாங்கம் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் அரசாங்கம் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது உண்மை என்று முதலிலேயே சொன்னேன். ஆனால், அதற்கு அடிப்படை யார் என்பதை விளக்கினேன். மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். காங்கிரஸ் அரசாங்கத்திற்குப் பழி வேண்டுமென்றால், அப்படியே விட்டுவிடவேண்டும், பழி வேண்டாம் என்றால் அதை சட்டமாக்கித் தீரவேண்டும், விவசாயிகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும், அந்த ஷரத்துக்களை அனைத்தையும் அந்தச் சட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார். இன்றைக்கு ஒரு பிரச்சினை வந்தால் சட்டம் கொண்டு வரவேண்டியவர்கள் இந்த அரசாங்கம்தான். ஆனால், இந்தப் பிரச்சினைக்கு உரியவர்கள் யார் என்பதைப் பார்க்க வேண்டும். அதைத் தான் நான் விளக்கினேன்.

*** திரு. என். வரதராஜன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பேருரையிலே நம்முடைய மாநில அரசாங்கம் சில முக்கியமாம பிரச்சினைகளை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் காண்கிறேன். மாநிலத்திற்கு மேலும் அதிகாரம் வேண்டும் என்று சொல்லிவந்தோம். அதை சட்டமன்றத்தில் கவர்னர் அவர்களுடைய பேருரையில் கொண்டு வந்திருப்பது நிச்சயம் வரவேற்கத்தக்கது. அப்படிச் செய்திருப்பதன் மூலம் நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களில் இருக்கும்படியான காங்கிரஸ் ஆட்சியின் கீழ் இருக்கும்படியான மக்களுக்கு உத்வேகத்தை ஊட்டும் பெருமையை இந்த சட்டமன்றமும், அரசாங்கமும் தேடியிருக்கிறது, இந்த அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக. அதைப் போலவே தேர்தலைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே எனக்கு முன்பு பேசிய பல அங்கத்தினர்கள் தேர்தலில் நடந்த சில சம்பவங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். திண்டுக்கல் தாலுகா ஆத்தூர் தொகுதியில், திண்டுக்கல் தொகுதியில் என்ன நடந்தது என்பதை உங்களுக்குச் சொல்லவேண்டும். அங்கு சாதாரணமாக காங்கிரஸை எதிர்த்து வோட்டு அளிக்கும்படியான ஜனங்கள் பயமுறுத்தப்பட்டார்கள், பல வீடுகள் நொறுக்கப்பட்டன, பலர் வெட்டப்பட்டார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் நடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் போட்டியிட்ட தொகுதியில் குரோம்பேட்டை போன்ற சென்னைக்கு பக்கத்தில் இருந்த பகுதிகளில் கூட ஜனங்கள் உரிமையோடு வந்து வோட்டு அளிப்பதற்கு முடியாமல் பயமுறுத்தப்பட்டார்கள் என்பதை அந்த வட்டாரத்தில் இருப்பவர்கள் சொல்ல கேட்டிருக்கிறேன். திண்டுக்கல் தொகுதியில் காங்கிரசிற்கு விரோதமாக வேலை செய்தவர் வெட்டப்பட்டார். போலீஸில் கேஸ் இருக்கிறது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், தேர்தல் முற்றிலும் ஜனநாயக முறையில்

நடந்துவிட்டது என்று கூறப்படுகிறது. தமிழகத்தின் பல பாகங்களில் இம்மாதிரி பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஜனங்கள் உற்சாகத்துடன் தேர்தலில் கலந்துகொள்ள முடியாத நிலை சில இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனுக்கு ஒரு வோட் என்ற அரசியல் சட்டத்தில் இருந்தாலும், இன்றைக்கு ஒரு மனிதன் கையிலே நூற்றுக்கணக்கான வோட்டுகளை வைத்துக்கொள்ளக்கூடிய ஒரு சமூக அமைப்பு இருக்கிறது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர பிரியப்படுகிறேன்.

(மதிப்பிற்குரிய சபாநாயகர் தலைமை.)

பயமுறுத்தலும், பண ஆதிக்கமும் இருந்தாலும், ஜனங்கள் வோட்டு அளித்து, சிறப்பு மிகுந்த தமிழ் நாட்டிலே ஒரு புதிய மந்திரி சபையை அமைத்துள்ளார்கள் என்று கவர்னர் அவர்களின் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்திய சர்க்காருடைய திட்டக் கமிஷன் விவசாயத்திற்கு உதவியாக அணை கட்டுவதோடு அல்லாமல் பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை உபயோகப்படுத்தி விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. தமிழகத்தில் கூட அப்படிப்பட்ட ஒரு பெரிய வேலையை விவசாய அபிவிருத்திக்காக நாம் மேற்கொள்ளவேண்டும். கிணறு வெட்டுவது என்பது விவசாயியே வெட்டிவிட முடியாது. ஏற்கனவே தமிழகத்தில் இதைப்பற்றி சில அம்சங்கள் பரிசீலிக்கப்பட்டு கைவிடப்பட்டுவிட்டது என்று நான் கேள்விப்படுகிறேன். அரை ஏக்கர் நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு அங்கே ஒரு கிணறை வெட்டி, நீரை பக்கத்து விவசாயிகளுக்குக் கொடுத்து, நாம் பணம் வசூல் செய்யவேண்டும், இப்படி நீர் வரி வசூல் செய்யவேண்டும் என்பதுபற்றி பரிசீலனை செய்து கைவிடப்பட்டது என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட விஷயத்தை நம்முடைய மாநில அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்ய வேண்டும். அடிக் கிணறு வெட்டுவது என்பது முக்கியமானது. விவசாயத்திற்கு முக்கியமானது தண்ணீர். அடிக்கிணறு வெட்டுவதற்கு ஏற்கனவே ரூ. 1,000 கொடுக்கவேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டது. விலைவாசி உயர்ந்திருப்பதன் காரணமாக இந்தப் பணத்தைக்கொண்டு அடிக்கிணறு வெட்டுவதற்கு இயலாது. அந்தப் பணத்தை உயர்த்திக்கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அணைகளில் பாறைகளை உடைப்பதற்கு சில விஞ்ஞான கருவிகளை உபயோகப்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட கருவிகளை அடிக்கிணறுகளை வெட்டுவதற்கு உபயோகப்படுத்தினால் நலமாக இருக்கும், தண்ணீர் பிரச்சினையை ஓரளவுக்கு தீர்க்க முடியும்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் அதிகமான அளவுக்கு எலக்டிரிக் கரெண்டு வேண்டும் என்றாலும் கூட, ஏற்கனவே எலக்டிரிக் மோட்டார் வாங்கி வைத்து, பம்பு பிட்டிங் செய்துவைத்து, கடன் வாங்கி,





சர்காருக்கு அந்தக் கடனைத் திருப்பிக்கொடுக்க ஆரம்பித்த பிறகும் கூட, 2, 3 ஈவுகள் கொடுத்ததற்குப் பின்னால் கூட 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு எலக்டிரிக் கனெக்ஷன் கிடைக்காமல் பல இடங்களில் பல விவசாயிகள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலும் அதே போன்ற நிலைமை இருக்கிறது. இரண்டு வருஷம், மூன்று வருஷம் எலக்டிரிக் கரெண்டு வராமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். எலக்டிரிக் மோட்டார் வாங்கி, பம்பையும் பிட் செய்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எலக்டிரிக் கனெக்ஷன் கொடுப்பதற்கு முன்முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குளம் மராமத்து என்பதைப்பறி பலர் வற்புறுத்தியிருக்கிறார்கள். அதையும் நாம் துரிதமாகக் கவனிக்கவேண்டும். அணைகளைக் கட்டவேண்டும் என்று சொல்லுகிறோம். குடவனாறு அணை சம்பந்தமாக மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஒரு பெரிய அணை கட்டுவது என்ற நிலை இல்லாவிட்டாலும் கூட, அது ஒரு பெரிய ஜீவ நதி. சாதாரணமாக குறுக்கே ஒரு சுவர் எழுப்பி, தண்ணீரை விவசாயிகளுக்கு உபயோகிக்கும்படி செய்தால் மிகவும் நலமாக இருக்கும். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயனடையும், கிணறுகளுக்கும் குளங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும், குடிநீருக்கும் அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்தக்கூடிய நிலை இருக்கும். இதை ஆழ்ந்து சிந்தித்து, மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்து, இதைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்தால் உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தரிசு நிலங்களை அரசாங்கம் தாழ்த்தப்பட்ட குடிமகனுக்கு, விவசாயிகளுக்கு பிரித்துக்கொடுத்தால் பெரிய உதவியாக இருக்கும். இப்படிப்பட்ட முறையில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நமது சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். நான் ஒரு யோசனை கூறுகிறேன். அதை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வருடம், இரண்டு வருடங்களுக்கு கடன்களை ஒத்திவைத்து விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும். அதாவது அவர்கள் கடன் திருப்பிக் கொடுப்பதை ஒத்திவைப்புச் செய்து கொடுத்தால், மிகவும் உதவிகரமாக இருக்கும். உற்பத்தி பெருகிய பின்னால், அந்தக் கடன் தொகையை வசூலிப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்யலாம்.

அடுத்து, கொள்முதல் விஷயத்திலே நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நகரப் பஞ்சாயத்துக்களின் கீழ் சில கிராமங்கள் இருக்கின்றன. திண்டுக்கல் தாலூகாவில் வேடசந்தூர், சின்னாளப்பட்டி போன்ற இடங்களில் சர்க்கார் அலுவலகங்கள் இருக்கின்றன, பெரிய தொழிற் சாலைகள் இருக்கின்றன. அங்கெல்லாம் ரோஷன் கார்டுகள் கொடுக்கப்படவில்லை, மலிவு தான்யக் கடைகளும் இல்லை, குடும்பக் கார்டுகளும் இல்லை. அரிசி நடமாட்

டத்திற்கும் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். அரிசி கொண்டு போகக் கூடாது என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இங்கெல்லாம் ஜனங்கள் கள்ளமார்க்கெட்டு பேர்வழிகளிடம் படி அரிசி ரூ. 2, 3 கொடுத்து வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். என்னுடைய யோசனையை அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சரவை ஒரு ஏக்கருக்குக் கீழே கொள்முதலிலிருந்து விதி விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகள் அந்த இடங்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் ஒரு மூட்டை, இரண்டு மூட்டை, 10 மூட்டை நெல்லை கொண்டுபோவதற்கு பெர்மிட்கள் வழங்க முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அது ஓரளவுக்கு விலையை கட்டுப்படுத்த உதவியாக இருக்கும். விதிவிலக்குக் கொடுத்தவர்களுக்கு மட்டும்தான் இந்தக் முறை என்று தான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே சமயத்தில் கொள்முதல் செய்யப்படும்பொழுது, அதற்குப் பணத்தை கொடுத்து வாங்கிக்கொண்டு போவதுதான் நல்லது. ஒரு வாரத்திற்குப் பின்னால் விவசாயிகள் வந்து அலைந்து பணத்தை வாங்கிக்கொள்ளவேண்டும் என்றால் கஷ்டமான நிலை ஏற்படுகிறது. மேலும் கூடுதலான விலை கொடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். டெல்டா பிரதேசத்தில் நெல் உற்பத்தி செய்வதற்கும், புஞ்சைப் பிரதேசத்தில் நெல் உற்பத்தி செய்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. புஞ்சைப் பிரதேசத்தில் கிணற்றிலிருந்து நீர் இறைத்துப் பாய்ச்சி நெல் உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. அதனால் பணச்செலவு அதிகமாக ஏற்படுகிறது. அப்படிப்பட்ட பிரதேசத்தில் விலை கட்டுப்படியாகக்கூடிய விதத்தில் கொடுப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அங்கெல்லாம் ஓரளவுக்கு விலையைக் கூட்டிக்கொடுத்தால்தான் கட்டுபடியாகும். இதையும் அமைச்சரவை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்முதலில் போலீஸ் அதிகாரிகளுடைய கெடுபிடி என்று சொன்னார்கள். அது எந்த அளவுக்கு இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. இருந்தாலும்கூட, களத்துமேட்டில் நெல்லை அளக்கும் பொழுது, சிவில் அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகளின் ஒத்துழைப் போடு, அந்த வட்டாரத்தில் இருக்கும்படியான அரசியல் கட்சி நண்பர்களையும் வைத்துக்கொண்டு சுமூகமான முறையில் நெல் கொள்முதல் செய்யவேண்டும். சர்க்கார் கொள்கையை தெளிவு படுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும் கீழே இருக்கிற அதிகாரிகள் சர்க்கார் கொள்கையை தெளிவாக புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை. முக்கியமாக தாசில்தார் அளவிலே இருக்கக் கூடிய அதிகாரிகளைக் கூட்டி நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு மகாநாட்டை நடத்தலாம். அல்லது கூட்டுமுறையில் அவர்களுக்கு சர்க்கார் கொள்கையை விளக்கிச்சொல்லலாம். உத்தரவு மூலம் மட்டுமல்லாமல் நேரடியாக அவர்களுக்குச் சர்க்கார் கொள்கை விளக்கப்படவேண்டும். புதிய கோணத்திலிருந்து





புதிய அரசு திட்டங்களைப் போட்டு நிறைவேற்றிக்கொண்டு வருகிறது என்பதை இந்த மன்றத்திலே பார்க்க முடிகிறது. ஆனால், கீழே இருக்கும்படியான சிப்பந்திகள் அதைப் பார்த்திருக்க முடியாது. ஏதாவது ஒரு முறையில், பெயர் என்னவேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், அப்படிப்பட்ட அதிகாரிகளை அமைச்சர் அவர்கள் சந்தித்து அவர்களுக்குக் கொள்கையை தெளிவுபடுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும். எப்படியும் நகர மு. ப. 11 30.
சபைத் தேர்தல்கள் நடத்தியே தீரவேண்டும். எந்த மாதம் என்பது பிரச்சினை அல்ல. அப்படி நடத்தும் போது, வார்டுகள் பிரிவினை பற்றி கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக, மதுரை நகரத்தில் ஒன்றுவது வார்டில் சுமார் 15,000 அல்லது 20,000 வோட்டர்கள் இருக்கலாம். அதே நேரத்தில் இன்னொரு வார்டில் 4,000, அல்லது 5,000 வாக்காளர்கள் கூட இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் வார்டுகள் இருக்கின்றன. ஹரிஜன் தொகுதி என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் வார்டில் ஹரிஜனங்கள் அங்கே நிறைய இருக்கிறார்கள் என்பதற்காக அல்ல. காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெறவேண்டும். வெற்றிபெற முடியும் என்கிற நிலையில் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். திண்டுக்கல் நகரத்தை எடுத்துக் கொண்டால், 6-வது வார்டு ஹரிஜன் வார்டு என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் 15-வது வார்டில் அதிகமான ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். ஏன் இந்த வார்டு ஹரிஜன வார்டாக இல்லாமல், வேறொரு வார்டு ஹரிஜன வார்டு என்று வைத்திருக்கிறார்கள் என்றால், அங்கே காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுவதற்கு வசதியாக இருக்கிறது என்பதால் தான். ஹரிஜனங்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதால் அல்ல. ஆகவே, வார்டு பிரிவினைபற்றி தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே சமயம் மதுரை, கோவை நகரசபைகளைக் கார்ப்பரேஷன் ஆக்க வேண்டுகிறேன்.

* **திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கவர்னர் பெருமான் உரையின் மீது 100 அங்கத்தினர்களுக்கு மேல் கலந்துகொண்டு, 103-வது அங்கத்தினராகப் பேசும் நிலையில் இருக்கிறேன். ஆனால் பேசுவதற்கு அதிகமாக இல்லை என்பதையும் நான் உணருகிறேன். ஏற்கனவே, இடைக்கால பட்ஜட்டின் மீது நடந்த விவாதத்தில் நான் பேசியிருக்கிறேன். இருந்தாலும், எதிர்க் கட்சித் தலைவன் என்கிற முறையில், காங்கிரஸ் கட்சியின் சார்பாக முதன் முதலாக நடைபெறும் இந்த மாபெரும் கவர்னர் உரைக்கு நன்றிசெலுத்தும் முறையில் பேச வேண்டிய நிலையில் இருக்கிறேன். எனக்கு முன்னால் காங்கிரஸ் கட்சியின் சார்பில், எதிர்க் கட்சித் தலைவர்களாக இருந்து பணியாற்றியவர்களை நினைத்துப் பார்த்தால், அவர்களுடைய தகுதிக்கு நூற்றில் ஒரு பங்கு கூட எனக்கு இல்லை என்பதை நினைத்து சற்று அச்சமாகக் கூட இருக்கிறது. இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள், நாங்கள் நல்ல எதிர்க்

கட்சியாக இயங்கவேண்டும், நாங்கள் எதிர்க்கட்சியில் இருப்பது புதிது, புதிது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன், இது எங்களுக்குப் புதிதல்ல என்பதை ஏற்கெனவேயே குறிப்பிட்டிருக்கிறேன். சுமார் 100 ஆண்டு கால காங்கிரஸ் கட்சி வளர்ச்சியில், 20 வருஷங்கள் தான் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கிறோம். பாக்கியெல்லாம் எதிர்க்கட்சியாகவே இருந்து பணியாற்றி இருக்கிறோம். மத்திய சர்க்காரிலும் சரி, மாநில சர்க்காரிலும் சரி, தலைவர்கள் புலாபாய் தேசாய், பண்டித நேரு, சத்தியமூர்த்தி போன்றவர்கள் எதிர்க் கட்சியிலிருந்து செய்த வாதத்திறமையை எங்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுதான். அதுதான் உண்மை நிலை. நல்ல எதிர்க் கட்சியாக நடக்க வேண்டும், நடக்க வேண்டும் என்று ஆளும் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நாங்கள் நல்ல எதிர்க்கட்சியாகவேதான் நடப்போம். நிச்சயமாக, அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது நடந்து கொண்டதற்குக் குறைவாக நடக்க மாட்டோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் நல்ல ஜனநாயகப் பண்போடு, ஜனநாயக சம்பிரதாயப்படி, எல்லா விதமான வகையிலும், சட்டசபையின் கௌரவத்தையும், கண்ணியத்தையும் காப்பாற்றும் வகையில் நடந்து கொள்ளுவோம் என்பதை எங்கள் கட்சியின் சார்பாக எடுத்துக் கூற விரும்புகிறேன். அப்படி நடந்து கொள்ளும்போது நாங்கள் சில பொருள்களை சபையில் காட்சிப் பொருளாகக் காட்டுவதோ, அனாவசியமாக வெளிநடப்புச் செய்வதோ, செய்ய வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பதையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கவர்னர் உரையிலே தேர்தல் அமைதியாக நடந்தது என்றும், குறிப்பாக தமிழகத்தில் நன்றாக நடந்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில், இந்தத் தேர்தலிலே வாக்களித்த பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக தமிழ் மக்கள் நல்ல முறையில் வாக்களித்திருக்கிறார்கள். தமிழகத்தின் பண்பிற்கும் பழக்கத்திற்கும் உகந்த முறையில் வாக்களித்திருக்கிறார்கள். கூட்டணி என்று அமைந்திருந்த போதிலும், அதில் குறிப்பாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அது தனித்து இயங்கும் நிலையில் பொது மக்கள் வாக்களித்திருப்பதற்கு நம்முடைய நன்றியறிதல்களை, என் கட்சியின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் பலவிதமான கட்சிகளைக் கொண்ட கூட்டு அமைச்சரவை ஏற்படாமல், தனிப்பட்ட ஒரு கட்சி, திராவிட முன்னேற்றக் கட்சி அமைச்சரவையை அமைக்கும் முறையில் வாக்களித்த வாக்காளப் பெருமக்களைப் பாராட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்பொழுது சொன்னார்கள், இந்தக் காங்கிரஸ்காரர்களே உட்கார்ந்துகொண்டு,



ஒட்டிக்கொண்டு, அகற்ற முடியாமல் இருக்கிறார்கள்; அவர்களை ராணுவத்தை வைத்துத்தான் அகற்ற வேண்டும். ஆகவே, அவர்கள் ஆறு மாதத்திற்கு முன்பே ராஜினாமா செய்துவிட்டு இருந்தால் தான், தங்கள் செல்வாக்கையும் உபயோகப்படுத்தாமல் இருப்பார்கள், மக்களும் பயமின்றி ஓட்டுப் போடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியே ஆண்டுகொண்டு இருந்தும், மந்திரிகளே கூடத் தோற்றுப்போய், மற்றவர்கள் வெற்றியடையும் நிலையில், மக்களுக்கு உரிமை கொடுத்திருக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. இந்தப் பெருமையை காங்கிரஸ் கட்சிதான் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

தேர்தல் அறிக்கையில் கூட குறிப்பிட்டிருந்தார்கள், இப்பொழுது ஆட்சியில் இருக்கும் கட்சிக்காரர்கள்.

"இந்தியாவில் தற்பொழுதுள்ள தேர்தல் முறையில், ஆதரவு தரும் வாக்காளர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்த விகிதப்படி, சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் இடங்கள் கிடைப்பதில்லை. எடுத்துக்காட்டாக, சென்ற தேர்தலில் தொடர்ந்து, காங்கிரஸ் கட்சிக்கு 45 சதவீத வாக்குக்கள் கிடைத்த போதிலும், பாராளுமன்றத்தில் 75 சதவீத இடங்களைப் பெற்றது. எனவே விகிதாசார தேர்தல் முறை கையாளப்பட்டால்தான் மக்களின் ஆதரவை சரியாக வெளிப்படுத்தும் விகிதத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் சட்ட மன்றங்களில் இடங்கள் கிடைக்கும். விகிதாசார தேர்தல் முறையின் அடிப்படைத் தத்துவம், ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன், ஒத்துக்கொள்ளப்பட இந்த நாட்டுக்கு ஏற்ற வகையில் தேர்தல் முறையை மாற்றியமைக்க கழகம் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளும்" என்று. ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் அந்தக் கட்சி அந்தக் கருத்தை இப்பொழுதும் வலியுறுத்துவார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், தேர்தல் கணக்குகளைப் பார்த்தால், 1962-ல் திராவிட முன்னேற்றக் கழகம் 27 சதவிகிதம் வாக்குகள்தான் பெற்றது. ஆனால் அது பெற்ற இடங்கள் 50. அதே சமயத்தில், 46 சதவிகிதம் பெற்றிருந்த காங்கிரஸ் 139 ஸ்தானங்களைப் பெற்றிருந்தது. இப்பொழுது, 1967-ல் 41 சதவிகிதம் வாக்குகளை பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் 138 இடங்களைப் பெற்றிருக்கிறது. அவர்களைவிட அதிகமாகக் கிடைத்த 41.43 சதவிகித வாக்குகள் பெற்ற காங்கிரஸ் கட்சி 49 ஸ்தானங்களைத்தான் பெற்றிருக்கிறது. அதே நிலையில், பாராளு மன்றத் தேர்தலைப் பார்த்தால். . . .

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: சதவீதம் பற்றிப் பேசும் போது, 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் 170 இடங்களுக்குத் தான் போட்டிபோட்டது என்பதையும், அதே நேரத்திலே காங்கிரஸ் 234 இடங்களுக்கும் போட்டியிட்டது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதையெல்லாம் தெரிந்து, உணர்ந்து தான் பேசுகிறேன். பாராளுமன்றத்திற்கு, 1962-ல் 31 ஸ்தானங்களையும், 1967-ல் மூன்றே ஸ்தானங்களையும் பெற்றது. 1967-ல் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் 41 சதவிகிதம். இதை நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது சரியில்லை என்பதை எடுத்துக்காட்டவேதான். எத்தனை இடங்களுக்கு போட்டி போட்டோம் என்பதல்ல பிரச்சினை. காங்கிரஸ்காரர்களுக்கும் 63 லட்சம் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே, முழுக்க முழுக்க வாக்காளர்கள் காங்கிரஸ் வேண்டாம் என்று எங்களை பூரணமாக புறக்கணிக்கவில்லை. நாங்களும் 63 லட்சம் வாக்குகள் பெற்றிருக்கிறோம். அப்படி வாக்களித்த மக்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேர்தல் சுமுகமாக நடந்து விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். பாராட்டுக்குரிய விஷயம். ஆனாலும், மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல, தேர்தல் முடிந்ததற்குப் பிறகும் கூட, பல இடங்களிலும் குற்றங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. ஏகப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. அவற்றை அதிகார பூர்வமாக நான் சர்க்காருக்கு அனுப்புகிறேன். நான் குறிப்பிட விரும்புவது, தேர்தல் முடிந்தவுடனே, ஜனநாயகப் பண்போடு நாம் நடந்துகொள்ளவேண்டும். தேர்தல் சமயத்தில் ஏற்பட்ட கசப்புகளை மறந்து விடவேண்டும். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. காங்கிரஸ் ஜெயிக்கலாம்; அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் ஜெயிக்கலாம்; எந்தக் கட்சி ஜெயித்தாலும் சரி, தேர்தல் முடிந்து விட்ட பிறகு ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்க வேண்டும். தேர்தல் வரும்; ஒருவர் வெற்றி பெறலாம்; இன்னொருவர் தோல்வி அடையலாம்; அதைப்பற்றி அக்கறை கிடையாது. ஆனால், இந்த நாட்டிலே, இந்த உலகத்திலே மக்கள் என்பதற்கேற்ற பண்புடன் வாழ வேண்டும். தேர்தலுக்குப் பிறகு நாம் நண்பர்களாக இருக்க வேண்டும். தேர்தலை உடனே மறந்துவிட்டால்தான் நல்லது. அதுதான் நல்ல ஆட்சி நடப்பதற்கும் வழிவகை செய்யும் என்பதிலே எந்த விதமான ஐயமும் இல்லை. தேர்தல் முடிந்து விட்டாலும், கட்சித் தலைவர்கள் ஒரு பக்கம் இருந்தாலும், அதிலுள்ள ஊழியர்கள்—அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நடந்துகொள்ளும் முறை அவ்வளவு நல்லதாக இல்லை என்பதை நான் மிக மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தேர்தல் நடந்துவிட்டது; நீங்கள் ஜெயித்து விட்டீர்கள். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களைப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இனிமேல் தேர்தல் சர்ச்சையைக் கிளப்ப வேண்டாம். ஆட்களை விட்டு அடிக்கச் சொல்ல வேண்டாம். நாட்டில் சுமுகமான நிலை இருக்கவேண்டும். சட்டம், அமைதி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.



இம்மாதம் 19-ம் தேதி, திருவள்ளூரில் ராஜாஜி சாலையில் வசிக்கும் திரு. ஏ. பி. சாமி என்பவர், என்ன என்ன காரியங்களிலே அவர்களெல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள் என்று புகார் எனக்கு அனுப்பியிருக்கிறார். அதோடு மட்டுமல்ல. தேர்தலில் வேலை செய்த காங்கிரஸ்காரர்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கடுமையாகத் தாக்கியதோடு, மேலும் பயமுறுத்திக்கொண்டும் வந்திருக்கிறார்கள் என்று புகார் அனுப்பியிருக்கிறார். அவரவர்கள் கையெழுத்திட்டு எனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. எந்த நிலையிலே எப்படியெல்லாம் இருக்கிறது என்று விவரித்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. தேர்தல் காலத்தில் பெட்டிக் கடைக்கு முன்னால் ஒரு கட்சி விளம்பரத்தை வைத்திருக்கலாம். காங்கிரஸ் கட்சி விளம்பரத்தை வைத்திருந்தால், ஏன் வைத்திருக்கிறார்கள் என்பதுபற்றி எல்லாம் புகார் வருகிறது. இன்றைய ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியாக முன்பு இருந்தபோது, "போலீஸ் அதிகாரிகள் எங்களுக்கு ஆதரவாக இருப்பது இல்லை, காங்கிரஸ்காரர்களுக்குத்தான் ஆதரவாக இருக்கிறார்கள்" என்று சொல்லி வந்த நிலை இப்பொழுது நேர்மாறாக மாறியிருக்கிறது என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 'Congressmen attacked severely by D.M.K.—Position stake—Crave protection immediately.' என்று மீஞ்சூரிலிருந்து எனக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி நிலையில் போனால், நல்ல சூழ்நிலை அமையாது என்பதை தான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, "சிங்காரம், ரத்னம் ஆகியோர் வீண் வம்பு செய்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தீவிர மெம்பர் ரெத்தினம் அவர்களை 17—3—1967 அன்று மாலையில் பலமாக அடித்து விட்டார்கள். மேற்படியாரை நான் திருமானூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பியுள்ளேன். மற்றுமுள்ள காங்கிரஸ்காரர்கள் வீட்டுக்குத் தீ வைப்பதாகவும் சொல்லி மிரட்டிக்கொண்டே இருக்கிறார்கள்." என்றும் எனக்குப் புகார் வந்திருக்கிறது.

இதெல்லாம் சில சமயங்களில் மிகவும் வேதனையையும் வருத்தத்தையும் தரக்கூடிய நிலையாகும். ஆகவே, அமைச்சரவை இதையெல்லாம் கவனித்து, நடந்தது போக, இனிமேல் அம்மாதிரியான காரியங்களில் ஈடுபட வேண்டாம் என்று கழகத்தினருக்கோ அல்லது கழக அனுதாபிகளுக்கோ உத்தரவிட வேண்டும் அல்லது வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை,** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரிடத்தில் அவர்களுடைய கட்சியினர் பல் வேறு இடங்களில் தாக்கப்பட்டதாக வந்திருக்கிற புகார்களை எல்லாம் படித்தார்கள். இப்படி அவர்கள் படிப்பார் என்று தெரிந்திருந்தால், என்னிடத்திலே,

இன்னமும் காங்கிரஸ்காரர்கள் முன்னேற்றக் கழகத்தினரைத் தாக்குவதாகக் கொடுத்திருக்கிற புகார்கள், ஒரு ஏழெட்டு கட்டு இருக்கிறது; எடுத்து வந்திருக்கலாம். ஆனால், அவருக்குப் புகார் வந்ததைப் போல எனக்கும் வந்திருக்கிறது என்று சொல்லி, அது தான் காரணம் என்று சொல்லவில்லை. அவர்கள் இன்றையதினம் வெளியிட்ட அந்தக் கருத்தை—தேர்தல் முடிந்த பிறகு பகை எல்லாம் நீங்க வேண்டும் என்ற கருத்தை—எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து ஒரு பொது அறிக்கையாக மக்களுக்கு அளிக்க வேண்டும். ஆனால் சட்ட மன்றத்தில் பேசுவதற்காகவே புகார்கள் அனுப்பியவர்களை மாலையில் பார்த்து, 'நான் சட்டசபையில் சொல்லி இருக்கிறேன்' என்று அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று நண்பர் அவர்கள் அவற்றை இங்கே படித்திருப்பார்களானால், நானே இதைவிடப் பெரிய கட்டு நாங்கள் கொண்டு வர முடியும். ஆகையால், உள்ளபடியே அந்தப் பகை நீங்க வேண்டும் என்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளைப்பற்றி நான் பேசுகிறபோது சொல்லுகிறேன். ஆனால், எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்டு ஒரு பொது அறிக்கை விடவேண்டும்.

இன்னொன்றும் அவர்கள் சொன்னார்கள். இதுவரை நடந்தது நடந்துவிட்டது; போகட்டும்; இனிமேல் உங்கள் ஆட்களை அடிக்கச் சொல்லாமல் இருங்கள் என்று சொன்னார்கள். உங்கள் ஆட்களை என்று அவர்கள் சொன்னார்கள். இது மிராசுதார்கள் பாஷை. எனக்கு அப்படிப் பேசி பழக்கமில்லை. எங்களிடத்தில் அடியாட்களும் இல்லை. ஆட்களை விட்டு அடிக்கச் சொல்லும் பழக்கமும் கிடையாது. ஆனால், ஆட்களை விட்டு அடிக்கச் சொன்னதாக அவர்கள் சொன்னார்களே, அவையெல்லாம் நடந்து விட்டவை என்று நான் ஒத்துக்கொள்ள முடியாது. என்னிடத்தில் உள்ள புகார்களையும் அவர்களிடத்தில் உள்ள புகார்களையும் நடு நிலையிலே உள்ள மூன்று பேர்களைக்கொண்ட ஒரு குழு அமைத்து விசாரிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். அவரிடத்தில் புகார் கொடுத்தவர்கள் தயாராக இருப்பார்களானால், அதைக் கூட வைக்கலாம். ஆனால், வைத்து அதன் மூலம் பகை வளரத் தேவை இல்லை. எல்லோரையும் உட்கார வைத்து, ஒவ்வொரு ஊருக்கும் சென்று, சமரசமாகப் பேசி, இனி அந்தப் பகை வேண்டாம் என்று நாம் வலியுறுத்துவதை மேற்கொள்ளுவதாக இருந்தால் நான் அதை வரவேற்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்காகச் சொல்லுகிறேன். நான் குறிப்பிட்டது எல்லாம் வாக்காளர் பெருமக்களை உயர்வாகச் சொன்னதே தவிர, மறந்து கூட ஏதாவது சொல்லியிருந்தால், தயவுசெய்து யாரும் அதைக் குறைவாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நான் பேசும்படியான நிலையில் தவறுதலாக ஏதாவது வந்திருந்தாலும் கூட, அவர் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய கட்சியினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராக இருக்கிறார். ஏற்கனவே இருந்த சட்ட மன்றத்திலும், இப்பொழுது இருக்கும்படியான சட்ட மன்றத்திலும் சில சட்ட சம்பிரதாயங்களெல்லாம் உண்டு. சட்டம், சம்பிரதாயங்கள் எல்லாம், சட்டசபை நடப்பதற்கோ அல்லது ஆட்சி நடப்பதற்கோ 'கான்ஸ்டிட்யூஷன்' என்னும் நிலையில், அதனுடைய அடிப்படையில், அனுசரிக்கப்பட வேண்டியிருக்கின்றன. ஆனால், சட்டப்படியே நடக்க முடியுமா என்றால், எல்லாவற்றிலும் சட்டப்படியே நடக்க முடியாது. சில சம்பிரதாயங்களும் மரபுகளும் உண்டு. அந்தச் சம்பிரதாயங்களையும் மரபுகளையும் கடைப்பிடிப்பது தான் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய திறமையையும், அறிவையும், தகுதியையும் மிக உயர்வாக நினைத்துக்கொண்டிருப்பவன் நான். அவர்கள் இந்தத் தமிழகத்தில் சிறந்த முதலமைச்சராக இருக்க வேண்டும் என்பதிலே எந்த விதமான குறைவான எண்ணமும் என்னிடத்தில் இல்லை. என்றாலும், சட்ட மரபு, சம்பிரதாய மரபு, இந்தச் சட்ட சபையிலும் சரி, மற்ற சட்ட சபைகளிலும் சரி, அனுசரிக்கப்பட்டு வருகிறதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கட்சிச் சார்பாக ஒருவர் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறார். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். எந்த சபைக்கும் தேர்ந்தெடுக்கப்படாமலே கூட அவர்கள் ஆறு மாதங்கள் முதலமைச்சராகக் கூட இருக்கலாம். ஆனால், ஆறு மாதங்களுக்குள்ளாக, ஏதாவது ஒரு சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் மேல் சபைக்கு அவருடைய தேர்தல் விண்ணப்பத்தை அனுப்பியிருக்கிறார். நிச்சயமாக அவர் ஜெயிப்பார் என்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. மேல் சபை ஒன்றில் மட்டுமல்ல; இன்று தமிழகத்தில் எந்தத் தொகுதியில் அவர் தேர்தலுக்கு நின்றாலும், நிச்சயமாக அவர் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை என்னிடத்தில் இருக்கிறது. (ஆளுங் கட்சித் தரப்பில் ஆரவாரம்) அவர் நிச்சயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துவிடுவார் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், முதலமைச்சராக இருக்கும் சமயத்தில், இந்தச் சபையினுடைய உரிமை எங்களுக்குப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலையிலேதான், ஒரு சில சம்பிரதாயங்கள் காக்கப்பட வேண்டும் என்று நான் சொல்லுகிறேன். ஃபைனான்ஸ் போர்ட்ஃபோலியோவானது, இந்தச் சட்டசபைக்குப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருடைய கையில் தான் இருக்கவேண்டும் என்ற ஜனநாயக மரபு இதுவரையில் இந்தச் சபையில் அனுசரிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல.

பிரிட்டிஷ் பார்லிமென்ட்டில் அனுசரிக்கப்படும் சம்பிரதாயங்களையும் மரபுகளையும்தான் நாம் அநேகமாக, ஓரளவிற்கு நடைமுறையில் கொண்டுவந்திருக்கிறோம். அங்கே பிரதமராக வருபவர் ஹௌஸ் ஆப் லார்ட்ஸ்ஸில் இருந்து வந்தாலுங்கூட, அவர்கள் நியாயமாக மறுபடியும் ஹௌஸ் ஆப் காமன்ஸ்ஸால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இதை உதாரணமாக ஏன் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் சென்ற தடவை விளக்கம் சொன்னார்கள். 1923-ஆம் வருஷம் லார்டு கர்ஸன் என்பவர் கன்ஸெர்வெடிவ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; அவர் மேல் சபையிலே இருக்கக்கூடியவர். ஆனால், அப்பொழுது இருந்த மரபுப்படி, மேன்மை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் ஆட்சிக் காலத்தில், எதிர்க்கட்சித் தலைவர் அங்கே பார்லிமென்டில் சொன்னதை இப்பொழுது நான் படிக்கின்றேன். அதாவது

'The Labour Party had indicated that it would be irksome for them, as His Majesty's Opposition, were the Prime Minister to be a member of the Upper House. Balfour had intervened to suggest that Curzon was temperamentally unsuited to guide the destinies of the country in a democratic age. Certain leading Conservatives—Lord Long, Lord Salisbury, Mr. Amery and others—had also conveyed to Buckingham Palace their serious misgivings. The cumulative effect of these representations was to reverse the previous decision. And thus Baldwin drove to Buckingham Palace in Lord Curzon's place.'

கீழ் சபையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பால்ட்வின் அவர்களைக் கூப்பிட்டு, மந்திரி சபை அமைக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

முதல் அமைச்சரைப்பற்றிப் பிரச்சினை கிடையாது. நம்முடைய நாட்டிலே கூட, திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை எப்பேர்ப்பட்ட நிலை? அந்த நிலை எப்பேர்ப்பட்ட நிலை என்றால், மதிப்பிற்குரிய லால் பகதூர் சாஸ்திரி இறந்து, திருமதி இந்திரா காந்தி இடைக்காலத்தில் வந்த சமயத்தில், எந்த விதமான தேர்தலும் உடனே நடத்த முடியாத ஒரு நிலை. ஆனால், உடனடியாக 1967-ஆம் வருஷத்திலே நடந்த பொதுத் தேர்தலுக்கு நின்றுதான் வந்திருக்கிறார். முதல் அமைச்சராக இருக்கலாம். பிரதம மந்திரியாகக்கூட இருக்கலாம். ஆட்சேபணை இல்லை. பிரதம மந்திரியாக திருமதி இந்திரா காந்தி வந்தவுடனே நிதி இலாக்காவை திரு. டி. டி. கே. அவர்களிடமிருந்து மாற்றின சமயத்தில், பாராளு மன்றத்தில் (லோக் சபா) இருக்கும்படியான திரு. சசீந்திர சௌத்திரிக்குத்தான் நிதி இலாக்காப் பொறுப்பு கொடுக்கப்பட்டது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அது மட்டுமல்ல. நம்முடைய சட்டசபையிலேயே 1952-ஆம் வருஷத்தில் ராஜாஜி அவர்கள் வந்தார்கள். நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அவர்களைத் தேர்ந்தெடுத்தோம். உடனே என்ன ஆயிற்று? நம்முடைய இப்போதைய





முதல் அமைச்சர் மேல் சபைத் தேர்தலுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார். அதுகூட இல்லாமல், ராஜாஜி அவர்கள் மேல் சபைக்குக் கவர்னர் நியமனம் மூலமாக வந்தார்கள். அப்பொழுது வந்தபோது, இப்பொழுது ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் என்ன என்ன சொன்னார்கள் என்பதை இப்பொழுது நான் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று நான் நினைக்கின்றேன். அவர் வந்தவுடனே இந்தச் சபையில் இருந்த மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்குத்தான் நிதி இலாக்காவை ஒப்படைத்தார்கள். கற்றுக்கொள்ளுவதற்காக சுப்பிரமணியம் அவர்களிடம் ஒப்படைத்தார்கள் என்று சொல்வார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய நிலைமை இல்லை என்பதை நான் மிகப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என் அண்ணாதுரை :** தனக்கு ராஜாஜி அவர்கள் கற்றுக்கொடுத்ததாக திரு. சுப்பிரமணியம் அவர்களே என்னிடம் சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எத்தனையோ விஷயம் கற்றுக் கொடுத்தார். உங்களுக்கும்தானே கற்றுக் கொடுத்திருக்கிறார். இப்பொழுதும் கற்றுக் கொடுத்துக்கொண்டு வருகிறார். அடுத்தபடியாக, திரு. காமராஜ் வந்தார். அவர் வந்தவுடனே, முதலிலே எந்தச் சட்டசபை தொகுதியிலாவது நின்று வெற்றி பெற்று வராது நான் முதலமைச்சராக இருக்க மாட்டேன் என்று சொல்லி, அவருடைய தொகுதி அல்ல; குடியாத்தத்தில் நின்று வெற்றி பெற்று வந்தார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். நீங்கள் ராஜாஜியிடம் போய் வேண்டுமானாலும் கேட்கலாம். அவர் முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டவுடனே, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து அவருக்கு ஒரு தாக்கீது அனுப்பப்பட்டது. 'நீங்கள் அடுத்த ஆறு மாதத்திற்குள் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டே முதலமைச்சராக இருக்க வேண்டும்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் எத்தனையோ வேலை செய்கிறார்கள். இதை மறைக்கவா முடியாது.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு, இன்னொரு விஷயத்திற்குப் போவதால், முன்னர் சொன்ன விஷயத்தைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். திரு. காமராஜ் அவர்கள் சட்ட மன்றத் தேர்தலுக்கு குடியாத்தத்தில் நின்றபோது, அப்போது எதிர்க்கட்சியாக இருந்த நாங்கள் அவர் எப்படியும் வெற்றிபெற வேண்டும் என்பதாலே அவரை ஆதரித்தோம். அந்தப் பண்பை நான் கேட்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போதுள்ள முதலமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்தில் எந்த இடத்தில் தேர்தலுக்கு நின்றாலும் நிச்சயம் ஜெயித்து வருவார் என்றுதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவர் குறிப்பிட்ட பண்பைப்பற்றி அவர் நிச்சயமாக என்னிடத்தில் எதிர்பார்க்கலாம்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 30

நான் குறிப்பிட வந்தது, நல்ல சம்பிரதாயத்தை நாம் காப்பாற்றியாக வேண்டும். நிதியமைச்சராக இருக்கக்கூடியவர் மக்களால் இந்தச் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராகத்தான் இருக்க வேண்டுமென்பது ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகிறது. திரு. விநாயகம் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோதே நமது முதலமைச்சர் அவர்கள், "அதை யார் இல்லையென்று சொன்னது?" என்று குறிப்பிட்டார்கள். நான் வற்புறுத்திக் கூறிக்கொள்வது, இந்தச் சட்ட மன்றத்தில் இருக்கிற எங்கள் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இந்தச் சட்டமன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள ஒருவர்தான் நிதியமைச் சராக இருக்கவேண்டுமென்ற சம்பிரதாயத்தை-நல்ல மரபை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மேல்சபை உறுப்பினராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள், நிதி ஒதுக்கீடு மசோதாவை இந்த மன்றத்தில் கொண்டு வரவில்லையா? என்றார்கள். அப்போது திரு. பக்தவத்சலம் அவர்கள் நிதியமைச்சராக இருந்தார். அமைச்சரவைக்கு ஒரு கூட்டுப் பொறுப்பு உண்டு. திரு. பக்தவத்சலம் அவர்கள் ஊரில் இல்லாத காரணத்தால், அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்பைப் பெற்றுள்ள திரு. வெங்கட்ராமன் அவர்கள் அந்தப் பணியை ஆற்றினாரே தவிர வேறில்லை. அந்தந்த இலாகா அமைச்சர்கள், அந்தந்த இலாகா சம்பந்தமான காரியங்களைச் செய்ய வேண்டு மென்பது இப்போதுகூட கிடையாது. காரணம் அமைச்சர வைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. யார் வேண்டுமானாலும் செய்யலாம். மேல்சபை விதிகளில் 154-வது விதி

'No recommendation shall be proposed to any of the clauses of such a Bill which will have the effect of varying the amount or altering the destination of any grant so made or of varying the amount of any expenditure charged on the Consolidated Fund of the State.' என்று இருப்பது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆக, இந்த சட்ட மன்ற உறுப்பினராக உள்ள ஒருவர்தான் நிதி இலாகா பொறுப்பை ஏற்க முடியும் என்கிற சம்பிரதாயத்தை அவர் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, இத்துடன் அந்த விஷயத்தை விட்டு வேறு விஷயத்திற்குப் போகிறேன்.

அடுத்தபடியாக, எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. காங்கிரஸ் கட்சி எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக் கிறது. சில தவறுகளும் ஏற்பட்டிருக்கலாம். அதைப்பற்றி இப்போது நான் ஒன்றும் சொல்லவில்லை. இன்றைக்கு ஆளும் கட்சியிலுள்ள உறுப்பினர் ஒருவர் பேசியதைப் பார்த்தால், அவர் முன்பு எதிர்க் கட்சியில் இருந்த ஞாபகத்திலேயே இப்பொழுதும் அவர் அப்படிப் பேசுகிறாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்கிற குறளை சர்க்கார் தரப்பிலேயிருந்து பேசிய ஒருவர் குறிப் பிட்டார். சொல்லுவது எல்லாம் சுலபம். சொன்னவற்றை



1967 மார்ச் 30] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

யெல்லாம் செயல்படுத்த முற்படுகிறபோதுதான் அதிலுள்ள சிரமங்கள் தெரியும். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை; இப்படிச் சொல்லவில்லை என்கிற நிலையெல்லாம் ஏற்படும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள். அதிகாரத்தில் இருக்கிறார்கள். அவர்கள் மக்களுக்கு எத்தனையோ வாக்குறுதிகள் கொடுத்திருக்கலாம். சிலவற்றைச் செய்ய முடியும், சிலவற்றைச் செய்யமுடியாமல் போய்விடும். நான் அதைப்பற்றியெல்லாம் சொல்லவில்லை. ஆனால் ரூபாய்க்கு 3 படி அரிசி என்று குறிப்பிட்ட வாக்குறுதியை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திரு. ஆசைத்தம்பி அவர்கள் கூட ஒரு ஜோசியக்காரர் குறிப்பிட்டுள்ளதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிச்சய மாக ரூபாய்க்கு 3 படி நொய்யரிசியாவது கிடைக்கும் என்று சொன்னார்கள். நானும்கூட ஒரு ஜோசியர் கதையை இந்த இடத்தில் சொல்வது தவறாக இருக்காது என்று நினைக்கிறேன். ஒரு ஜோசியர் ஒருவர் வீட்டிற்குச் சென்றார். அந்த வீட்டுக்கார அம்மாளுக்கு அது பிரசவ காலம். ஆக, அந்த வீட்டிலுள்ளவர்கள் அவரைச் சுற்றிக்கொண்டு, என்ன குழந்தை பிறக்கும் என்பதாக ஜோசியம் கேட்டார்கள். நிச்சயமாக ஆண் குழந்தைதான் பிறக்கும் என்று அந்த ஜோசியர் சொன்னார். அதன் பிறகு பெரிய விருந்து எல்லாம் நடந்தது. ஜோசியர் வீட்டிற்குச் செல்லும் போது, ஒரு காகிதத்தில் எதையோ எழுதி, அதை வீட்டுக் கூரையில் செருகிவிட்டு, "இதோ எழுதி வைத்திருக்கிறேன் பாருங்கள். குழந்தை பிறந்த பிறகுதான் அதை நீங்கள் எடுத்துப் பார்க்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போனார். சில நாட்கள் கழிந்த பிற்பாடு அந்த அம்மாளுக்குக் குழந்தை பிறந்தது. அது பெண் குழந்தை. வீட்டுக் கூரையில் எழுதி வைத்துள்ள காகிதத்தை எடுத்துப் பார்த்தால் அதில் பெண் குழந்தை என்று ஜோசியர் எழுதியிருந்தார். 'என்னய்யா? பெண் குழந்தை பிறந்துவிட்டது?' என்று அந்த ஜோசியரிடத்தில் கேட்டதற்கு, 'உங்களைத்தான் நான் எழுதி வைத்ததைப் பாருங்கள் என்று சொன்னேனே, என்று சொன்னாராம். அப்படித் தேர்தல் அறிக்கை யில், எதை எதையோ எழுதிக் கொடுத்துவிட்டு, ஜோசியர் இப்படி சொல்லியிருக்கிறார் என்று சொல்வதில் பயனில்லை. அவர்களது பத்திரிகைகளிலேயே வந்துள்ள செய்திகளிலிருந்து ஒன்றிரண்டு குறிப்பீடுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். "கழக ஆட்சியில் ரூபாய்க்கு 3 படி அரிசி"—காமராஜருக்கு அறிஞர் அண்ணா பதில் என்கிற தலைப்பில் (25—10—1966 முரசொலி) வந்துள்ளது. "கழகம் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 3 படி அரிசி போட முடியுமா? என்று காமராஜர் கேட்டதற்கு, அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு நடைபெற்ற நிதியளிப்புத் தேர்தல் கூட்டத்தில் பதிலளித்தார்.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் 3 படி போட முடியுமா—முடியாதா என்பதல்ல பிரச்சினை. போட வேண்டுமா, போட வேண்டாமா என்பதுதான் கேள்வி. போடுகி றோமோ இல்லையா என்பதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 30

ஆலையிலே பாடுபடும் தொழிலாளர்களைக் கேட்கிறேன்—விவசாயி களைக் கேட்கிறேன்—சிறு கடை வைத்திருப்பவர்களைக் கேட் கிறேன்—அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்களை—பல்கலைக் கழகப் பேராசிரியர்களை—ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களை—நடுத்தர குடும்பத்தினரைக் கேட்கிறேன்.

எப்படிக் கிடைக்கும் என்று கேட்பதைவிட—கீழ்த்தரமாக தூற்றுவதைவிட ஆட்சியை 1967-ல் ஒப்படைத்து 1968-ம் ஆண்டு முடிந்து, 1969-ம் ஆண்டு வருகிற நேரத்தில் என்னையோ, அல்லது ஆட்சியில் யார் இருக்கிறார்களோ அவர்களையோ இதே கடலூர் திடலில் நிறுத்தி, அதர்மக்காரனே, அயோக்கியனே, ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவதாக ஓட்டுக் கேட்டாயே—கொடுத்தோமே, செய்தாயா?' என்று கேட்டால் அது ஆண்மகன் செய்கிற காரியம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டால் 3 படி அரிசி போட முடியுமா என்று கேட்பீர்களானால், திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன். நிச்சயமாகப் போட முடியும். விவசாயப் பெருங்குடி மக்களைக் கெடுக்காமல் நடுத்தர மக்களை வாழ வைக்க முடியும்."

நண் பகல். 12-00 **மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை**. கனம் உறுப்பினர் கொஞ்சம் மன்னிக்க வேண்டும். அவர் படித்துக் காண்பிக்க வேண்டிய பகுதியை படித்து காண்பித்து விட்டார் என்று நினைக்கிறேன். அதில் 1967-ல் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 1968, 1969-ல் ஒரு வருடம், இரண்டு வருடம் கழித்துப் பாருங்கள். நாங்கள் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றித் தருகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கும். இரண்டு வருடத்திற்குப் பிறகு, இந்தக் கேள்வி வரும்படியான நிலைமை இருக்காது. இந்தக் கேள்வி வரும்படியான நிலைமைக்கு நாங்கள் நடந்துகொள்ள மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்களிடம் எனக்கு நம்பிக்கை உண்டு. நான் சொல்ல வந்தது என்னவென்றால், எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்புத் தரவில்லை, ஒத்துழைப்புத் தரவில்லையென்று சொல்கிறீர்களே, கொள்முதலை எடுத்துக் கொள்ளுங்கள், அன்றைய தினமே நான் கொள்முதல் திட்டத்திற்கு ஒத்துழைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் நாங்கள் சொல்வது எல்லாம் நியாயமான முறையில் நடைபெற வேண்டுமென்பதுதான். நியாயமான முறையில் நடைபெறுகிறதா என்றால், இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு லிஸ்ட் கொடுத்திருக் கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் வீடாகப் பார்த்து, அவர்களுடைய விரோதிகளுடைய வீடாகப் பார்த்து.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், கனம் எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிற குற்றச்சாட்டிற்கு ப்ரூஃப் இருக்கிறதா என்று கேட்கிறேன்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** என்னிடத்தில் நிறைய ப்ரூஃப் இருக்கின்றன. இன்றைக்குக்கூட ஒரு தந்தி வந்திருக்கிறது.



1967 மார்ச் 30] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

" Cheranmahadevi Divisional Officer unlawfully manhandled me and others by using vulgar language, by attempting to tie my hands behind back, by beating my relation and forcibly bringing a woman by hair from kitchen in course of procurement. We possess below one and half acres and agreeing to measure levy paddy. His action highhanded. Pray enquiry and necessary action ".

இப்படி 1½ ஏக்கர் நிலம் இருக்கும்படியான விவசாயியின் வீட்டிலே கொள்முதல் என்ற அடிப்படையில் மிக வருந்தத்தக்க முறையில் நடந்திருக்கிறது. நான் அன்றைக்கே குறிப்பிட்டேன். ஹைகோர்ட்டுக்கு வழக்குப் போயிருக்கிறது என்றார்கள். ஹைகோர்ட்டிலே நியாயமான முறையில் கொள்முதல் செய்யப் பட்டதா, இல்லையா என்பதைப் பரிசீலனை செய்து தீர்ப்புக் கொடுத்தார்களா? அதற்குள் இவர்களே சமாதானமாகப் பேசி வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். 237 மூட்டைகளைக் கைப்பற்றியதில் 132 மூட்டைகளை சாப்பாட்டிற்காகவும், விதைக் காகவும், மற்றச் செலவுகளுக்காகவும் அவர்கள் தங்கள் கையிருப்பில் வைத்திருக்கலாம் என்பதாக விடுவித்திருக்கிறார்கள் என்பதாக ஞாபகப்படுத்துகிறேன். கொள்முதல் செய்யும்போதே இந்த நியாயமான முறையில் நடந்து கொண்டிருக்கலாம். ப்ரொக்யூர்மெண்ட் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், நியாயமான முறையிலே நடைபெற வேண்டுமென்பதைத் தான் நாங்கள் வற்புறுத்திக் கூறி வருகிறோம். முதலமைச்சர் அவர் கள் மிக அழகாகச் சொல்லிவிடுகிறார்கள். நல்ல பேச்சுத் திறன் படைத்தவர்கள், நல்ல எழுதும் திறன் படைத்தவர்கள், பேச்சுத் திறனோ, எழுத்துத் திறனோ எங்களுக்கு இல்லையென்பதை ஒத்துக் கொள்கிறேன். தீவிரமாகக் கொள்முதல் செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் நியாயமான அடிப்படையில் எந்த நடவடிக்கையும் உறுதியாக எடுத்துக்கொள்ளுங்கள், நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** வேறு விஷயத் திற்குப் போவதால் ஒன்றைக் குறிப்பிட்டுவிட விரும்புகிறேன். அதிகாரிகள் காங்கிரஸ்காரர்களின் வீடாகப் பார்த்து நெல் கொள்முதல் செய்வதாக குறிப்பிட்டார்கள். கொள்முதலுக்கு அரிசி எடுத்ததில் தேர்தலுக்கு நின்ற எங்கள் கட்சியை சேர்ந்த ஓர் உறுப்பினரின் மாமனார் வீடே இருக்கிறது. கொள்முதலுக்கு அரிசி எடுத்தவர்கள் எல்லோரும் காங்கிரஸ்காரர் அல்ல என்பதற் காகக் குறிப்பிடுகிறேன். இப்போது இருப்பது எங்களுடைய ஆட்சியாக இருக்கலாம். ஒரு வருடம், ஒன்றரை வருடத்திற்கு முன்பாக வரி பாக்கிக்காக, கள்ளத்தனமாக பணம் வைத்திருப்பதைக் கண்டுபிடிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கட்சியின் ஆட்சியில் நடவடிக்கை எடுத்துக் கொண்டபோது, அதில் சிக்கிக் கொண்டவர்கள், பிடிபட்டவர்கள், கண்டுபிடிக்கப்பட்டவர்கள் மிகப் பெரும்பாலோர்கள் காங்கிரஸ்

காரர்கள்தான் என்பதும், அவர்களில் ஒருவர் இந்தச் சட்ட மன்ற உறுப்பினராகவே இருந்தார் என்பதும் நம் எல்லோருக்கும் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் எங்கள் கட்சி ஆட்சியில் இருந்த போது எவ்வளவு நேர்மையாகவும், பாரபட்சம் அற்ற முறையிலும் நடந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் விளக்கும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை:** அவரது ஆட்சி நேர்மையானதா, பாரபட்சமற்ற முறையில் நடந்துகொண்டதா என்பதைவிட எப்படிப்பட்டவர்கள், எப்படிப்பட்டவர்களை அவர்கள் தங்கள் கட்சியில் வைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நீங்களும்கூட இன்னும் ஐந்து வருடத்தில் போகப்போக யார் யார் உங்களிடத்தில் இருப்பார்கள் என்று பார்த்துக் கொள்ளலாம். இந்தக் கொள்முதல் சரியாக நடக்க வேண்டுமென்றுல் கறுப்பு மார்க்கெட் இல்லாத நிலைமையை செய்தாக வேண்டும். சர்க்கார் இந்த தானிய வர்த்தகத்தையே எடுத்துக்கொள்ள வேண்டும். ரைஸ் மில்களை எல்லாம் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். இன்றைக்கு கொள்முதல் கெடுபிடியாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சின்னக் கதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தாராம். அவர் ஓர் உத்தரவு போட்டாராம். "நான் கொடுக்கிற அளவு நெல்லுக்கு அதே அளவு அரிசி கொடுக்கவேண்டும்" என்பதாக. ராஜா உத்தரவு. ஆகவே ஜனங்களும் அவர் கொடுக்கிற நெல்லுக்கு அதே அளவு அரிசி கொடுத்து வந்தார்களாம். தன் மகன் பட்டத்திற்கு வந்தபோது அந்த ராஜா தன் மகனைப் பார்த்து, "நீயும் இந்த வகையில் நீதி பரிபாலனம் செய்யவேண்டும்" என்று சொன்னராம். மகன் பட்டத்துக்கு வந்தவுடன்—நெல்லை கொடுத்து அதே அளவு அரிசியை பெறுவானேன். நாம் உமியைக் கொடுத்து அதே அளவு அரிசி தரவேண்டும் என்பதாக உத்தரவு போடுவோம் என்று உத்தரவு போட்டானும். அந்த அளவு முந்திய சர்க்காரைவிட இந்த சர்க்காரில் கொள்முதல் கொள்கை வளர்ந்து இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை:** வேடிக்கையான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு சிறு விளக்கம். இந்தக் கதையை மேல் அவையிலும் சொன்னர்கள். இவர் சொல்லி அவர் சொன்னரா? அல்லது அவர் சொன்னதைக் கேட்டு இவர் சொல்கிருரா? (சிரிப்பு).

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மேல் சபையில் சொன்னது எனக்கு தெரியாது. கதை சொல்ல எனக்கும் தெரியும் இப்போதுள்ள ஆட்சி அந்த முறையில்தான் இயங்கி வருகிறது.



மாணவ சமுதாயம் நல்ல முறையில் இருக்க வேண்டும். அவர்கள் அரசியலில் கலக்கக் கூடாது, அவர்களை அரசியல் கட்சிகளும் அரசியலுக்கு இழுக்கக் கூடாது. இதை நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனல் இன்றுள்ள நிலையில் அவர்கள் எவ்வாறு இழுத்துச் செல்லப் படுகிருர்கள் என்பதைப் பார்க்கிறபோது வருத்தப்படவேண்டிய நிலை இருக்கிறது. கல்லூரி மாணவர்களை விடுங்கள். உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடத்திலே ஆசிரியர்கள் எந்த வகையில் மனத்தைக் கெடுத்து வருகிருர்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளாது இருக்க முடியாது. கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் குறிப்பாகக் கொண்டு வருகிறேன். இது தற்போது நடந்த விரிட்சை வினுத்தாள். அதுவும் சத்தியமங்கலம் சர்க்கார் உயர்நிலைப்பள்ளியில், 7-வது வகுப்பு 'சோஷியல் ஸ்டடீஸ்' சப்ஜெக்டின் வினுத்தாள். அதிலே உள்ள ஒரு கேள்வியைப் பாருங்கள். "தமிழக அரசியலில் 1967-ம் ஆண்டு நிகழ்ந்த மாறுதல் யாது?" இது ஒரு கேள்வி. இன்னொரு கேள்வியைப் பாருங்கள். "கோபிச்செட்டிபாளையம் தொகுதியில் தேர்தலுக்கு நின்று தோற்றுப்போன மத்திய அமைச்சர் பெயர் என்ன? அவரைத் தோற்கடித்தவர் பெயர் என்ன?"

இந்த நிலையில் உயர்தர ஆரம்பப் பள்ளியில் படிக்கிற 7-வது வகுப்பு மாணவனுக்கு ஆண்டு நிறைவுப் பரிட்சையில் கேள்வி கேட்கப்படுகிறது என்றுல், நான் பொதுமக்களுக்கு விட்டு விடுகிறேன், படித்த அறிவாளிகளுக்கு விட்டுவிடுகிறேன். இப்படி மாணவ சமுதாயத்தின் மனம் கெடுக்கப்பட்டால் இந்த நாட்டில் ஒரு குழப்பத்தைத் தவிர வேறு ஒன்றும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரிச் செய்ததின் உள்நோக்கம் என்ன? அவர்கள், அதை ஆதரிப்பார்களோ என்ற சந்தேகம் தான் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் தடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆலோசனை. இப்படிக் கொடுக்கப்படுகின்ற தகவல்களையெல்லாம் வைத்து விசாரித்து இனிமேலாவது வளராமல் தடுக்க வேண்டும். கெட்ட எண்ணங்களை மக்களிடத்திலே உருவாக்கக் கூடாது. மத்திய அமைச்சரை தோற்கடித்த நபர் யார், தோற்ற மத்திய அமைச்சர் யார் என்று எல்லாம் கேள்விகள் பள்ளிகளிலே கேட்பது நல்ல முறையில்லை. உலகத்திலே வேறு எந்தப் பகுதியிலும், எந்தக் கல்லூரியிலும், எந்தப் பள்ளியிலும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது. கல்வியமைச்சர் அவர்கள் பாடங்களையெல்லாம் ஏதோ திருத்தியமைக்கவேண்டுமென்று சொல்லுகிருர்கள். அப்படித் திருத்தியமைக்கும்பொழுது இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு அந்தப் பகுதியை விட்டுவிட்டு, வேறு பகுதிக்குப் போகிறேன்.

இப்பொழுது இருக்கின்ற பிரச்னையெல்லாம் நாட்டிலே தொழில் வளர்ச்சியையும், விவசாய உற்பத்தியையும் பெருக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிருர்கள்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 30

நாங்கள் விலைவாசியைக் குறைக்கும்வரை சம்பளம் வாங்க மாட்டோம் என்று. எதிர்க்கட்சியிலே இருந்து அதைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லவேண்டியது அவர்களுடைய கடமை. ஆனால் அவர்கள் இப்பொழுது சொல்கிறார்கள் "நீங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று".

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அதுதான் இல்லை நான் அப்படிச் சொல்லவில்லை. சம்பளம் இல்லாமல் வேலை செய்வோம் என்று சொன்னதை நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்யவேண்டுமென்று வலியுறுத்துகின்ற நீங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளாமல்போனால் உங்களைப் பற்றி மக்கள் பரிதாபப்படுவார்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்கள், மக்கள் எங்களைப்பற்றி அப்படி நினைப்பார்கள் என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே சம்பளம் இல்லாமல் நாங்கள் வேலை செய்வோம் என்று சொன்னார்களே, சம்பளமே இல்லாமல் வேலை பார்க்கிறேன் என்றால், எப்படி ஐயா சம்பளம் இல்லாமல் வேலை செய்வார்கள் என்று பொதுமக்கள் சந்தேகமாகப் பேசமாட்டார்களா ?

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப்பற்றியும் நான் ஒன்று சொல்லவேண்டும். பொதுமக்களிடத்திலே சொல்லி, நான் அவர்களிடத்திலே பணத்தைப்பெற்றுக் கொள்வதற்கான நம்பிக்கை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்தப் பணத்தைப்பற்றித்தான் சொல்கிறேன். முன்பு பாளையக்காரர், திரு. பூவராகன் இவர்கள் எல்லாம் தேர்தல் நிதி வசூல் செய்தார்கள், அதற்காக ரசீது கொடுத்தார்கள். அவர்கள் அப்படி ரசீது கொடுத்தும்கூட அந்த நேரத்தில் அவர்கள் எல்லாம் ஆட்சேபித்தார்கள். அதையே தவறு என்று சொன்னார்கள். ஆனால் இன்று பொதுமக்களிடம் பணம் பெறுவோம் என்கிறார்கள். போலீஸ்காரன்கூட என்னை சும்மா விட்டுவிடுங்கள், நான் எப்படியாவது வாங்கிப் பிழைத்துக்கொள்கிறேன் என்று சொல்லக்கூடும். நான் இங்கே சொல்வது சம்பளத்தைப்பற்றி மட்டுமல்ல, இங்கே வந்திருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் வசதியுள்ளவர்களா ? ஏழைகளும்கூட வந்திருப்பார்கள். ஆகவே சம்பளம் வாங்கவேண்டும் என்பது கௌரவத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காகத்தான் இருக்கிறது, இந்த 250 ரூபாயும், 1,000 ரூபாயும் அந்த நோக்கத்தில்தான் தரப்படுகிறது. ஆனால் சம்பளமே வாங்காமல் நாங்களும் அப்படிச்செய்ய வேண்டுமென்றால் ஒவ்வொரு வீட்டிலும் உப்பு, மிளகாய் போன்றவற்றை வாங்கிக்கொள்ள நாங்கள் எல்லாம் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் தொழிலிலும், விவசாயத்திலும் சிறந்த முறையிலே முன்னேற வேண்டுமானால், மக்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் ஏற்படாமல் நல்ல முறையில் செய்ய வேண்டும்.



1967 மார்ச் 30]

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** சம்பளத்தைக் குறைத்துக்கொள்வதினாலே நாட்டிலே பெரிய பிரச்னை தீர்ந்து விடாது. நாட்டு மக்கள் படுகின்ற தொல்லைகளை நாமும் உணர்ந்து இருக்கிறோம் என்று காட்டிக்கொள்வதற்குத்தான் 'ஆஸ் எ டோக்கன்' சம்பளத்தைக் குறைத்துக்கொள்வோம் என்று சொன்னோம், இதை மனிதாபிமானமாகக் கருதவேண்டும். கவர்னர் அவர்கள் சம்பளத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொண்டார்கள், அட்வகேட் ஜெனரல் அவர்கள் சம்பளத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக்கொண்டார்கள். பப்ளிக் பிராஸிக்யூடர் அவர்களும் மற்றும் உள்ள மத்திய சர்க்காரிலே உள்ள அதிகாரிகளும் சம்பளத்திலே ஒரு பகுதியைக் குறைத்துக்கொண்டார்கள். சம்பளத்திலே குறைத்துக்கொண்ட தொகையுடன், மக்களுக்கு தேவைப்படுகிற பணத்தை வைத்துக் கணக்குப் பார்த்தால் அது ஓட்டுக்குக்கூட வராது. மக்கள் கஷ்டப்படுகிறபொழுது நாமும் அதை உணர்ந்திருக்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்ளலாம் என்ற மனிதாபிமானத்தோடுதான் அதைத் தெரிவித்தோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியானால் சட்டசபையிலே அதற்காக ஒரு மசோதா அவர்கள் கொண்டுவந்தால், நாங்கள் அதற்கு பரிபூரணமாக ஒத்துழைப்புக் கொடுப்போம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை :** காங்கிரஸ் நண்பர்களுடைய முழு ஆதரவு இருக்குமானால் வருகின்ற ஜூன் மாதத்திலே அதைக் கொண்டுவருவோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் அந்த மசோதாவிற்கு ஆதரவு தருகிறோம்.

தொழில் துறையை எடுத்துக்கொண்டால் சென்னை மாநிலத்திலே சிறந்த முறையிலே வளர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எத்தனையோ பேட்டைகள், எவ்வளவோ அபிவிருத்திகள் பார்க்கிறோம். இந்த ஸ்டேட் டிரேடிங்கை எடுத்து நடத்துங்கள் என்று சொன்னபொழுது முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "சட்டியிலே ஒன்றும் இல்லை, சுரண்டி சுரண்டி பார்த்தோம், ஒன்றும் இல்லை, இருந்தால் தானே வரும்" என்று சொன்னார்கள். நாங்கள் வெறும் சட்டியையா வைத்திருந்தோம் ? 10 வருஷத்திற்கு முன்னாலே வருமானம் 60 கோடியாக இருந்தது. இன்று 204 கோடி ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது. துண்டு விழுகிறது என்று சொன்னார்கள். இதற்கு முன்பெல்லாம் துண்டு விழுகின்றபொழுது இந்தச் சட்டசபையில் அவர்களில் யாராவது இல்லாமலா இருந்தார்கள்? அவர்களுடைய தீர்மானங்களையும் வைத்துக்கொண்டுதானே துண்டு விழுவது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே தவறு, இதிலே தவறு என்று சொல்லாமல் இருக்கவேண்டும். விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தவேண்டுமானால் விவசாயிகளைக் கௌரவமான முறையிலே நடத்த வேண்டும். 'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தார்' என்றெல்லாம் சொல்லப்படுகிற

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 மார்ச் 30

விவசாயிகளுடைய கௌரவம் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அந்த நிலையிலேதான் அவர்களுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுக்க வேண்டும். என்னுடைய நண்பர் திரு. கனகசபை அவர்கள் சொன்னார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அதிகமாகச் சொல்வார்கள் என்று; அதிகமாகச் சொல்ல வேண்டுமென்ற ஆசை எனக்கு இல்லை, இருக்கின்ற நிலையைத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். 3 படி அரிசி வந்தால் சுபிட்சம் வந்துவிடும் என்று சொல்ல முடியுமா? 3 படி அரிசி இருந்த காலத்திலே சுபிட்சம் இருந்ததா என்பதைப் பார்க்க வேண்டும். 1939-40 ஆம் வருடத்திலே 3 படி அரிசிதான் விற்றது. காங்கிரஸ் அல்லாத மந்திரிசபைதான் அமைத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது வங்காளத்திலே 30 லட்சம் பேர்கள் செத்தார்கள்; 3 படி அரிசி விற்றுக் கொண்டிருந்த காலத்திலே (மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: அதிகமாகச் சாப்பிட்டதாலா?) இல்லை, சாப்பாடு இல்லாததாலே செத்தார்கள். காரணம் என்னவென்றால் மக்களுக்கு வேண்டிய தேவைப்பொருள்கள் கிடைக்கவில்லை. விவசாயம், மிக மிகக் கீழ்நிலையில் இருந்தது. அப்பொழுது உற்பத்திச் செலவு 35 ரூபாய் ஆக இருந்தது. ஆனால் இப்பொழுது 400 ரூபாய்க்கு வந்திருக்கிறது. நாம் அதிகமாகக் கொடுப்பதற்குத் தகுந்தவாறு நியாயமான விலையும் இருக்க வேண்டும். உண்டாக்குபவன் நிலையை வைத்துத்தான் விலை நிர்ணயம் செய்யவேண்டும், உண்பவனுடைய நிலையை வைத்து விலை நிர்ணயம் செய்யக்கூடாது. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்று பாரதியார் பாடினார். உழவு சிறந்தால்தான் எல்லாமே சிறக்க முடியும் என்பது என்னுடைய கருத்துமட்டுமல்ல, உலகத்திலே உள்ள எல்லோருடைய கருத்தும் அதுதான். அமெரிக்காவுக்கு நான் 1932 ஆம் வருஷத்திலே சென்றிருந்தேன். அப்பொழுது டென்னஸிவேலிக்கு நான் சென்றபொழுது பார்த்தேன், அங்கே சராசரி ஒருவருக்கு வருமானம் 150 டாலர்தான் இருந்தது. அது அப்பொழுது நமக்கு 300 ரூபாய்க்குச் சமமாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அங்கே 3,000 டாலர் சராசரி வருமானம் வருகிறது. ஒரு தலைக்குச் சராசரி வருமானம் அவ்வளவு அதிகம் எப்படி வந்தது? அங்கேயுள்ள மக்கள் உழைத்தார்கள், உற்பத்தியைப் பெருக்கினார்கள், அரசாங்கம் ஆதரவு கொடுத்ததாலே.

1939-ம் ஆண்டு நிலவரப்படி ஒரு ஏக்கருக்கு 35 ரூபாய் உற்பத்திச் செலவு ஆகும்படியான ஒரு திட்டத்தைக் கொடுப்பார்களேயானால் நாளைக்கே ரூபாய்க்கு 3 படி அளக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். கலியாணம் செய்தால் பைத்தியம் தீரும், பைத்தியம் தீர்ந்தால் கலியாணம் நடக்கும் என்பது போல் இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. அரிசியை வைத்துத்தான் உலகம் சுற்றிக் கொண்டிருக்கிறது; அரிசி விலையை வைத்துத்தான் பொருளாதாரத் தத்துவம் அமைந்திருக்கிறது என்பது 25 வருஷத்திற்கு முன்பு சரியாக இருந்திருக்கலாம். அரிசியின் விலை எந்த



1967 மார்ச் 30] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

அளவுக்குக் குறைந்தாலும் மற்றப் பொருள்களின் விலை குறைக்கப்படுவதில்லை. நம்முடைய வியாபாரிகள், நம்மைச் சுற்றி இருக்கும் வர்த்தக சமூகத்தினர் சீக்கிரமாக லாபத்தைப் பெருக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு இருக்கும்படியான காரணத்தால் கெட்ட சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டிருப்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முன்பு வியாபாரிகள் மூட்டைக்கு இரண்டணா கிடைத்தால் போதுமென்று நினைத்தார்கள்; இன்று மூட்டைக்கு 20 ரூபாய் கிடைத்தால்தான் லாபம் என்று கருதுகிறார்கள். தொழிலாளர்களிடையே கூட இப்போது உழைப்புக்கு ஊதியம் என்ற நிலை கிடையாது; உழைக்காமலே ஊதியத்தைப் பெற வேண்டுமென்று நினைக்கிறார்கள். கடமையைச் செய்து உரிமையைப் பெற வேண்டுமென்ற நிலை இல்லை; கடமையைச் செய்யாமல் உரிமையைப் பெற வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால், கவர்னர் பெருமான் உரையிலே சொல்லப்பட்டிருப்பது போல் அம்மோனியம் சல்பேட்டைப் போட்டு விட்டாலோ, சூப்பர் பாஸ்பேட்டைப் போட்டுவிட்டாலோ உற்பத்தியாகிவிடாது. அதை மட்டும் சொல்லிப் பயன் இல்லை. நான் என்னுடைய விவசாய அனுபவத்தில் இருந்து சொல்லுகிறேன். அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் எல்லாம் போடாமல் மூன்று பங்கு நான் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறேன். கெமிகல் பர்டிலைசர் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய உடம்பே ஒரு கெமிகல் பர்டிலைசர்தான். மக்களுடைய மலஜலத்தைக் கம்போஸ்ட் உரமாக்கிப்போட்டால், 200 ஏக்கருக்குப் போதுமான அளவுக்கு 150 ரூபாய் மதிப்புள்ள அம்மோனியம் சல்பேட் கிடைக்கும். நான் காந்தியக் கொள்கைத் தத்துவத்தில் இருக்கிறவன். செயற்கை உரங்கள் இல்லாமல், இயற்கை உரத்தைப் பயன்படுத்தி நம்முடைய உற்பத்தியைப் பெருக்குவதன் மூலந்தான் நம்முடைய பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று திட்டமாக, உறுதியாக, அனுபவ வாயிலாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மாதிரி நிலையில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால் உணவு உற்பத்திக்கு அடிப்படையாக இருக்கும்படியான பாக்கி இருக்கும் செலவுகளைச் சிக்கனப்படுத்த வேண்டும். அரிசி விலையேற்றத்தை ஒரு இடத்தில் கத்தரித்துத்தான் ஆக வேண்டும். பஞ்சப்படி போன்றவைகளை ஒரு இடத்தில் கத்தரித்துத்தான் ஆக வேண்டும். அதைக் கத்தரிக்க என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

இந்த அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கை பற்றி ஆராய்வதற்காக ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த அதிகாரியினுடைய அறிக்கை இதுவரை வந்ததாகத் தெரியவில்லை. அதிகாரியின் அறிக்கையை வைத்து எந்தெந்த இடத்தில் சிக்கனம் செய்யவேண்டுமென்று பார்க்கும்போது இரண்டு வகையிலே

சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளலாம். இப்போது இருக்கும்படியான உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையைக் குறைத்து மற்றவர்களை ரிட்ரென்ச்மென்ட் செய்யலாம்; இருக்கும்படியான சம்பளத்தைக் குறைக்கலாம். நான் ஒன்று சொல்லுகிறேன். இரண்டும் வேண்டாம். ரிட்ரென்ச்மென்ட் என்று சொன்னால் உடனே உங்கள் கூட்டணியில் உள்ள கம்யூனிஸ்ட் தோழர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்து விடுவார்கள். நான் சொல்ல விரும்புவது—சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். வேலையைத் திறமையாகச் செய்யவேண்டும்; ஒழுங்காகச் செய்ய வேண்டும்; நன்றாகப் பணிபுரிய வேண்டுமென்ற எண்ணத்தோடு இரண்டு பங்கு வேலை செய்தால் அதுவே சிக்கனத்திற்கு அறிகுறி. முன்பு ஓ.பி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடந்த ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. செகரடேரியட்டில் ஒருவர் ஒரு நாளைக்கு எத்தனை ஃபைல்களை டிஸ்போஸ் பண்ணுகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தபோது ஒரு நாளைக்கு 3 பைல்களை டிஸ்போஸ் பண்ணுவதாகக் கணக்கு வந்தது. காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணி வரை ஒருவர் 3 பைல்களைத்தான் டிஸ்போஸ் பண்ணுகிறார்கள் என்றால் பொதுமக்கள் பணம் எவ்வளவு வீணாகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும். உடனே, முதலமைச்சர் அவர்கள் 20 வருஷ காலமாக காங்கிரஸ் ஆட்சி இருந்ததே, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கலாம். அப்போது முயற்சி செய்திருந்திருக்கலாம்; தவறியிருக்கலாம். இப்போது இருக்கும்படியான உங்களை அதைத் திறம்பட செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்க அதிகாரிகள் எல்லாம் ஓரளவுக்குச் சுற்றுப் பிரயாணத்தைக் குறைத்துக் கொண்டாலே செலவிலே சிக்கனம் ஏற்படும். ஒரு அமைச்சர் ஒரு இடத்திற்கு வருகிறார் என்றால் சுற்றுப்புறத்திலுள்ள எல்லா அதிகாரிகளும் அங்கே வர வேண்டுமென்ற நிலை இல்லாமல் இருந்தால் ஓரளவு சிக்கனம் ஏற்படும். இந்த மாதிரி சிறிது சிறிதாகச் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அமைச்சரவை முன் வைக்கிறேன்.

இப்போது இருக்கும்படியான சூழ்நிலையில் கொள்முதல், விநியோகம் பொறுத்தவரை ஒருசில வார்த்தைகளைக் கூறி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கொள்முதல் செய்வதை வேண்டாமென்று சொல்லவில்லை. பத்து படி அரிசி வரை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லலாம் என்று உத்தரவு பிறப்பித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். எல்லோருக்குமே சர்க்கார் விநியோகிப்பதாக இருந்தால் இது தேவையில்லை. விநியோகத்தில் சர்க்காருடைய பொறுப்பு ஓரளவுக்கு மட்டுமே இருப்பதால் அரிசி கிடைக்காத மக்களுக்கு அரிசி கிடைக்கவேண்டுமென்பதற்காகச் செய்த இந்த ஏற்பாட்டை வரவேற்கிறேன். கொள்முதல் செய்வதிலே கம்பல்சரி ப்ரொக்யூர்மென்ட், லெவி சிஸ்டம் என்று இரண்டு முறை இருக்கிறது. கம்பல்சரி ப்ரொக்யூர்மென்ட் என்றால்,





தேவைக்குப் போக பாக்கி இருப்பதை எல்லாம் எடுத்துக் கொள்ளும் முறை. அந்த முறை சரியாக நடந்ததாகத் தெரியவில்லை. அதில் தலையிடுவது மூலமாகத்தான் கட்சிப் பாகுபாடு, ஆள் பாகுபாடு, ஏழை பணக்காரன் என்ற நிலை எல்லாம் வருகிறது. அதற்காகத்தான் லெவி சிஸ்டத்தில் கொள்முதல் செய்தால், குத்து மதிப்பாக ஒருவனுக்கு இவ்வளவு ஏக்கர் இருந்தால் இத்தனை மூட்டை கொடுத்து விட வேண்டும் என்று செய்தால் அதிலே சிரமம் இருக்காது. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலும் 100 பட்டாதார்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்குள்ளேயே கருத்திருமன் கொடுத்தாரா, அவர் கொடுத்தாரா, இவர் கொடுத்தாரா என்ற சந்தேகம் அதிகமாகிக் கொண்டே போகும். ஆகவே, ஒவ்வொரு பட்டாதாரும் இவ்வளவு ஏக்கர் இருந்தால் இவ்வளவு நெல் கொடுத்து விட வேண்டுமென்று மக்கள் அறியும்படி அறிவித்து விட வேண்டும். அப்படிச் செய்து விட்டால் அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறதா, எல்லோரும் கொடுத்திருக்கிறார்களா என்று பாரபட்சம் இல்லாமல் மக்கள் பார்த்துக் கொள்வார்கள். இப்போது கொள்முதல் செய்யப்படுகிறதே, ஏன் சர்க்கார் போன மாதங்களில் கொள்முதல் செய்யவில்லை என்று கேட்கலாம். இப்போது அறுவடை கொஞ்சம் அதிகமாகத்தான் வந்திருக்கிறது. சட்டப்படி கணக்குச் சொல்லவேண்டுமென்றால் அறுவடை செய்து அளந்த பிறகுதான் சொல்ல முடியும். அறுவடை ஆகாமலே குத்து மதிப்பாக இவ்வளவு வரும் என்று சரியாகச் சொல்ல முடியாது. ஆகவே, முதலிலே அக்விசிஷன் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். சட்டப்படி இத்தனாம் தேதிக்குள் விவசாயிகள் தங்களுடைய கணக்கை அறிவித்துவிட வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்க வேண்டும். ஒரு மாதத்திற்குள் அளிக்கவில்லை என்றால் பிறகு அக்விசிஷன் அதிகாரிகள் போய் எடுத்துக் கொள்ளலாம். அதிலும் முறையாக ரெவினியூ ஆபிசர்கள், தாசில்தார்கள் போய் எடுத்தால் பாதகம் இல்லை. போலீசார் தலையிடாமலிருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பது நல்லது. மூட்டையை அடுக்கி வைத்து விட்டு பூஜை அறை என்று போர்டு போட்டு விடுவதாகச் சொன்னார்கள். அந்த மாதிரி தவறுகள் நடப்பதற்கில்லை என்று நான் சொல்வதற்கில்லை. அவ்வாறு தவறு செய்கிறவர்கள் பூஜை அறை என்று போட்டு விட்ட காரணத்தால் அங்கு சென்று எடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. மனிதனுக்குப் பூஜை இல்லாமல் அந்த பூஜையை நினைத்துப் பயன் இல்லை. அந்த நிலைமையிலும் கண்ணியமாக நடக்க வேண்டும்; கவுரவமாக நடக்க வேண்டும். லெவி சிஸ்டம் ஆப் ப்ரொக்யூர்மென்ட் வைத்து விட்டு மீதியை அவர்கள் வைத்துக் கொள்வதை தடுக்கக்கூடாது. கிராமத்தில் இருப்பவர்களுக்குக் கார்டு கொடுக்கப்படுவதில்லை. இன்று கூலிகள் அதிகமாகியிருக்கின்றன. பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விவசாயிகளை மிரட்ட வேண்டாமென்று விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற் பகல் 12-30 மக்களின் உணவுப் பஞ்சம் தீரவேண்டும். நம்மால் எவ்வளவு உற்பத்தி செய்யமுடியுமோ அந்த அளவிற்குச் செய்ய வேண்டும் என்று எல்லோரும் நினைக்க வேண்டும். நாட்டு மக்களின் பசி தீரவேண்டும். நமது நாட்டு குழந்தைகளின் வறுமை தீர வேண்டும். மக்களின் அறியாமை தீரவேண்டும் என்பதற்காக நாம் எல்லோரும் ஒத்துழைத்தாகவேண்டும் என்ற நிலையில் கட்சிகளை எல்லாம் மறந்துவிட்டு மக்களின் நலனுக்காக நாம் இருக்கிறோம் என்று நினைத்து எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று வாழ வேண்டும் என்று நினைக்கவேண்டும். எதிர்க் கட்சி என்றால் எதிர்ப்பதற்காக இருக்கவேண்டும் என்பதில்லை. கவர்னர் அவர்கள் உரையில் கூறியுள்ளதை நிறைவேற்ற வேண்டுமென்ற அளவில் நாங்கள் கொடுத்திருக்கக் கூடிய திருத்தங்கள் பிரகாரம் அதை சர்க்கார் நிறைவேற்றிக் கொடுத்தால் எங்கள் முழு ஆதரவையும் கொடுக்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையின் பேரில் எல்லாக் கட்சிகளிலுள்ள அங்கத்தினர்கள் நல்ல பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் கவர்னர் அவர்கள் உரையை வரவேற்று அதற்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், “சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அந்த திருத்தங்களை இணைத்துக் கொண்டால் நாங்களும் வரவேற்கிறோம்” என்று சொல்லியிருக்கிறார்கள். கவர்னர் உரை மீது இதுவரை நடைபெற்ற விவாதத்தில் முக்கியமாக எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் சில தலைப்புக்களின் கீழ் வருகின்றன. அந்தத் தலைப்புக்களின் அடிப்படையில் நான் சில பதில்களைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கான பதில்களை சொல்லிக்கொண்டு வரும்போது வேறு பல கருத்துக்களை பல அங்கத்தினர்கள் சொல்லியிருப்பார்கள் என்றாலும் அவற்றை எல்லாம் நான் புறக்கணித்துவிட்டேன் என்று பொருள் அல்ல. அதற்கெல்லாம் பதில் கூற போதுமான நேரம் இல்லாததால் அந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துப் பேசவில்லையே தவிர எல்லாக் கருத்துக்களையும் நான் மிக்கக் கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தேன். நான் கேட்கமுடியாத நேரத்தில் குறிப்பு எடுத்து வரச் சொல்லி அதையும் படித்துப் பார்த்திருக்கிறேன் என்று சொல்லி அந்தக் கருத்துக்களையும் நிச்சயமாகக் கவனிப்பேன் என்று முதலில் அவையில் உறுதி கூறுகிறேன்.

கவர்னர் உரை இன்று அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கிற நேரம் ஒரு பொதுத் தேர்தல் முடிவடைந்து ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் எதிர்க்கட்சியாகவும், எதிர்க் கட்சியில் இருந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறவர்களாகவும் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிற நேரமாகும். இந்த மாறுதல் ஏற்பட்டிருக்கிற நேரத்தில் நம் விவாதம் இவ்வளவு கூட காரசாரமாக இருக்காது என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. என்னைப் பொறுத்த





வரையில் நாங்கள் எல்லாம் எதிர்பார்த்ததை விட காரசாரம் குறைவாக இருப்பது மட்டுமல்லாமல் ஒத்துழைக்கிற மனப்பான்மை மிகுந்திருப்பதற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் கவர்னர் உரையிலுள்ள கருத்துக்களிலிருந்து பலர் பேசிய பேச்சுக்கள் சிறிது அப்பால் விலகிச் சென்றிருக்கின்றன. முதல் முறையாக இருப்பதால் அப்படி விலகிச் சென்றிருக்கலாம் என்று நினைக்கிறேன். கவர்னர் உரை மீதுள்ள விவாதத்தில் உரையாற்றியவர்களில் பெரும்பாலானவர்கள் அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் பெரும்பாலோர் முதலில் கவர்னரைப் பற்றியே பேசியிருக்கிறார்கள். இரண்டாவதாக, என்னைப் பற்றி பேசியிருக்கிறார்கள். மூன்றாவதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள். நான்காவதாக, அந்த உரையில் எதுவுமே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஐந்தாவதாக, இதில் புரட்சிகரமான திட்டங்கள் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஆறாவதாக, தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் என்னவாயிற்று என்று சொல்லியிருக்கிறார்கள். ஏழாவதாக, உணவுப் பிரச்சினையைப் பற்றி பேசியிருக்கிறார்கள். எட்டாவதாக, கொள்முதல் பற்றி பேசியிருக்கிறார்கள். ஒன்பதாவதாக, எங்களுக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி பேசியிருக்கிறார்கள்.

இதிலே, கடைசியில் உள்ளதை முதலில் எடுத்துக்கொள்கிறேன். ஏனென்றால் ரொம்ப வசீகரமான வார்த்தை ‘ஹனிமூன்’ என்பது. ஆகவே, அதிலிருந்து தொடங்கலாம் என்று கருதுகிறேன். ராஜாஜி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சுதந்திராக் கட்சிக்கும் இருந்த ஹனிமூன் ( It is over ) முடிந்து விட்டது என்று சொன்னதை வைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள், “ஆஹா, பார்த்தீர்களா! அவர்கள் உறவு முறிந்து விட்டது, முறிந்து விட்டது” என்று பேசினார்கள். வாலிபர்களாக இருக்கிறவர்கள் இந்த ஹனிமூன் காட்சியை படத்தில் பார்த்தால் இன்னும் கொஞ்ச நேரம் நடக்காதா என்று நினைப்பார்கள். வயது ஏற ஏற எவ்வளவு நேரம் இதைப் பார்த்துக் கொண்டிருப்பது, இது முடிந்து தொலைக்காதா என்று எண்ணுவார்கள். அந்த முறையில் சிலர் எங்களுக்குள் இருக்கிற அந்த உறவு முறிந்து போகாதா என்பதில் மிகுந்த ஆவல் கொண்டவர்கள். அவர்கள், எங்கள் உறவு எந்த அடிப்படையில் இருக்கிறது என்று அறிந்து கொள்ளாததால் இந்த உறவு முறிந்து போய்விடும், முறிந்து போய்விடும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்களே தவிர அந்த உறவு நான் துவக்க காலம் முதற்கொண்டு சொல்லி வருகிறபடி கொள்கை அடிப்படையில் அல்ல, கோட்பாடு அடிப்படையில் அல்ல. இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைந்து விடவேண்டுமென்ற அடிப்படையில் அல்ல. ஒரு கட்சி சொல்வதை மற்றொரு கட்சி அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல. ஆனால் காங்கிரசை எதிர்க்கிற கட்சிகள் தங்களை ஒன்றுக்கொன்று எதிர்த்துக்கொண்டு காங்கிரசிற்கு கிடைக்கக் கூடிய வலிவினை தங்களை அறியாமலேயே

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 மார்ச் 30

அதிகமாக்கி விடக்கூடாது என்ற அடிப்படையில்தான் அந்த உறவு ஏற்பட்டது. சுதந்திராக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்த உறவு மட்டுமல்லாமல் நிர்வாகத்தில் செம்மை இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயும், ஊழல் ஊதாரித்தனம் அடக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலும், இந்தி எதிர்க்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலும், நேர்மை வளர்க்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலும் அந்த உறவு வலுப்பட்டிருக்கிறது. சுதந்திராக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இவை இரண்டு மட்டுமல்ல, அகில இந்திய முஸ்லீம் லீகும் அந்த உறவின் அடிப்படையில் இணைந்திருக்கிறது. இடதுசாரி கம்யூனிஸ்ட்களும் இணைந்திருக்கிறார்கள். சோஷலிஸ்ட், பிரஜா சோஷலிஸ்டு இவையும் இதே அடிப்படையில் இணைந்திருக்கின்றன. வலதுசாரி கம்யூனிஸ்ட்கள் கூட மொத்தத்தில் இணையவில்லை என்றாலும் மொத்த சரக்கு பிடிக்காவிட்டால் சாம்பிள் சரக்கு மட்டும் வாங்குவதுபோல் சிற்சில இடங்களில் அவர்களுக்கும் எங்களுக்கும் கூட ஒரு உறவு ஏற்பட்டது. ஆனால், இந்த உறவு அவ்வளவும் கொள்கை அடிப்படையில் அல்ல என்பதை திட்டவட்டமாக தெரிவித்தான பிறகு கொள்கை அடிப்படையில் அவர்களுக்கும் எங்களுக்கும் கருத்து வேறுபாடு வந்தால் அவர்கள் எந்த உறவின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறார்களோ, அது சரியாக நடக்கிறது என்று அதைப் பாராட்டியிருக்க வேண்டுமே தவிர முறிந்து விட்டது, முறிந்துவிட்டது என்று பேசிக் கொண்டிருப்பது அப்படிச் சொல்வதின் மூலம் அது முறியாதா என்ற உங்கள் ஆவலைத்தான் அது காட்டுகிறது. இந்த ஒரு விஷயத்தில் உங்கள் ஆவலை நிறைவேற்ற முடியாதவனாக இருக்கிறேன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ராஜாஜி அவர்கள் ஹனிமூன் முடிந்துவிட்டது என்று சொன்னதை வைத்துக்கொண்டு இவர்கள் உறவு முறிந்துவிட்டது என்று சொன்னார்கள். ஹனிமூன் என்றாலே சினிமா முறைப்படி பார்ப்பீர்களானால் காதலனும் காதலியும் நல்ல மலர் தோட்டங்களில் ஓடி ஆடி சிற்றாறுகளில் விளையாடி ஒருவருக்கொருவர் சிந்து பாடி அவர்கள் மகிழ்கிறார்களோ இல்லையோ பார்க்கிறவர்களை மகிழச் செய்கிறார்கள். ஆனால் அந்த ஹனிமூனுக்குப் பிறகுதான் குடும்ப வாழ்க்கை ஆரம்பமாகிறது. குடும்ப வாழ்க்கை ஆரம்பமானால் இவ்வளவுதானா என்ற கேள்வியும், இது போதாதா என்ற கலிப்பும், இவ்வளவு நேரமா என்ற கவலை தோய்ந்த கேள்வியும், என்ன செய்வது என்ற பெருமூச்சுக் கேள்வியும் இவை எல்லாம் எழும். அகமும் புறமும் இரண்டையும் அறிந்திருக்கிற கருத்திருமன் அவர்களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவர்கள் இப்போதுதான் கம்பர் விழாவிலிருந்து திரும்பி வந்திருக்கிறார்கள். நிரம்ப அங்கு பேசியிருப்பார்கள். ஊடலுக்குப் பிறகு கூடல், அதில்தான் தனி இன்பம் என்று சொல்லியிருப்பார்கள். ஆகவே ஹனிமூனுக்குப் பிறகுதான் குடும்ப வாழ்க்கை என்பதை ஒத்துக்கொண்டால் ராஜாஜி அவர்கள் ஹனிமூன் முடிந்துவிட்டது என்று சொன்னதன் பொருள் விளங்கும். நான் அவர்களை பாராட்டுவது, அவர்கள் எங்களைப் பாராட்டுவது, இதற்காக வாண வேடிக்கை நடத்துவது, விழா நடத்துவது, அவர்கள் சொல்வதை நான் மீறமாட்டேன் என்று அக்கூட்டத்தில் சொல்வது, இவன் நல்லபிள்ளை அப்படித்தான் நடப்பான் என்று அவர் சொல்வது என்றெல்லாம் நடக்கிற அத்தகைய அரசியல் ஹனிமூன் முடிந்து விட்டது. பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறவர்கள் அவரவர்கள் காரியத்தை ஒழுங்காக நடத்துவார்கள், எனக்கு சில கருத்துக்கள் தோன்றினால் அவர்களிடம் சொல்வேன், எவ்வளவுக்கெவ்வளவு ஏற்றுக்கொள்ள முடியுமோ அதை ஏற்றுக் கொள்வார்கள், ஒழுங்கான குடித்தனம் நடக்கும் என்ற பொருளில்தான் ஹனிமூன் முடிந்துவிட்டது என்று சொன்னார்கள். ஒரு உறுப்பினர் அதைப்பற்றிப் பேசினார்கள், அவர் பெயர் நினைவில் இல்லை, பெயர் நினைவில் இல்லாத காரணம் அவர்கள் சொன்ன கருத்து முக்கியமானதல்ல, ஆகவே யார் சொன்னார்கள் என்பது நினைவிலில்லை. முதற்கோணல் முற்றும் கோணல் என்று சொன்னார். ரொம்ப காலமாக இருக்கிற பழமொழி, முதற் கோணல் முற்றும் கோணல் என்பதையே திருப்பினால் இந்த விஷயம் பற்றி இவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிற கருத்தே முதற்கோணலாகயிருக்கிறது. ஆகையினால், முற்றும் கோணலாகத்தான் வாதங்கள் வரும். நான் அந்தப் பழமொழியை அவருக்குத் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். திரு. ராஜாஜி அவர்களிடத்திலே எங்களுக்குத் தொடர்பு இருப்பதைப் போலவே இடதுசாரி கம்யூனிஸ்டுகளிடத்திலே எங்களுக்கு நல்ல தொடர்பு இருக்கிறது. அவர்கள் சொல்லக் கூடிய கருத்துக்களில் மிகப் பெரும்பான்மையான கருத்துக்கள் எங்களுக்கு உடன்பாடான கருத்துக்கள். ஆனால் அவர்கள் சொல்லுகிற கருத்துக்களில் சில எங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. அதனால், எங்களுக்குள் உறவு கெட்டு விட்டது என்று பொருள் அல்ல.



1967 மார்ச் 30] [திரு. சி. என். அண்ணாதுரை]

அதே போல, பிரஜா சோஷலிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், திரு. ம.பொ.சி. அவர்களின் தமிழரசுக் கழகம்—இவர்கள் யாரிடத்திலும் நூற்றுக்கு நூறு கொள்கை அடிப்படையில் சேர்ந்துவிட்டோம் என்றால், இன்றைக்கு இங்கே இந்த அமைப்பு இருக்காது. ஒவ்வொருவரும் தனித்தனிக் கட்சிகளாக இருக்க மாட்டோம்; எல்லோரும் ஒரே கட்சியாக உட்கார்ந்திருப்போம். அவர்கள் தங்கள் தங்கள் தனித் தன்மையை இன்னும் வைத்துக் கொண்டிருப்பதே, நாங்கள் முழுதும் ஒன்றாகிவிடவில்லை, ஒத்துப் போகும் மனப்பான்மையோடு இருக்கிறோம் என்று காட்டுவதாக இருக்கிறது. இதைப் பற்றிப் பேசி, இதிலே முறிவு வந்து விட்டது, இதிலே பிளவு வந்து விட்டது என்று வீணாக மனப்பிராந்தியை வளர்த்துக் கொள்ளத் தேவையில்லை என்று கருதுகிறேன். இந்த மனப்பிராந்தி வந்ததற்குக் காரணம், இந்த அமைச்சரவை ஏற்பட்டவுடன், வேறு கட்சிக்காரர்கள் இல்லையே என்று அரசியல் வட்டாரத்தில் ஆவலாக இருந்தார்கள். சுதந்திராக் கட்சி பங்கு கேட்காதா, முஸ்லிம் லீக பங்கு கேட்காதா, இடதுசாரி கம்யூஸ்டுகள் பங்கு கேட்கமாட்டார்களா, அவர்களிடம் போய் 'என்ன வேலை செய்தீர்களே, பங்கு ஒன்றும் இல்லையா?' என்று

கேட்கலாமா 'ஆமாம் ஐயா' என்று சொல்லமாட்டார்களா, அதைத் தாண்டிவிடலாமா என்று—இங்கே உள்ள அங்கத்தினர்கள் அல்ல, இவர்களுக்கு நிறைய வேலை இருக்கிறது—வெளியே உள்ள கட்சிக்காரர்கள் வேலை செய்தார்கள். உறவு மிக நியாயமான அடிப்படையில் ஏற்பட்டிருப்பதால், அப்படி அணுகியவர்களுக்கே கூட அந்தந்த கட்சித் தலைவர்கள் 'அந்த காரியத்தை நாங்கள் கவனித்துக்கொள்வோம்; நீங்கள் அனுதாபம் காட்டத் தேவை இல்லை' என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு முறிவு ஏற்பட்டு விட்டதோ என்ற மனப்பிராந்தி கொஞ்சம் அடங்கிவிட்டது. அதன் பிறகு சபாநாயகர் தேர்தல் வந்தது. டாக்டர் ஹாண்டே அவர் கள் சுதந்திராக் கட்சியின் சார்பில் வேறொரு உறுப்பினரைத் தேர்தலில் ஈடுபடுத்தினார். உடனே "ஆஹா! ஆஹா! உறவு முறிந்து விட்டது" என்று முடிவு கட்டினார்கள். டாக்டர் ஹாண்டே அவர் கள் சுதந்திராக் கட்சியின் சார்பில் போட்டியிட இன்னொருவரை நிறுத்தியதை நான் வருத்தத்தோடு கவனிக்கவில்லை. மகிழ்ச்சி யோடு வரவேற்கிறேன். அவர்களுடைய மனதிற்கும், அவர்கள் கட்சியின் மனதிற்கும் நாங்கள் மேற்கொண்ட காரியம் சரியல்ல என்று தோன்றியபோது, அவர்கள் தங்களுடைய உள்ளத்திற்கு பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் போட்டியிட்டார்களே தவிர, அதிலேயே உறவு முறிந்து விட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கிறவர்களுக்கு நேற்றைய தினம் இங்கே சுதந்திராக கட்சிக்குத் தலைவராக இருக்கிற திரு. மூக்கையா தேவர் அவர்கள் நல்ல விதமான பதிலைத் தந்தார்கள்.

அது மட்டுமல்ல. இடதுசாரி கம்யூனிஸ்டுகளை எடுத்துக்கொண் டால், முதலிலிருந்தே அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். 'பெரும் பலம் பெற்றிருக்கிற திராவிட முன்னேற் றக் கழக அமைச்சரவைக்கு பங்கு கேட்காமல் தக்க ஒத்துழைப் புத் தருவோம். தவறாக நடந்தால் அதையும் கண்டிப்போம்' என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

தமிழரசுக் கழகத் தலைவர் பேசுகிற பேச்சுக்களில், கலந்து கொள்ளுகிற கூட்டங்களில் "திராவிட முன்னேற்றக் கழக அமைச் சரவையை ஆதரிக்கிறேன். ஆனால் அந்த அமைச்சரவை ஏதாவது காரியத்தைச் செய்யத் தவறினால் அதைக் கவனப்படுத்துவேன். ஏதாவது தவறான காரியத்தைச் செய்தால் தடுத்து நிறுத்துவேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விதமான மேற் பார்வை எங்களுக்குத் தேவை. அப்படிப்பட்ட மேற்பார்வை வேண்டுமென்பதற்காகத்தான் தோழமைக் கட்சிகளில் உள்ள வர்களில் சிலரை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளத் தேவை யில்லை என்று கருதினோம். அவர்களும் எங்களோடு சேர்ந்து உட்கார்ந்துவிடுவார்களானால், மேற்பார்வை பார்க்கிற வேலை, இந்த நல்லவர்கள் இடத்தில் போய்விடும் என்பதற்காகத்தான். தோழமைக் கட்சிகளும் மந்திரி சபையில் சேராமல், அவர்கள் எதிரில் இருந்தால் நான் சில சமயங்களில் நாங்கள் தவறு செய் கிற போது, அன்பான முறையில், அறத்தின் அடிப்படையில்,



சொந்தத்தின் அடிப்படையில் எடுத்துச் சொல்லுவார்கள் என்ப தற்காகத்தான் அவர்கள் அமைச்சரவைக்கு வெளியே இருக்க வேண்டுமென்று கருதினோம். எப்போதும் வீட்டுக்குப் பெரியவர் கள் தெருப்பக்கத்திலேதான் இருப்பவர்கள்; வாலிபர்களாக இருப் பவர்கள் உள்ளே இருப்பார்கள். யாராவது தேடி வந்தால் திண்ணையில் உட்கார்ந்திருப்பவர் சொல்லுவார் 'குளிக்கப் போயிருக்கிறான்; சாப்பிடப் போயிருக்கிறான் போல இருக்கிறது' என்று சொந்தத்தோடு சொல்லுவார். தோழமைக் கட்சிகளெல்லாம், பெரியவர்கள் பாசத்தோடு குடும்பத்தை நடத்திச் செல்வதைப் போல் எங்களை நடத்திச் செல்வார்கள் என்பதற் காகத்தான் அவர்கள் இங்கே இல்லையே தவிர, அவர்களிலே சிலர் அமைச்சரவையில் சேர்வார்களானால், நான் நிச்சயமாக நம்பு கிறேன், எங்கள் வேலையும் எளிதாகும், அமைச்சரவையின் தகுதி, அதன் திறமை, அதன் தரம் கூட ஓரளவுக்கு உயரும் என் பதில் என்னைப் பொறுத்த வரையில், என்னுடைய நண்பர்களைப் பொறுத்த வரையில், ஐயத்திற்கு இடமில்லை. கருத்துக்களைப் பரி மாறிக்கொள்வதாலேயே உறவு முறிந்து விட்டது என்று கருதத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்திலே முதலிலே பேசப்பட்டதை இப்பொழுது நான் எடுத்துக் கொள்கிறேன். கவர்னர் உரையின் மீதா விவாதம்? திராவிட முன்னேற்றக் கழகமா இதைச் சமர்ப்பிப்பது? இவர்கள் கவர்னரே வேண்டாமென்று சொன்னவர்கள் அல்லவா? கவர்னர் உரையையே திராவிட முன்னேற்றக் கழகம் பகிஷ்கரித்தது என்று மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார் கள். பகிஷ்கரித்தது மட்டுமல்ல, அன்றைக்கு என் நண்பரும், அவர்களுடைய நண்பருமான அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் என் பேரில் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். வராமல் இருந்தது மட்டுமல்ல. போக மாட்டேன் என்று பத்திரிகையில் அறிக்கை கொடுத்ததும், கவர்னர் வட நாட்டிலிருந்து வருவதால் அந்த விழாவில் கலந்துகொள்ளவில்லை என்று எடுத்துச் சொன்னதும் ஒழுங்கை மீறுவதாகும் என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையை இந்த மன்றத்தில் 1957-ல் கொண்டு வந்தார்கள். இதை கவனப்படுத்தியதன் காரணமாக நான் இதைச் சொல்லுகிறேன். கவர்னர் உரையை பகிஷ்கரித்ததற்குக் காரணங் கள் இரண்டு. ஒன்று, கவர்னர் பதவியே தேவையற்றது— இது ஒரு காரணம். இன்னொன்று திராவிட நாடு தனி நாடு ஆகவேண்டும் என்ற எண்ணத்தை வைத்துக் கொண்டு இருந்ததால் வடநாட்டி லிருந்து வரும் கவர்னரைத் தமிழகம் ஏற்றுக்கொள்ளத் தேவை யில்லை—இந்த இரண்டு காரணங்களால் அப்போது பகிஷ்கரித் தோம். கவர்னர் உரையை பகிஷ்கரித்தோமே தவிர, அந்த உரை யின் மீது நடந்த விவாதத்திலே நாங்கள் கலந்து கொள்ளத் தவற வில்லை. அப்போது கூடக் கேட்டார்கள் "நீங்கள் கவர்னர் உரையை பகிஷ்கரித்து விட்டு, விவாதத்தில் கலந்துகொள்ள வரலாமா?" என்று. கவர்னர் உரை நிகழ்த்த வருகிறார் என்றால், அது ஒரு விழா, அது ஒரு சடங்கு, அது ஒரு சம்பிரதாயம். அதிலே

கலந்து கொள்ளாவிட்டாலும் கவர்னர் உரையிலே கருத்துத் தெரி
விப்பது எங்களுடைய கடமைகளுள் ஒன்று என்ற முறையில்
நாங்கள் அதிலே கலந்து கொண்டோம்.

“ நீங்கள் எந்தக் காரணத்திற்காக வேண்டுமானாலும்
இருக்கட்டும், கவர்னரே வேண்டாமென்று சொன்னீர்கள்
அல்லவா? ஆட்டுக்கு கழுத்திலே இரண்டு தொங்குகிறதே அது
போல இந்த கவர்னர் பதவி என்று சொன்னவர்கள் அல்லவா ?”
என்று எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். ஆனால் அது இந்த
அவையில் பேசி நிறைவேற்றப்பட வேண்டியதல்ல. திராவிட
முன்னேற்றக் கழகம் மேடைகளிலும், கூட்டங்களிலும்
கொடுத்துள்ள வாக்குறுதிகளை இந்தக் கண்ணோட்டத்தோடு
பார்க்கவேண்டும். இந்தச் சபை மூலமாக நிறைவேற்றக்கூடிய
வாக்குறுதிகள் சில. இந்தச் சபையில் உங்கள் ஒத்துழைப்போடு
நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள் சில. மத்திய சர்க்காரின்
ஒத்துழைப்போடு நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள் சில, மத்திய
சர்க்கார் ஒத்துழைப்புக் கொடுத்தாலும், இந்திய அரசியல்
சட்டத்தைத் திருத்தித்தான் நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள்
சில. கட்சி வைத்துக்கொண்டிருக்கிற கருத்துக்களை எதை
எதை எந்த எந்த முறையில் பேசி அதற்கான நடவடிக்கை
எடுத்து, அதற்குத் தீர்வு காணவேண்டுமோ அதனை மக்களுக்கு
அறிவிக்கத்தான் இவ்வளவும் சொல்லுவதே தவிர, ‘ கவர்னரை
ஒழிப்பதாகச் சொன்னீர்களே, இந்த உரையிலே இல்லையே’ என்று
சொன்னால், இது கவர்னர் உரை, கவர்னரே வந்து உரையாற்றும்
போது ‘ கவர்னர் பதவி ஒழிக்கப்படும்’ என்று கவர்னரேயா
அதைப் படிப்பார்? இதிலே இருக்காது. எங்கள் நண்பர்கள்,
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், பாராளுமன்றத்தில்
இருக்கிறார்களே, அவர்கள் அங்கே பேசுவார்கள் கவர்னர் தேவை
யில்லை என்று. இங்கே என்ன சொல்லுவோம் என்றால், கவர்னர்
உரையிலே இன்னின்ன இருக்கவேண்டும் என்று சொல்லுவோம்.
கவர்னரே வேண்டாமென்று சொன்னவர்கள் கவர்னர் உரையைப்
படிக்கலாமா என்று கேட்பது, வேறு ஏதும் சொல்லுவதற்கு
இல்லாமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தவர்களுக்கு இது
புளியங்கிளையாக அகப்பட்டது என்றால், இதிலே வாதமும் இல்லை,
அரசியலும் இல்லை. ஆனால் அவர்களுக்கு எங்களைப் போல கவர்னர்
பதவி வேண்டாமென்று எண்ணம் இருக்குமானால், நீங்கள்
அதிகாரப்பற்றற்ற தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றுவதாக
இருந்தால், அதை நான் மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைக்கத்
தயாராக இருக்கிறேன்.

கவர்னரைப்பற்றி இன்றையதினம் திராவிட முன்னேற்றக்
கழகம் மட்டுமல்ல, பல்வேறு கட்சிகளுக்குமிடையே பலவிதமான
கருத்துக்கள் வந்திருக்கின்றன. அந்தக் கருத்துக்களிலே சில
நல்ல கருத்துக்களை அன்றையதினம் உறுப்பினர் திரு. ம.பொ.
சிவஞானம் அவர்கள் சொன்னார்கள். என் அவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்டவராக இருக்கக்கூடாது? அவர்கள் வெளி இடத்தி
லிருந்து தான் வரவேண்டுமா? அல்லது தமிழை ஆட்சி மொழி





யாக ஏற்றுக்கொண்ட பிறகு, அந்தத் தாய் மொழியை
அறியாத ஒருவரை நாம் இங்கு அமரவைத்துக் கொண்டிருப்பது
சிக்கல்களை உண்டாக்காதா ? என்றெல்லாம் கேட்டார்கள்.
அப்படிப்பட்ட கண்ணோட்டத்தில் சில பேர் இன்றையதினம்
கவர்னரைப்பற்றி—தமிழகத்தில் மட்டுமல்ல, வெளி இடங்களிலும்
கூட எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். குடியரசுத் தலைவரே கூட
இந்தியிலே தான் பேசவேண்டுமே தவிர இந்தியே பேசாத,
தெரியாத ஒருவர் குடியரசுத் தலைவராக வருவானேன் என்று
பாராளுமன்றத்தில் கேட்கிற காலம் இது. ஆகையால் இன்றைய
தினம் பல்வேறு அரசியல் கட்சியினர்கள் கவர்னர் பதவி இருக்க
வேண்டுமா, வேண்டாமா? இருக்கவேண்டுமென்றால் எந்த
முறையில் இருக்கவேண்டும், எதற்காக இருக்கவேண்டும்,
என்னென்ன செய்யவேண்டும்? என்று தீவிரமாக சிந்தித்துக்
கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிப்பது மட்டுமல்ல, கவர்னர்
பதவியே வேண்டாம் என்று முதன்முதலில் திராவிட முன்
னேற்றக் கழகம் சொன்ன நேரத்தில், அது ரொம்ப பைத்தியக்
காரத்தனம் என்று பேசிக்கொண்டிருந்த அரசியல் வட்டாரத்தில்
ஒரு பகுதி இன்றையதினம் அதே கண்ணோட்டத்திற்கு வந்திருப்
பதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கவர்னரைப் பார்த்துவிட்டு, அடுத்தபடியாக என்னிடம் தான்
பெரும்பாலோரும் வந்தார்கள். எனக்கு அதில் ரொம்ப
மகிழ்ச்சி. கவர்னருக்கு அடுத்தபடியாக எனக்கு அவர்கள் மதிப்பு
கொடுத்தார்கள். அதிலும் எனது நண்பர் திரு. கருத்திருமன்
அவர்களுக்கு ரொம்ப பாசம் என்னிடம். ‘என்னோடு சேர்ந்து
அல்லவா நீ அசெம்ப்ளியில் இருக்கவேண்டும், வேறு எங்கேயோ
இருக்கின்றாயே?’ என்று கேட்டார். அவர்களுடைய தாபத்தை
நான் அறிந்து கொள்கிறேன். ஆனால், அவர்களுக்குத் தெரிவிக்
கிறேன், அதற்காக நான் அவர்கள் சொன்ன சட்ட நுணுக்கங்களை
ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அசெம்பிளியில் உறுப்பினராக
ஆகவேண்டும் என்று அவர்கள் அன்போடு அழைக்கிறார்களே,
அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால்,
மேலவையிலே உறுப்பினராக உள்ளவர் இந்த அவையிலே அல்லது
பொதுவாக அமைச்சராகவோ, முதல் அமைச்சராகவோ, நிதி
அமைச்சராகவோ இருக்கக்கூடாது என்று சட்ட திட்டங்கள்
இல்லை. சம்பிரதாயம் இருக்கிறதே என்றார். ஆங்கிலத்தில்
கன்வென்ஷன் என்பதற்கு அவர்கள் பொருளை பார்ப்பார்களே
யானால், அனுசரிக்கின்ற வரையில் கன்வென்ஷன், விட்டுவிட்டால்
இல்லை. அதனால் தான் கன்வென்ஷன் என்பதற்கும் ரூல்
என்பதற்கும் வெவ்வேறு வார்த்தைகளை வைத்திருக்கிறார்கள்.
அனுசரித்துத் தீரவேண்டியதாக இருந்தால் ரூல்; அனுசரிக்கலாம்
அல்லது அனுசரிக்காமல் விடவும் செய்யலாம் என்று இருப்பது
தான் கன்வென்ஷன். நான் கூட ஒரு ஆங்கிலப் புலமை மிக்கவரைக்
கேட்டேன். ‘கன்வென்ஷன்’ என்பது எந்த அடிப்படையிலே
வந்தது என்று கேட்டேன். ‘கன்வீனியன்ஸ்’ என்பதிலிருந்து
கன்வென்ஷன் வந்தது என்று அவர்கள் சொன்னார்கள். சரியா,

இல்லையா என்று நான் பார்க்கவில்லை. சரியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் ரொம்பச் சுவையாக இருக்கிறது. ஆகையால் தான் அதை உங்களிடம் குறிப்பிட்டேன். நமக்கு சௌகரியமாக இருக்கிறவரையிலும் சில சம்பிரதாயங்கள் இருக்கும், நமக்கு சௌகரியம் இல்லாதபோது அவற்றை நீக்கிவிடலாம். நம்முடைய ராஜாஜி மண்டபத்தில் போய் பார்க்கிறோம். அப்பொழுதிருந்த கவர்னர்கள் போட்டுக் கொண்டிருந்த உடைக்கும் இப்பொழுதிருக்கிற கவர்னர்கள் போட்டுக் கொண்டிருக்கிற உடைக்கும், அப்பொழுதிருந்த அமைச்சர்களுடைய நடையுடைபாவனைக்கும், இப்பொழுதிருக்கிற அமைச்சர்களுடைய நடையுடைபாவனைக்கும் —ஒருவர், இருவர் தவிர மற்றவர்களைப் பற்றி குறிப்பிடுகிறேன் (சிரிப்பு)—வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அது ரூலிலே அல்ல, ரெகுலேஷனிலே அல்ல, கன்வென்ஷனில் வருகிறது. ஆகவே, கன்வென்ஷனை அதிகமாக எடுத்துக்கொண்டு 'நீங்கள் இங்கே இருப்பது சரியல்ல, நீங்கள் நிதி அறிக்கை படிப்பது சரியல்ல' என்று நம்முடைய நண்பர் கருத்திருமன் அவர்கள் பேசியிருப்பது அவர்களுக்கு வேறு சுவையுள்ள விஷயங்கள் கிடைக்கவில்லை என்பதறிந்து நான் வருத்தப்படுகிறேன்.

மூன்றாவதாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று அமைச்சரவை அமைத்திருக்கிறார்கள். அதற்கு எல்லோரும் வரவேற்பு சொன்னார்கள். அந்த வரவேற்புக்கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒத்துழைப்புத் தருவதாகச் சொன்னார்கள். அதற்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளவேண்டும். 'அந்த ஒத்துழைப்பு எப்படி நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை நேற்று மாலை கூட பார்த்தோம்.' ஆகையினால் அந்த ஒத்துழைப்புக்கும் நன்றி தருகிறோம். ஆனாலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே வந்தபிறகு ஒன்றை நான் உணர்கிறேன். அதை நான் சில இடங்களில் கூட சொன்னேன். உள்ளபடியே பல பேர்களுக்கு—காங்கிரஸில் உள்ளவர்கள் மட்டுமல்ல, வேறு அரசியல் கட்சியிலுள்ளவர்கள் மட்டுமல்ல, பொது மக்களில் சிலர் கூட—இவர்களா வந்து விட்டார்கள் என்ற வியப்பு அடங்கவில்லை. அந்த வியப்புத் தான் எங்களுடைய வலிவு. அதைத் தெரிந்து கொள்ளாமல் இவர்களா வந்துவிட்டார்கள் என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருப்பதில் பொருள் இல்லை. இவர்களா வந்துவிட்டார்கள் என்று அரசியல் வட்டாரத்தில் சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், அதிலே இருக்கிற வியப்புத் தான் எங்களுக்கு வலிவு என்று நான் சொன்னதற்குக் காரணம், நீங்கள் போன தேர்தலில் கூட 'இவர்கள் எங்கே வரப் போகிறார்கள்' என்று எண்ணினீர்கள், அந்த எண்ணத்தின் விளைவாகத் தான் நாங்கள் வந்தோம். ரொம்ப அலட்சியப்படுத்தினீர்கள். அலட்சியப்படுத்தியது மட்டுமல்ல. அவர்களுடைய பெரிய தலைவர்களெல்லாம் சொன்னார்கள். 'நாங்கள் எப்பொழுதோ வெற்றி பெற்று விட்டோம். இவர்கள் 5 பேர் வருகிறார்களோ, 10 பேர் வருகிறார்களோ என்று தான் பார்க்கிறோமே தவிர, இவர்கள்





எங்கே வெற்றி பெறப்போகிறார்கள், மந்திரிசபை எங்கே அமைக்கப்போகிறார்கள். இவர்களா அமைக்கப்போகிறார்கள்?' என்றெல்லாம் சொன்னீர்கள். அதிலிருந்து இரண்டு எனக்குத் தெரிகிறது. உங்களுக்கு உண்மை சீக்கிரம் புலப்படவில்லை என்பதும், இரண்டாவது, ஜனநாயகத்தில் எப்படிப்பட்டவர்களும் பொறுப்பேற்க வரலாம் என்ற அடிப்படை. இரண்டும் உங்களுக்குத் தெரியவில்லை என்பதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். ஆனால், வந்துவிட்ட பிறகு நீங்கள் ஒத்துழைப்புத் தருவதாகச் சொல்கிறீர்கள். ஆங்கிலத்தில் ஒரு நிகழ்ச்சி எனக்கு நினைவுக்கு வருகிறது. திரு. கருத்திருமன் அவர்களுக்குப் பாடமாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன். ஜான்சன் என்ற பெரும் புலவர் இங்கிலாந்து நாட்டில், அவர் ஒருவரே தனியாக உட்கார்ந்துக் கொண்டு கஷ்டப்பட்டு பேரகராதி ஒன்றைத் தயாரித்தார். அந்த அகராதியைத் தயாரித்துக் கொண்டிருந்த நேரத்தில் பல பேருக்கு நன்கொடைக்காக கடிதம் எழுதினார்கள். அதில் செஸ்டர்பீல்டு பிரபு என்பவரும் ஒருவர். செஸ்டர்பீல்டு பிரபு பதிலுக்குக் கூட கடிதம் போடவில்லை. ஆனால், எப்படியோ பாடுபட்டு ஜான்சன் அவர்கள் அந்தப் பேரகராதியை முடித்தவுடன் செஸ்டர்பீல்டு பிரபுவிடமிருந்து ஒரு அன்பான கடிதம் வந்தது. அதற்கு ஜான்சன் அளித்த பதில்—நானும், கருத்திருமன் அவர்களும் இண்டர்மீடியட் வகுப்பில் படித்திருக்கிறோம் என்று கருதுகிறேன்—"எனக்குத் தேவைப்பட்டபொழுது கிடைக்கவில்லை அன்பு, எனக்குத் தேவைப்படாத இப்பொழுது கிடைக்கிறது, வேண்டாம்" என்பதாகும். நான் அதைப்போல—ஜான்சன் செஸ்டர்பீல்டு பிரபுவுக்கு திருப்பி எழுதியனுப்பியது போல, இப்பொழுது வேண்டாம் என்று சொல்லவில்லை. இப்பொழுது கூட எனக்கு வேண்டும். ஆனால், இது இப்பொழுது கிடைப்பது இன்னும் எவ்வளவு காலத்திற்கு என்பது தான் இதிலே இருக்கிற பிரச்சினையே தவிர, நீங்கள் தரவேண்டிய நேரத்தில் தரவில்லை, இப்பொழுது தந்திருக்கிறீர்கள் என்பதற்காக, நான் ஜான்சனை பின்பற்றி சொல்லவில்லை. ஆனால் நினைவுப்படுத்துகிறேன். இருக்கிற அன்பும், மதிப்பும் உரிய காலத்தில் வரவேண்டும், காலம் கடந்து வருவது ஒருவருக்கு 60-ம் கலியாணம் ஆன பிறகு பிறக்கின்ற குழந்தை போலத்தான். சில பேருக்கு 60-ம் கலியாணத்திற்குப் பிறகு குழந்தை பிறப்பது தப்பு என்று நான் சொல்லவில்லை. சில பேருக்கு 60-ம் கலியாணத்திற்குப் பிறகு குழந்தை பிறக்கக் கூடாது என்று சொல்லுவதற்கு இல்லை. எனது நண்பர்கள் பல பேர் 60-வது கலியாணம் செய்து கொண்டவர்கள். நானும் இரண்டு வருஷங்களில் செய்துகொள்ள வேண்டியவன். அதற்காக நான் சொல்லவில்லை. காலம் கடந்து குழந்தை பிறந்தால் ஆசையாகத் தான் இருக்கும், அன்பாகத்தான் இருக்கும், அழகாகத் தான் இருக்கும். 'ஆகா!, பையன் வளர்ந்து கல்லூரிக்குப் போய் பட்டம் பெற்று, பதவி பெற்று, அவனுக்கென ஒருவளைத் தேடிக் கொண்டு, ஆடிப்பாடி மகிழ்வதை நாம் இருந்து பார்க்கப்போகிறோமா' என்று பாசமும் ஏக்கமும் கலந்து வரும். அதைப் போல உங்களை நான் பாசத்தோடும், ஏக்கத்தோடும் பார்க்கிறேன்.

இவ்வளவு அன்பும், ஒத்துழைப்பும் தேர்தல் நேரத்தில் பிரசார அளவிலாவது, இருந்திருக்குமானால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?

தாக்குறைவான பிரசாரங்களைப் பற்றி பேசினார்கள். நான் இந்த மன்றத்தில் முதன்முதலாகச் சொல்கிறேன். அது கூட கூச்சப்பட்டுக்கொண்டு சொல்கிறேன். "20 வருஷங்களாக காங்கிரஸ் ஆட்சி இருந்தும் நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கவில்லை. ஆகையால் இந்த ஆட்சி மாற்றப்பட வேண்டும்' என்று நான் பேசியதற்கு பதில் அளிக்க, உங்களுடைய காங்கிரஸ் பேச்சாளர்களில் ஒருவர் மேடையிலே பேசி, பத்திரிகையிலே வெளிவந்த செய்தியைச் சொல்கிறேன் '20 வருஷங்களாக காங்கிரஸ் ஆட்சியில் பலன் கிடைக்கவில்லை, ஆகையால் மாற்ற வேண்டும்' என்று அண்ணாதுரை பேசுகிறானே, இவனுக்கு திருமணம் ஆகி வருஷங்கள் 20 ஆகிறது. இன்னும் ஒரு குழந்தை கூட இல்லை, அப்படியானால் அவன் மனைவி ராணிக்கு வேறு ஒரு கணவனைத் தேடலாமா?" சகித்துக்கொண்டிருந்தேன். இன்றைய தினம் நீளம் நீளமாகப் பேசுகிறீர்கள் பண்பைப்பற்றி. ஒரு நாள், "எங்கள் பேரில் கல் போடுவார்களேயானால், திருப்பி நாங்களும் கல் போடுவோம்" என்று சொன்ன எங்களுடைய
பி
1-00 அமைப்புச் செயலாளரை மூன்று லட்சம் மக்கள் கூடியிருந்த கடற்கரை கூட்டத்தில் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளச் சொன்னேன். ஆனால் அப்படிப்பட்ட தாக்குறைவான பேச்சுக்கள் உங்களுடைய மேடைகளில் பேசப்பட்டன; என்னால் மதிக்கப்படும் தலைவர்கள் பக்கத்தில் இருந்தார்கள். அப்பொழுது ஓரளவிற்கு, நீங்கள் கொஞ்சம் அன்பு காட்டியிருந்தால், ஜனநாயகத்தில் இந்தக் குறை ஏற்பட்டிருக்காது. இங்குள்ளவர்களில் யாரும் அப்படிப் பேசவில்லை, அப்படிப் பேசியவர்களில் யாரும் இங்கே வரவும் இல்லை (சிரிப்பு). அதிலே எனக்கு ஒரு திருப்தி. வரவில்லை என்பது மட்டுமல்ல; ஓரிருவர் எங்கள் கட்சியிலும் இருக்கலாம். 'வைலண்டாக' யார் பேசுகிறார்களோ, யார் சூடாகப் பேசுகிறார்களோ, அவர்களைத் தான் மக்கள் விரும்புவார்கள் என்ற தவறான எண்ணம் இருக்கிறது. ஆனால், நாட்டு மக்கள் நம்மைவிட புத்திசாலிகள், தரம் பிரிக்கக் கூடியவர்கள் இல்லையா? உங்களுடைய கட்சியில் யாருடைய பேச்சு பயங்கரமானது என்று கருதப்பட்டதோ யார் பேச்சுக் காதில் விழுந்தால் எதிர்க்கட்சி சுருண்டு விழுந்துவிடும் என்றார்களோ, தேடித் தேடிப் பார்க்கிறேன், அவர்களில் யாரும் இங்கே இல்லை. (சிரிப்பு) இப்பொழுது வந்திருக்கிற ஓரிருவர்களும் அந்தப் பாணியில் போகிறார்கள். வருத்தப்படுகிறேன். ஆனால் நாட்டு மக்கள், உண்மையான, தெளிவான அரசியல் பேச்சைத்தான் விரும்புகிறார்கள். என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில், வரம்பு மீறி யாராவது ஒரு வார்த்தை பேசினால், நான் அந்த இடத்தில் இருந்தால், தடுத்து இருந்திருக்கிறேன். நான் குறிப்பிட்ட அந்த வாசகம், காங்கிரஸ் பிரசார மேடையிலே தடுக்கப் படாமல் போய் விட்டது என்பதை நினைவூட்டுகிறேன். இன்





னென்று கேட்கிறேன் : ஒரு நாளாவது, ஒரு கூட்டத்திலாவது, உங்கள் பேச்சாளர்கள், என்னைப் பற்றிப் பேசும்போது, 'அவர்' என்று சொல்லியிருக்கிறார்களா? அவன்! (குறுக்கீடு) நம்முடைய நண்பர் 'நான் சொல்லவில்லை' என்கிறார்கள். தலைவணக்கம் செய்கிறேன், நீங்களாவது சொன்னீர்களே என்று. யார் யாரைப் பற்றியெல்லாம் சொன்னார்கள்? ராஜாஜியைப் பற்றி எவ்வளவு தரக் குறைவான பேச்சுக்கள்? என்னை விடவா உங்களுக்கு அவருடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கும்? நான் முதன் முதலாக சிறைச்சாலைக்குச் சென்றது அவர் முதல் அமைச்சராக இருந்த காலத்தில்; அவர்தான் என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பியவர்; மந்திரி சபைக்கும் போகச் சொன்னவரும் அவர்தான். (பலத்த ஆரவாரம்) ஆனால் அவரிடத்திலே பகை இல்லை. ஆனால் எவ்வளவு தூரம் உயர்ந்த அளவில் அப்பொழுது அரசியல் இருந்தது என்பதை கவனப்படுத்த விரும்புகிறேன். நான் வாலிபனாக இருந்த நேரத்திலே காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி அவர்களும், ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்த ராமசாமி முதலியார் அவர்களும் ஒருவரை ஒருவர் எதிர்த்து போட்டி போட்டார்கள். ஒரே தெருவிலே, ஒரே நாளிலே, வெளியிலே ஓட்டுக் கேட்கும்போது இந்த வரிசையாக சத்தியமூர்த்தி ஓட்டுக் கேட்டுக் கொண்டு போவார், அந்த வரிசையாக ராமசாமி முதலியார் ஓட்டுக் கேட்டுக் கொண்டு போவார். தெரு முனையில் இருவரும் கைகுலுக்குவார்கள். "What are your prospects ?" என்று சத்தியமூர்த்தி கேட்பார்கள்; ராமசாமி முதலியார், "I don't think they are briglit" என்று சொல்லுவார்கள். சத்தியமூர்த்தி, "No, no. your prospects are bright" என்று உபசாரத்திற்காகவாவது சொல்லுவார். அப்படி இருந்த அரசியல், அந்த அரசியல் எந்த அளவிற்கு சென்றிருக்கிறது? இங்கே என்னுடைய நண்பர் சொன்னார்கள், தேர்தல் முடிந்த பிறகும், கத்திக் குத்து தேர்தல் முடிந்த பிறகும் கல் வீச்சு, என்று. இதற்கெல்லாம் யார் காரணம் என்பதை ஒவ்வொருவரும் ஒரு கணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். நான் காரணம் என்று ஏதாகிலும் ஒரு துளிச் சம்பவம் கிடைத்தாலும், நீங்கள் என்னிடத்திலே சொல்லுங்கள்.

தமிழரசுக் கழகத் தலைவர், மதிப்பிற்குரிய ம.பொ.சி. காங்கிரசிற்காக அரும்பாடு பட்டிருக்கிறார்கள். ஆனால் அதன் போக்குப் பிடிக்காமல் காங்கிரஸை எதிர்த்து, தேர்தலுக்கு நின்றார்கள். நோட்டீஸ் என்ன ஒட்டுவது? "கட்ட பொம்மனைப் பாராட்டிய ம.பொ.சி. எட்டப்பன் ஆகலாமா?" அனுமதித்தீர்களே? எவ்வளவு காலம் உங்கள் கட்சியோடு பழகியவர்கள்? எத்தனை காலம் உங்களோடு சிறைச்சாலைக்குச் சென்றவர்கள்? நானும், மகமது இஸ்மாயில் சாகிப் அவர்களும், ராஜாஜி அவர்களும், ஒன்றாக இருக்கிறோம் என்பதை விளக்குவதற்கு கழுதைமீது உட்காரவைத்துப் படம் போட வேண்டுமா? வேறு படம் கிடைக்கவில்லையா? கழுதையின் மீது போட்டார்கள் என்று ஆத்திரப்படலாமா என்று கேட்கலாம். "வானர சேனையாகப் பயன் படுத்திக் கொள்வேன்"

என்று சொன்னார் என்று, "பார், பார், குரங்கு என்று சொல்கிறார், குரங்கு என்று சொல்கிறார்" என்று சொன்னீர்களே. அப்படிச் சொல்லுகின்ற ஒருவனைக் கேவலப் படுத்தக்கூடாது என்று, கழுதைமீது ஐந்து தலைவர்களைப் போட்டு, ஊர் ஊராக நோட்டீஸ் ஒட்டியபோது, சிறு முணு முணுப்பாவது, எதிர்ப்பாவது இருந்ததா? "அண்ணாதுரை, தெரியாமல் செய்துவிட்டார்கள், அது வல்ல உத்தேசம்" என்று சொன்னீர்களா? இல்லையே? கூட்டத்தில் பேசுவீர்கள்; பக்கத்தில் சுவற்றில் ஒட்டியிருக்கும் இந்தப் படம்; மக்களைக் கூடப் பார்க்காமல், அதையே பார்த்துக் களித்துக் கொண்டு இருந்தீர்கள், நாங்கள் ஏறியது கழுதையோ, குதிரையோ, அது ஆட்சி பீடம் வரையில் வந்துவிட்டது (பலத்த ஆரவாரம்). ஆகையினால் தான் சொல்லுகிறேன், இனிமேலாவது உங்கள் கட்சியில் இருக்கிறவர்களைக் கொஞ்சம் பண்போடு பேசும்படி வேண்டுகோளைச் சொல்லுங்கள். முடிந்தால் செய்யுங்கள், அது முடியாத காரியம் என்றால், வற்புறுத்தவில்லை.

"திராவிட முன்னேற்றக் கட்சிக்காரர்களா ஆட்சிக்கு வரத் தக்கவர்கள், அப்படிப்பட்ட தரக்குறைவானவர்கள் அவர்கள்," என்ற கருத்து உள்ளத்தின் அடிவாரத்தில் இருப்பதால் தான், நீங்கள் பேசுகிறபோது ஒரு அருவருப்பு உணர்ச்சி இருக்கிறது; அந்த உணர்ச்சியின் அடிப்படையிலே நீங்கள் கேட்கிறீர்கள், "என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்" என்று. எனக்குக் கூட கொஞ்சம் பயமாக இருந்தது. ஒரு சமயம், ரொம்ப நாளாகி விட்டதோ, ஒன்றுமே செய்யவில்லையோ என்று, கணக்குப் பார்த்தேன். மார்ச் 6-ந் தேதி, நாங்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம்; 15-ம் தேதி நீங்களெல்லாம் சேர்ந்து பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டீர்கள். 17-ம் தேதி சபா நாயகர் தேர்தல் நடைபெற்றது. ஆகவே, இந்த அரசு முழு அளவோடு இயங்கத் தொடங்கியது மார்ச் 17-ம் தேதியிலிருந்து. இன்றைக்கு 13 நாட்கள் ஆகின்றன. இந்த 13 நாட்களுக்குள்ளே, "ஏன் அது நடக்கவில்லை, ஏன் இது நடக்கவில்லை" என்று கேட்கிறீர்களே? எனக்கு இரண்டு படுகிறது. மூன்று கூடச் சொல்லுகிறேன். ஒன்று நீங்கள் கணக்கைப் பார்க்கவில்லை. ஆகையால்தான் பேசுகிறீர்கள். இது 1967 என்று கவனம் இல்லாமல், 1969 என்று எண்ணிக்கொண்டு, "என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்" என்று கேட்டு இருக்கலாம். இன்னொன்று, நீங்கள், நாங்கள் 13 நாளில் முடிக்க வேண்டும் என்று சொன்னதற்குக் காரணம், எங்களை அவ்வளவு திறமை உள்ளவர்கள் என்று எங்களிடத்தில் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக இருக்கலாம். மூன்றாவது, "என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்" என்று கேட்க, இப்பொழுதுதான் வாழ்க்கையில் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இருபது வருஷமாகக் கிடைக்காத சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. கிடைத்த சந்தர்ப்பத்தை விடுவானேன் என்று, "என்ன செய்தீர்கள்" என்று கேட்கிறீர்கள். உங்களுடைய நிலையை நான் உணருகிறேன். கடந்த 15 வருஷத்திலே அப்படிக் கேட்கலாமா? கேட்டவுடன், அமைச்சர் திரும்பிப் பார்த்து 'அடுத்த தடவை பார்க்க



லாம்' என்ற முறையில் ஓடியிருக்கும் பார்வை, (சிரிப்பு) ஆகவே தான், காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்று கிடைத்த சந்தர்ப்பத்தை வீணாக்காமல், "என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்" என்று கேட்டீர்கள். ஆனால் அதைக் கேட்பதற்கு முன்னால், நாம் இதற்கு போதுமான அவகாசம் அளித்திருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். கொடுத்திருக்கும் அரசு நிலை எந்த அளவில் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதற்காகத்தான் சட்டி உதாரணத்தைச் சொன்னேன். சுரண்டிச் சுரண்டிப் பார்த்தாலும், மாவு கிடைக்கவில்லை என்று சொன்னேன். நண்பர் கருத்திருமன், "சாதாரண சட்டியில்லை. 200 கோடி ரூபாய் வரி இருக்கிற சட்டி." என்று சொன்னார்கள். எத்தனை கடன் இருக்கிற சட்டி? (சிரிப்பு) எத்தனை துண்டு விழுகிற பட்ஜெட் இருக்கிறது? செய்யப்பட வேண்டியவை, செய்யப்படாமல் விட்டவை எவ்வளவு? உணவு நெருக்கடி எந்த உச்சத்தில் இருக்கிறது? இதையெல்லாம் பார்த்தால், கொடுத்திருக்கிற சட்டியில் சுரண்டிப் பார்க்கத்தான் இடம் இருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை. இல்லை என்றால், டெல்லிக்கு, மற்ற இடங்களுக்கு போய், பரதேசி போல், "சட்டி காலியாக இருக்கிறது, ஆளுக்கு ஒரு பிடி போடுங்கள்" என்று கேட்டு வாங்கும் சட்டியாகத்தான் கொடுத்தீர்கள். நிம்மதியான ஆட்சியா கொடுத்தீர்கள்? ஆனால், பிடித்துக் கொள்வதற்கு சுலபமாக இருக்கிறது, 15 வருஷமாகத் தொட்டுத் தொட்டு, உங்கள் விரல் அடையாளம் பதிந்து இருக்கிறதினால், சரியாக விரல் வைத்துப் பிடித்துக் கொள்ளுகிறேன். அப்படி இருந்திருக்கிற போது, இந்த சர்க்கார் ஒப்படைக்கப் பட்ட பிறகு இருந்த சிக்கல்களை நீக்குவதற்கு எவ்வளவு காலம் கொடுக்க வேண்டும் என்பதை அறிந்து போதுமான அவகாசம் கொடுத்த பிறகு "என்ன செய்தீர்கள்" என்று பேச வேண்டும்.

நான்காவதாக கவனர் உரையிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். எனக்குக் கூட பயமாக இருந்தது. என்ன, 7, 8 பக்கங்கள் அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்களே, ஒன்றுமே இல்லை என்று சொல்லுகிறார்களே, ஒரு வேளை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகத்திலே அச்சாபீசில் ஏதாவது அடிக்காமல் விட்டு விட்டார்களோ என்று கூடப் பயப்பட்டேன்; ஆனால் அடுத்துப் பேசிய இன்னொரு உறுப்பினர், அதிலே ஒன்றுமே இல்லை என்று சொல்வதற்குப் பதில், இதிலே நாங்கள் சொன்னதெல்லாம் இருக்கிறது, நாங்கள் சொன்னதெல்லாம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த இரண்டையும் பொருத்திப் பார்த்தால் விவரம் விளங்கவில்லை. 'ஒன்றுமே இல்லை' என்று ஒரு உறுப்பினர் சொல்லுகிறார்; அதே கட்சிக்காரர், இன்னொரு உறுப்பினர், 'நாங்கள் சொன்னதெல்லாம் இருக்கிறது' என்று சொல்லுகிறார். ஒரு வேளை "நீங்கள் சொன்னதெல்லாம் ஒன்றுமே இல்லை" என்பதைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்களா என்று சந்தேகப்படத் தோன்றுகிறது. ஆகையால், 'ஒன்றுமே இல்லை' என்று சொல்லுவதற்கில்லை. கவர்னர் உரை என்பது, இந்தச் சர்க்கார் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களையும் தொகுத்து வெளியிடு

இன்ற ஒரு பெரிய அறிக்கை அல்ல; கோடிட்டுக்காட்டுகிற அறிக்கை. ஆகையால், அதிலே தொழிலாளர்களைப் பற்றி பேசப்படாமல் இருக்கலாம்; கைத்தறி நெசவாளர்களைப் பற்றிப் பேசப்படாமல் இருக்கலாம்; பொறுக்கு விதைகளைப் பற்றிப் பேசப்படாமல் இருக்கலாம்; என்னுடைய நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் கம்போஸ்ட் உரத்தைப்பற்றிக் கூறினார்களே கடைசியில், அதைப்பற்றிப் பேசப்படாமல் இருக்கலாம். ஆனால், இவைகளெல்லாம் தேவை இல்லை என்பதற்காக, அதிலே விடப்படவில்லை. கோடிட்டுக் கோடிட்டுத்தான் காட்டுவார்கள். கவர்னர் உரையில் கோடிட்டுக் காட்டியிருப்பதை வைத்துக்கொண்டு, அதிலிருந்து நாம் மற்றவற்றை யூகித்துக் கொள்ள வேண்டும். "வெற்றிலை பாக்கு போடுகிறீர்களா?" என்று கேட்டால், சுண்ணாம்பு தடவாமல் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது அர்த்தம் அல்ல. "வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுகிறீர்களா?" என்று யாரும் கேட்பது இல்லை. "வெற்றிலை பாக்கு போடுகிறீர்களா?" என்றுதான் கேட்பார்கள். "போட்டுக் கொள்கிறேன்" என்பார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும்தான் வரும். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிப் போட்டுக் கொள்வார்கள். வெற்றிலை, பாக்குத்தானே போட்டுக் கொள்ளச் சொன்னார்கள்? இதோ வெற்றிலை; இதோ பாக்கு, சுண்ணாம்பு வேண்டாம் என்று யாரும் தள்ள மாட்டார்கள். அதே போல், கவர்னர் உரையில் இது இல்லை, இது இல்லை, ஆகவே இதில் எதுவும் இல்லை என்று தள்ளிவிடலாமா? கவர்னர் உரையில் சில குறிப்பிட்ட விஷயங்கள்தான் இருக்கும். அதோடு தொடர்பாக நாம் தான் மற்ற விஷயங்களை யூகித்துக்கொள்ள வேண்டும்.

ஐந்தாவதாக நீங்கள் சொன்னது, "இதிலே தீவிரமான திட்டங்கள் இல்லை" என்பது. தீவிரமான திட்டங்களைக் கவர்னர் உரையில் மட்டும்தானா சொல்ல முடியும் என்று கருதுகிறீர்களா? இந்தச் சர்க்காரினுடைய மற்ற நடவடிக்கைகளில் தீவிரமான திட்டங்கள் இருக்கக்கூடாதா? அல்லது, எல்லாத் தீவிரமான திட்டங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பது கவர்னர் உரையாக மட்டும்தான் இருக்க முடியுமா? அப்படித்தான் என்ன தீவிரத்தை நீங்கள் பேசினீர்கள் என்று பார்த்தேன். ஒன்றும் காணோமே எந்தத் தீவிரத்துக்குப் போனாலும், "போகாதே" என்ற குரல்தான் கிளம்பியிருக்கிறதே தவிர, எந்தத் தீவிரத்தைச் சொன்னீர்கள்? கொள்முதல் ஒரு தீவிரமான திட்டம்; சோஷலிசத் திட்டம். "வேண்டாம், இதற்கு மேல் போகாதே" என்கிறீர்கள். ஸ்டேட் டிரேடிங் ஒரு தீவிரமான திட்டம். "அதிலே நஷ்டம்தான் வரும், அதைத் தொடாதே" என்றுதான் சொல்லுகிறீர்களே தவிர, வேறு என்ன சொன்னீர்கள்? தீவிரமான திட்டத்தைக் கவர்னர் உரையிலே காணவில்லை என்று சொல்லுபவர்கள் தீவிரமான திட்டங்களைக் கொடுப்பார்களானால், ஆலோசிக்கத் தயாராக இருக்கிறேன். அந்த நேரத்திலே சொல்லுவார்கள், "பாங்குகளையெல்லாம் தேசியமயமாக்குவதாகச் சொன்னீர்களே, அது எங்கே?" என்று. இது, கொஞ்சம் அதிகமான அளவிற்குப் பாராளுமன்ற வழக்கம் இல்லாதவர்கள் கேட்டால், நான் தாங்கிக்





கொள்ளலாம். ஆனால் பக்குவம் உள்ளவர்கள் கேட்கிறார்கள். பாங்குகளைத் தேசியமயமாக்குவதற்குச் சட்டம் இங்கா போட முடியும்? அது அங்கே போட முடியும். அங்கே யார் இருக்கிறார்கள்? சாட்சாத் நீங்கள். ஆகையால், தீவிரமான திட்டம் உங்களுக்குப் பிடிக்கும் என்றால், நீங்கள் அங்கே கொண்டு வாருங்கள்; எங்கள் கழகத் தோழர்கள் இருபத்துநான்கு பேர்களையும் அதற்கு நான் வாக்களிக்கச் சொல்லுகிறேன். பாங்குக்காரர்களின் பகை நமக்கு ஏன்? என்று நீங்கள் கருதுவீர்களானால், மற்றவர்களைக் கொண்டுவரச் சொல்லுங்கள்; நீங்கள் அதற்கு வாக்களியுங்கள். அங்கே அதற்குச் சூட்சமம் இருக்கிறபோது, நீங்கள் திருச்சியிலே இருந்துகொண்டு தில்லைச் சிதம்பரத்தைத் தேடினால் அதிலே பலன் இல்லை. அப்படியானால், விட்டுவிடுவதுதானே? என்று கேட்கிறீர்களா? திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட சபைக்கு மட்டுமல்ல; பாராளுமன்றத்திற்கும் தேர்தலுக்கு நிற்கிறது. அந்த அறிக்கையிலே பிரித்தா வைப்பார்கள்? "இதெல்லாம் சட்டசபைக்கு, இதெல்லாம் பாராளுமன்றத்திற்கு, இதெல்லாம் முனிசிபாலிட்டிக்கு, இதெல்லாம் ஜில்லா போர்டுக்கு, இதெல்லாம் பஞ்சாயத்துக்கு, இதெல்லாம் சும்மா, இதெல்லாம் பிறகு" என்றா வைப்பார்கள்? வைக்கமாட்டார்கள். நீங்களாகத்தான் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆகையால், பாங்குகளைத் தேசியமயம் ஆக்கவேண்டும் என்று சொல்லப்பட்ட தீவிரமான திட்டம் எங்கள் தேர்தல் அறிக்கையில் இருக்கிறது என்றாலும், அதை எந்த இடத்தில் வலியுறுத்த வேண்டுமோ அந்த இடத்தில் நிச்சயமாக வலியுறுத்துவோம்.

அதற்குப் பிறகு, அவர்களுக்கு ரொம்ப வலிவான ஒரு காரணம், "நீங்கள் இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை என்ன செய்யப் போகிறீர்கள்" என்பது. கேட்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், கேட்பதற்கு முழு உரிமை பெற்றவர்கள், எங்களுக்கு வாக்கு அளித்தவர்கள். ஏனென்றால், நம்பி எங்களுக்கு வாக்கு அளித்தார்கள். அவர்கள் கேட்க வேண்டும். ஆனால், நீங்கள் கேட்கிறீர்கள். பரவாயில்லை. ஏன் 'பரவாயில்லை' என்கிறேன் என்றால், வாக்காளர்களுக்கு அந்த அவநம்பிக்கை ஏற்படவில்லை. ஆகையால் அவர்கள் எங்களை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கேட்கிறீர்கள், "என்ன ஆயிற்று?" "என்ன ஆயிற்று?" என்று. நான் முன்பே சொல்லி இருக்கிறபடி, படிப்படியாக, முறையாக, உரிய காலத்தில், உரிய அளவிற்கு நிறைவேற்றப்படும்.

உடனே?

இல்லை.

எல்லாம் மொத்தமாக?

இல்லை.

எதையாவது விட்டுவிட்டீர்களா?

அதுவும் இல்லை.

எல்லாம் நிறைவேற்றப்படும். உரிய நேரத்தில், முறையாக, படிப்படியாக.

அதற்கு என்ன தேவை?

எது முதலில்? எது இரண்டாவது? எது மூன்றாவது? என்ற 'ப்ரையாரிடி' தேவை. ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி வந்திருக்கிற குறைபாடு எதிலே வந்திருக்கிறது? அவர்கள் செய்ததெல்லாம் தேவையான காரியம்தான். பம்பாயில் ட்ராம்பேயில் அடாமிக் ரிசர்ச் ஸ்டேஷன் தேவை இல்லையா? தேவைதான். திருச்சியிலே கட்டியிருக்கிறீர்களே, டூரிஸ்ட் சென்டர்? தேவை இல்லையா? தேவைதான். மாமல்லபுரத்தில் அமைத்திருக்கிறீர்களே, கற்சிலை வடிக்கக் கற்றுக்கொடுப்பதற்கான பள்ளிக்கூடம்? தேவை இல்லையா? தேவைதான். இதிலே எது முதலில்? எது இரண்டாவது? எது மூன்றாவது? என்ற 'ப்ரையாரிடி' யில்தானே இப்பொழுது தகராறே வந்திருக்கிறது? அதைப்போல்தான் தேர்தல் அறிக்கையில் என்ன என்ன செய்வதாகச் சொல்லியிருக்கிறோமோ அதற்கு 'ப்ரையாரிடி' இல்லையா, எதை முதலில் செய்வது, எதைப் பிறகு செய்வது என்று? அந்த 'ப்ரையாரிடி' யை நாங்கள் வகுத்துக் கொள்ள வேண்டும். அந்த 'ப்ரையாரிடி' யை வகுத்துக்கொண்டு, நாங்கள் வாக்களித்த எதையும் நாங்கள் நிறைவேற்றாமல் இருக்கமாட்டோம். எதையாகிலும் நிறைவேற்ற முடியாவிட்டால், மக்களிடத்திலே அதைப்பற்றி ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துச்சொல்லத் தயங்கமாட்டோம்.

அன்றைக்கு ஒரு காங்கிரஸ் உறுப்பினர் "மத்திய சர்க்கார் பேரில் பழி போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ளாதே" என்றார். பழி போடுவது மட்டுமா மத்திய சர்க்கார் பேரில்? சந்தியில் கொண்டுவந்து நிறுத்துவேன். நாங்கள் எடுத்துக்கொள்ளுகிற முயற்சி நிறைவேறவொட்டாமல் மத்திய சர்க்கார் குறுக்கிடுமானால், சந்தைச் சதுக்கத்தில் மக்களுக்கு அது பதில் சொல்லியாக வேண்டும். உங்கள் சர்க்காருக்கும் எங்கள் சர்க்காருக்கும் அதுதான் வித்தியாசம்.

"மத்திய சர்க்கார் பேரில் பழி போடாதே" என்று சொல்லுகிறீர்களே? நான் கேட்கிறேன்; உணவு நெருக்கடி இங்கே இருக்கிறது. நான் பர்மாவிலிருந்தோ, தாய்லாந்திலிருந்தோ தேவையான அரிசி வரவழைக்க வேண்டுமென்றால், அதிகாரம் இருக்கிறதா? அந்த அதிகாரத்தைக் கொடுக்கும்படி மத்திய சர்க்காரைக் கேட்டால் எனக்குத் துணை இருக்க வேண்டுமா? பழி போடாதே' என்று சொல்ல வேண்டுமா? நான் இன்னமும் தெளிவாகச் சொல்லுகிறேன். பர்மாவில் இருந்துவிட்டுத் தமிழகத்திற்குத் திரும்பியிருக்கிற தமிழர்களிலே பலர் தங்கள் சொத்துக்களை விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். இன்னும் திருப்பித் தரப்படவில்லை. அந்தக் கணக்கை எடுத்து, அதற்குரியதைப் பணமாகக் கொடுக்காமல் 'அரிசியாகக் கொடுங்கள் என்று பர்மாவைக் கேட்கிற அதிகாரம் எனக்கு இருக்கிறதா? எனக்கு இல்லாவிட்டால் போகிறது. நண்பர் கருத்திருமன் இங்கே வந்து உட்கார்ந்



தாலும், அவருக்காவது அந்த அதிகாரம் வருமா? வராது. நான் வைத்துக்கொண்டிருக்கிற இலாக்காக்களிலே ஒன்று, "இண்டியன்ஸ் ஓவர்ஸீஸ்"—வெளிநாட்டிலே உள்ள இந்தியர்கள். நான் அதிலே என்ன பார்க்கலாம்? எத்தனை பேர் கப்பலில் வருகிறார்கள் என்று கணக்குப் பார்க்கலாம். வந்தவன் நோயாளியா? அகதியா? என்று பார்க்கலாம். நோயாளியாக இருந்தால் ஆஸ்பத்திரிக்கு அனுப்பலாம். அகதியாக இருந்தால் ஏதாவது ஆசிரமத்திற்கு அனுப்பி வைக்கலாம். 'சோறு இல்லை' என்றால் 'ஏதாவது கம்பர் விழா நடைபெற்றால் அங்கே போய் ஒரு வேளைச் சாப்பாட்டைப் பார்த்துக்கொள்' என்று சொல்லலாம். இதுதான் அந்த இலாக்காவிலே எனக்கு இருப்பதே தவிர, பர்மாவிலிருக்கும் பணத்தைப் பணமாகக் கொடுக்காவிட்டால் போகிறது, அரிசியாகக் கொடுங்கள் என்று கேட்க அதிகாரம் இருக்கிறதா? அந்த அரிசி வந்தால், ஏன் மூன்று படி அரிசி போட முடியாது? மூன்று படி அரிசி எப்படிப் போடுவது? எப்படிப் போடுவது? என்றால், அதற்குத் தேவையானதைச் சொன்னால்தானே? "குழந்தை குட்டியோடு வாழவேண்டும்" என்று ஒரு பெரியவர் ஆசீர்வதித்துவிட்டு முகூர்த்தத்திற்கு நாள் வைக்காவிட்டால் அந்த ஆசீர்வாதத்திற்கு என்ன பலன்? அதைப்போல்தான், மூன்று படி அரிசி போட வேண்டு என்கிறீர்கள். போடுவதாகச் சொல்லுகிறேன். எந்த எந்த இடத்திலிருந்து அரிசி கிடைக்குமோ அங்கிருந்து வாங்கி, நாட்டிலுள்ள நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு மாநில சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. ஆகவே அதை மத்திய சர்க்காரிடத்திலே கேட்க வேண்டும் என்று நான் சொன்னால், "மத்திய சர்க்கார் பேரிலே பழி போடாதே" என்று சொல்வது?

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு, விலைவாசி உயருகிற நேரத்தில் எல்லாம் சம்பளத்தை உயர்த்துகிறார்கள். அவர்கள் சம்பளத்தை உயர்த்த உயர்த்த, நம்முடைய சர்க்கார் ஊழியர்கள், "எங்களையும் கவனியுங்கள்" என்று கேட்கிறார்கள். நியாயமான கேள்வி, அப்படிப்பட்ட கோரிக்கையைப் புறக்கணிக்க முடியாது. "அவர்களுக்குச் சம்பளத்தை நாம் உயர்த்தினால், எங்களுக்குப் புதிதாக ஏற்பட்ட செலவிற்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்" என்று மத்திய சர்க்காரை நான் கேட்டால், "முடியாது" என்று மத்திய சர்க்கார் சொன்னால், அதை மென்று தின்றுவிட்டுச் செல்லுகிறீர்களா? மக்கள் முன்னேதான் வைப்பேன். அதற்குத்தான் இந்தச் சர்க்கார் வந்திருக்கிறது. அதற்கு இந்தச் சர்க்கார் வந்திருப்பது மட்டுமல்ல; அதன் மூலமாக, மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு இல்லாமல் மாநில சர்க்கார் எதையுமே சாதிக்க முடியாத அளவிற்கு உள்ள ஒரு அரசியல் சட்டத்திற்கு நாம் இன்றையதினம் ஆட்பட்டிருக்கிறோம் என்று அகில உலகம் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கும் இந்தச் சர்க்கார் வந்திருக்கிறது. ஆகவே, பழி போடாதீர்கள் என்று சொல்லாதீர்கள். வேண்டுமானால், காட்டிக் கொடுக்காதீர்கள் என்று சொல்லுங்கள். "மத்திய சர்க்காரை காட்டிக் கொடுக்காதீர்கள் என்கிறபோது அங்கே எங்கள் கட்சியைச் சேர்ந்த

தோழர்கள் அமர்ந்திருக்கிறார்கள்" என்று சொன்னால், நியாயமில்லாவிட்டாலும், அந்த வார்த்தையிலே பொருத்தமாவது இருக்கும். பழிபோடாதீர்கள் என்று சொன்னால், அதற்கு யார் பொறுப்பு? இங்கே பாலாடைக் கட்டி கிடைக்கவில்லை. நமக்குப் போதுமான பாலாடைக் கட்டியை டென்மார் கொடுக்கவில்லை என்று சொன்னால், இங்கே போதுமான இறைச்சி கிடைக்கவில்லை—நமக்குப் போதுமான இறைச்சியை ஆஸ்திரேலியா கொடுக்கவில்லை என்று சொன்னால்—இப்படிச் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பாக்காதீர்கள் என்று சொல்லுங்கள். இது போல டெல்லியில் இருக்கிற சர்க்கார் எங்கோ இருக்கிற சர்க்காரா? நமக்குள்ள உரிமையை டெல்லியிடத்தில் தட்டிக் கேட்க நமக்கு உரிமையில்லையா? அது மத்திய சர்க்கார் என்று சொல்வதாலே அதன் பக்கத்தில் போகக் கூடாது என்று சொல்கிறீர்களா? நான் இன்னொரு அவையில்கூடச் சொன்னேன். அது மத்திய சர்க்காரும் அல்ல. மத்திய சர்க்கார் என்றால், மற்ற மாநில சர்க்கார்களுக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிட்டு, நடுவில் இருக்கிற அதிகாரத்தைமட்டும் எடுத்துக்கொண்டிருப்பதாக இல்லை. எல்லா இராஜ்யங்களுக்கும் மத்தியில் இருப்பதனாலே அதை மத்திய சர்க்கார் என்று சொல்லலாம் என்றால், அது ஹைதராபாத்தில் இருக்க வேண்டும்—அந்த வகையிலும் இல்லை. அது இன்றையதினம் சுற்றியிருக்கிற மாநில சர்க்கார்களைப் பார்த்து, "என்னைக் கேட்காதே! என்னைக் கேட்காதே!" என்று சொல்லுகின்ற வகையில்தான் மத்திய சர்க்காராக இருக்கிறதே தவிர வேறு வகையில் இல்லை. ஆக, நாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்கின்ற நேரத்தில் நியாயமான முறையில் மத்திய சர்க்கார் எங்களுக்குக் கொடுக்க வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுக்காவிட்டால் நிச்சயமாக மக்கள் மத்தியில் அதை எடுத்து வைப்பேன் என்று இப்பொழுதே தெளிவுபடுத்துகிறேன். நான் மட்டுமல்ல—கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாட் அவர்களும். இதே போக்கில்தான் இருப்பார்கள். நாங்கள் இருவரும் பேசிக் கொண்ட கருத்து அல்ல. எங்கள் இருவருக்கும் இடையில் அந்தக் கருத்து இருப்பதுபோலத்தான் இன்றைய தினம் காங்கிரசல்லாத அமைச்சரவை எந்தெந்த மாநிலங்களில் ஏற்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இந்தப் போக்கு காணப்படும். ஆக, நாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கிறபோது, மத்திய சர்க்கார் இதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லையென்றால், மத்திய சர்க்காரின் போக்கு அம்பலப்படுத்தப்படும், மத்திய சர்க்காரின் போக்கு கண்டிக்கப்படும், மத்திய சர்க்காரின் போக்கு சந்திக்குக் கொண்டு வரப்படும் என்பதை இப்போதே இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த மாதம் 8, 9-ம் தேதிகளில், மத்திய சர்க்கார் அமைச்சர்களை நான் பார்க்கவும் இருக்கிறேன். அவர்களோடு நேரில் சந்தித்துப் பேசுவதற்கு முன்னாலே நான் எப்பட்டிப்பட்டவன் என்பதை அவர்கள் கொஞ்சம் உணர்ந்திருக்க வேண்டும் என்பதற்காகவே, இன்றைக்கே இந்தச் சட்டமன்றத்திலே என்னுடைய இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறேன்.



அதற்குப் பிறகு இந்த மன்ற உறுப்பினர்கள் கொள்முதலைப் பற்றிச் சொன்னார்கள், இதில் தெளிவாக ஒன்று சொல்லுகிறேன். கொள்முதல் காரியத்தில் அக்கிரமமாக எந்த அதிகாரி நடந்து கொண்டாலும் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள்தான்—வியாபாரிகள்தான்—பகைவர்களைப் போல நடத்தப்படுகிறார்கள்; அதிகாரிகளை நாங்கள் உறவினர்கள் என்று கருதிக் கொண்டிருப்பதாக நினைக்கத் தேவையில்லை. சமூகவிரோதமான காரியங்களை யார் செய்தாலும், அவர்கள் பேரில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க இந்தச் சர்க்கார் தயங்காது. அப்படி கண்டிப்போடு காரியங்கள் நடத்தப்படும் என்று சொன்னபிறகும், பூசை அறைக்குள் நுழைந்தார்கள், தவறாகப் பேசினார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பார்களானால், பணிவன்புடன் நான் கேட்டுக் கொள்கிறேன், கொள்முதல் செய்ய அதிகாரிகள் வருகிறபோது, பூஜை அறைக்குள்ளே கொண்டு போய் தானியங்களைப் பதுக்கி வைத்து உள்ளே நுழையக் கூடாது என்று சொன்னால் அதற்கு என்ன வழி? நண்பர் கருத்திருமன் அவர்களே அப்படியும் நடக்கக்கூடும் என்று சொன்னார்கள். பூஜை அறைக்குள் பூட்ஸ் காலோடு போக வேண்டுமென்று நான் சொல்லவில்லை. கொள்முதல் செய்ய அதிகாரிகள் வருகிறபோது, மக்கள் அவர்களுடன் ஒத்துழைக்கக்கூடிய ஒரு மனப்பான்மை வளர்க்கப்படவேண்டும். ஆக, நான் இந்த மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது இதுதான்: கூட்டம் முடிந்து, அவரவர்கள் தங்கள் தொகுதிக்குப் போகிறபோது, கட்சி மாச்சரியத்தை மறந்து, கொள்முதல் நியாயம்தான் என்பதை தானியம் வைத்திருப்பவர்களிடம் எடுத்துச் சொல்லி, கொள்முதல் திட்டம் வெற்றிகரமாக நடைபெற மக்களுடைய ஒத்துழைப்பைத் தேடித் தர வேண்டும். எங்காவது அதிகாரிகள் தவறாக நடந்தால், நீங்களே அவர்களைக் கண்டிக்கலாம். இந்த மன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அந்த அதிகாரம் இருக்கிறது. இந்த மன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எந்த அதிகாரியும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். நானேதான் அதிகாரிகளைக் கேட்க வேண்டுமென்று கருதாமல் திரு. கருத்திருமனைப் போன்றவர்கள் அதிகாரிகளுக்கு யோசனைகூட சொல்லலாம். அவருக்குத் தெரியாத அதிகாரி யார் இருக்கப் போகிறார்கள்? 20 வருஷப் பழக்கம் ஆயிற்றே? எனக்குக்கூட 20 நாள் பழக்கம்தான். எத்தனையோ அதிகாரிகள் அவருடைய சிபாரிசைப் பெற்று அந்த நிலைக்கு வந்திருக்கக்கூடும். ஆர்க்காட்டிலிருந்து ஆரணிக்கும், ஆரணியிலிருந்து வேலூருக்கும் என்று வந்திருக்கக்கூடும். அந்த அனுபவம் எனக்குக்கூட இல்லை. எந்த அதிகாரி தவறாக நடந்து கொண்டாலும் நிச்சயமாக இந்த சர்க்கார் தயவுதாட்சண்யம் காட்டாது—கண்டிப்பான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளும். அதேசமயம் கொள்முதல் கட்டாயம் தேவை என்பதை வலியுறுத்தி நீங்களும்பிரசாரம் செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குக்கூட ஒவ்வொரு சமயம், நான் அடைய முடியாததைக் கேட்கிறேனோ என்று ஒருவித மயக்கம்கூட ஏற்படுகிறது.

என்றாலும், இந்த அவையிலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் அவர்களுக்கு என்னிடத்திலும் சர்க்காரிடத்திலும் இருக்கிற நல்லெண்ணத்தை ஓரளவு அறிந்துகொள்ள முடிந்ததால், நான் கேட்டுக் கொள்கிறேன், வெளியில் உள்ளவர்கள் தங்களுடைய தேவைக்குப் போக மீதம் உள்ள தானியத்தை இந்த நெருக்கடியான நேரத்தில் கொள்முதலுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்த வேண்டும். நேற்றைய தினம் வேலூருக்குச் சென்றிருந்தேன். என்னிடத்தில் ஒரு கடிதம் எழுதி விண்ணப்பமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதில் தங்களிடம் இரண்டாயிரம் அரிசி மூட்டைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டு அந்த அரிசியை சர்க்கார் நிர்ணயித்த விலைக்கே வாணியம்பாடியில் விற்பதற்கு அனுமதி கோரியிருக்கிறார்கள். அந்த வியாபாரிகளின் கையில் இருக்கக்கூடிய அந்த அரிசி சர்க்கார் கணக்கிற்கு வரவில்லை. வீட்டில் புகுந்து எடுக்கிறார்களே என்ற நிலை வந்த பிறகுதான் அவர்கள் தாமாகவே இந்தத் தகவலை என்னிடம் கொடுக்க முன்வந்துள்ளார்கள். "சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலையில் வாணியம்பாடியிலேயே இதை விற்றுக்கொள்ள அனுமதி கொடுங்கள்" என்று என்னைக் கேட்டார்கள். "இப்படி விற்றுக் கொள்ள அவர்களுக்கு அனுமதி கொடுத்தால் என்ன?" என்று அதிகாரிகளைக் கேட்டேன். அதிகாரிகள், "நாம் வாணியம்பாடிக்கு குடும்பக் கார்டு முறையில் அரிசி வழங்க பொறுப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. குடியாத்தத்திற்கு ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த இரண்டாயிரம் மூட்டைகளையும் குடியாத்தத்திற்கு அனுப்பி, அங்கு விற்கலாம்" என்றார்கள். இதை அந்த வியாபாரிகளிடம் சொன்னதற்கு, "குடியாத்தத்திற்குக் கொண்டுபோனால் எங்களுக்கு எடை குறையுமோ!" என்றார்கள். எப்படி எடைகுறையும்? இங்கே எடை குறையாமல் இருக்க என்ன ரகசியத்தைக் கையாளுகிறார்கள் என்பதைத்தான் நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். நான்கூடச் சொல்லிப் பார்த்தேன். "அங்கே கொண்டுபோய், இருக்கிற அளவுக்குப் பணம் வாங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏற்படுகிற நஷ்டத்தைப் பாதி பாதியாக ஒத்துக் கொள்ளலாமே" என்று சொன்னேன். அவர்கள் 'முடியாது' என்றார்கள். இதுதான் இங்குள்ள வியாபாரிகளின் மனப்போக்கு. நீங்கள் என்னைப் பார்த்துப் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள் என்று சொல்கிறீர்கள். நான் எப்போதுமே பக்குவத்திற்குப் பெயர்போனவன். முரட்டுத்தனமாக நடந்துகொள்வேன் என்று நினைக்காதீர்கள். இன்றைக்கு அரிசி இருக்கிறது; விவசாயிகள் தங்கள் அரிசியை வெளியில்விட மனம் அற்றவர்களாக இருக்கிறார்கள். காரணம், நாம் நிர்ணயித்திருக்கிற விலை போதவில்லை என்பது அவர்களுடைய மனக்குறை. வியாபாரிகளிடத்தில் அரிசி இருக்கிறது. அது வெளிவராமல் இருப்பதற்குக் காரணம், இன்றுள்ள விலையைக்கூட இன்னும் அதிக விலைக்கு கொஞ்சம் நாள் போனால் விற்கலாமே? அதனால் தங்களுக்கு அதிக லாபம் கிடைக்காதா? என்ற எண்ணம். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது நான் காந்திய வழியில் வந்தவன் என்று சொன்னார். ஆசையை அடக்கு என்று தான் காந்தியார் சொன்னார். ஆசையை அடக்குங்கள் என்று வியாபாரிகளுக்கு நீங்கள் சொல்ல வேண்டும்.



நாட்டு மக்கள் ஒருவேளைச் சோற்றுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, நாமும் ஆசையை அடக்கிக் கொள்ள வேண்டும். ஒரு ரூபாய் கிடைத்தால் போதும், இரண்டு ரூபாய் கிடைத்தால் போதும் என்று நம்முடைய ஆசையை அடக்கிக்கொள்ள வேண்டும். சில வருஷங்களுக்கு முன், கோணி கிடைத்தால் போதும் என்று வியாபாரிகள் சுற்றிக்கொண்டிருந்தார்கள். லாபம் கிடைக்கக் கிடைக்க மேலும் அதைப் பெற வேண்டுமென்று நினைப்பதுதான் இயல்பு. பொருளாதார நூலின் அடிப்படையே, Wants areunlimited in number தேவை என்பதற்குக் கணக்கே கிடையாது. 30 ரூபாய், 32 ரூபாய் என்று அன்றைய தினம் ஒரு மூட்டை நெல்லுக்கு விலை நிர்ணயித்தபோது தமிழ்நாட்டு மிராசுதார்கள் சர்க்காருக்கு நன்றி சொன்னார்கள். 'இது நியாயமான விலை; இந்த விலை கொடுத்தால், நாங்கள் ஏன் பதுக்கப்போகிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 'இது மிகக் குறைவாக இருக்கிறது; கட்டுப்படியாகவில்லை' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். என்ன விலை நிர்ணயிக்க வேண்டுமென்று நான் கேட்டபோது கூட, எதிர்க் கட்சித் தலைவர் அதை நான் பின்னாலே சொல்கிறேன் என்று ஜாக்கிரதையாகச் சொல்லிவிட்டார். அதிகப் பணம் விவசாயிகளுக்குக் கொடுப்பதால்கூட கெடுதல் இல்லை. அவர்களிடத்தில் கொடுக்கிற பணம் திரும்பவும் கடைவீதிக்குத்தான் வரும், அதனால் தொழில்கள் வளரும். பல தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். நல்ல பணம் கிடைத்தால் ஒரு விவசாயி தன்னுடைய மகனுக்கு ஒரு சைகிள் வாங்கிக் கொடுப்பான். தனக்கு ஒரு கார் வாங்கிக் கொள்வான். அவனிடத்திலுள்ள பணம் இப்படிக் கடைவீதிக்கு வந்து பல தொழில்கள் வளருவதற்குக் கூட உதவியாக இருக்கும். ஆனால், விவசாயிகளிடத்தில்கூட இன்றைக்கு அந்தப் பணம் போகவில்லை--நடுவிலேயே நின்றுவிடுகிறது. நடுவில் உள்ளவர் லாபகரமாக அந்தப் பணத்தை சேர்த்துக் கொண்டு 6 லட்சத்திலே வீடு கட்டுகிறார். அதைக் கணக்கில் காட்டாமல் இருக்க 6 லட்சத்திலே வீட்டைக் கட்டி, 67 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டியதாக எழுதிக் கொடுத்திருப்பது இங்குள்ள உறுப்பினர்களுக்குத் தெரியாதா? இவர்களுடைய ஆட்சியில் தானே கணக்கில் வராத பணம் என்று ஒரு இனமே ஏற்பட்டது. இப்படிக் கணக்கில் வராத பணத்திற்கு இந்த லாபம் போகிறதே தவிர, விவசாயிகளிடத்தில் சென்றால் என்னைப்பொறுத்த வரையில் அதை வரவேற்பேன். விவசாயிகளுடைய நிலைமையை உயர்த்த வேண்டுமென்பதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. விவசாயிகளை உயர்த்த வேண்டுமென்பதற்காகவே கொள்முதல் இருக்கிறது. ஆகவே, விவசாய மக்கள் கொள்முதல் திட்டத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லி, அதன்மூலம் தான் நாட்டுக்குச் சுபிட்சம் கிடைக்கும் என்று எடுத்துச் சொல்லி இந்தத் திட்டம் வெற்றிபெறும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

மற்றபடி வேறு பல கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப் பட்டன. நேரம் இல்லாத காரணத்தினால் அவை எல்லாவற்றையும் பற்றி நான் பேசுவதாக இல்லை. மேலும் திருப்பித் திருப்பிப்

பேசி, என்னுடைய நண்பர்களாகிய நீங்கள், "இந்த ஒரு கருத்தை எடுத்துச் சொல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருக்கும்" என என்னிடம் மனத்தாங்கல் கொள்ளாதிருக்க நான் அதிகம் பேச விரும்பவில்லை. உங்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் விரும்புகிறேன். பல உறுப்பினர்கள் எங்களிடம் சொன்னதுபோல, "ராஜாஜி அவர்கள் ஒரு புளியமரம். அவருடைய நிழலடியில் நீங்கள் வளர முடியாது" என்று சொன்னதைப் பொய்யாக்கி, "அவர் புளிய மரமும் அல்ல; நாங்கள் பூ, காய் கனியென வளர்வதற்கு தனிச் சக்தி பெற்றவர்கள்" ஆக புளிய மரமும் இல்லை, எந்த நிழலும் இல்லை. இத்தகைய தவறான வாதத்தையே பேசிக்கொண்டிராமல், உங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு. சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்தபோதுகூட அவருடைய ஒத்துழைப்பைக் கோரினேன். பிரஜா சோஷலிஸ்ட் உறுப்பினர் வெளியூரிலிருந்தே எனக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டார்? "நீங்கள் ஏன் அவருடைய யோசனையைக் கேட்க வேண்டும்?" என்று. நான் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினுடைய யோசனையையும் கேட்கிறேன். "அவர்களிடம் யோசனை கேட்காதீர்கள்; உங்களைத் தவறான வழியில் தள்ளிவிடுவார்கள்" என்று சிலர் சொல்கிறார்கள். அனுபவத்தினால் அவர்கள் அப்படிச் சொல்கிறார்களோ, அறியாததனால் சொல்கிறார்களோ, நான் எப்போதுமே எனது நண்பர்களைப் பரிபூரணமாக நம்புகிறவன். இடதுசாரி கம்யூனிஸ்டுகளையும் பரிபூரணமாக நம்புகிறேன். காங்கிரஸ் தலைவருடைய யோசனையையும் கேட்கிறேன். இரண்டு மூன்று தினங்களுக்கு முன் திரு. காமராஜ் அவர்களை நான் சந்தித்துப் பேசியது திரு. கருத்திருமன் அவர்களுக்கும் தெரியும். "எப்படி இருக்கிறது?" என்று அவர் கேட்டார். "கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது" என்று நானும் சொன்னேன். "தைரியமாக நடத்திச் செல்லுங்கள், எங்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும்" என்று திரு. காமராஜ் சொன்னார். இப்படி மேலே எல்லாம் சரியாக இருக்கிறது. எதுவுமே மேலே சரியாக இருக்கும். கீழே வரவரத்தான் குறைந்துவிடும். தயிரைக் கடைந்தால் வெண்ணெய் மேலே மிதந்து வருகிறது. வெண்ணெயை எடுத்துவிட்டு, அந்த மோரைச் சிறிது ஆற்றினால் நுரை வரும். இப்படி மேல் மட்டத்திலே எல்லாம் சரியாக இருக்கிறது. கீழே உள்ளவர்களுக்கும் நாம்தான் எடுத்துச் சொல்ல வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில புகார்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவரிடம் உள்ள ஃபைலை என்னிடம் கொடுத்து விடட்டும். என்னிடம் உள்ள ஃபைலை அவரிடம் கொடுத்து விடுகிறேன். அவரிடமிருந்து வந்த ஃபைலை நான் படித்துப் பார்க்கிறேன். அவரும் நான் கொடுத்த பெரிய ஃபைலை படித்துப் பார்க்கட்டும். அப்படி ஃபைலைக் கொடுக்கிறபோது சில விவரங்களை அதிலிருந்து அவர்கள் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். தனித் தனியாக நாங்கள் தீர்ப்புக் கொடுக்கிறபோது உண்மையை உணர்ந்து கொள்ளலாம். ஆதார





மில்லாத பொய்ப் புகார்கள் பல வருகின்றன. நாம் இன்றைக்கு ஒன்றுபட்டு அரசியல் மாச்சரியங்களை மறந்து பணியாற்றியாக வேண்டும். அப்போதுதான் ஒன்றுபட்ட ஜனநாயகக் கருத்து வளர்க்கப்படும். தமிழ்நாடுதான் மற்ற ராஜ்யங்களுக்கு வழி காட்டக்கூடிய நிலையில் செயல்பட்டாக வேண்டும்.

நண்பர் விநாயகம் அவர்கள் பேசியபோது சொன்னார்கள். ஷேக்ஸ்பியர் நாடகத்திலிருந்து மேற்கோள் காட்டினார் என்று நினைக்கிறேன். காலேஜில் ஷேக்ஸ்பியர் நாடகத்தில் நடித்திருப்பார் போல் தெரிகிறது. (சிரிப்பு). நாங்கள் 6-ம் தேதிதான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர் பேசும்போது, "Your days are numbered". உங்கள் காலம் முடியப்போகிறது—என்று குறிப்பிட்டார்கள். இது ஒத்துழைப்புக்கு அடையாளம் அல்ல. அதைக் கேட்கும்போது எங்களுக்கு என்ன தோன்றும்? 'இருக்கப் போவதோ கொஞ்ச நாளைக்குத்தான். அதற்குள் நமக்குத் திருப்தி தரக்கூடிய காரியங்களைச் செய்துகொண்டுவிடவேண்டும்' என்ற நினைப்புத் தோன்றலாம். திருப்திப்படுத்தக்கூடிய காரியங்கள் எது? நம்மைக் கொடுமை செய்தவர்களைக் கொஞ்சம் பதம் பார்க்கலாமா?' என்றுதான் தோன்றும். அப்படிக் கருதுகிறவன் நான் அல்ல. சர்க்கார் நிர்வாகம் நிரந்தரமானது. இன்று நான் இருக்கலாம்—நாளை மற்றொருவர் வரலாம். நியாயப் பண்பை விட்டுவிட்டு நிர்வாகம் நடக்கக்கூடாது. என்னைப் பொறுத்தவரை, பகையற்று, கட்சி உணர்ச்சியற்று, கட்சி மாச்சரியமற்று, இங்கே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அந்தப் பண்பு தமிழ்நாட்டுக்கு எத்தனை காலம் தேவையோ, அத்தனை காலம் என்னை வைத்திருங்கள். அந்தப் பண்பு வேண்டாமென்று எப்பொழுது நினைக்கிறீர்களோ அப்பொழுது என்னை அகற்றிவிட்டு யாரையாவது வைத்துக் கொள்ளுங்கள்—நண்பர் விநாயகம் இருக்கிறார்; நண்பர் கருத்திருமன் இருக்கிறார்; யாரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்னை நன்றாக அறிந்தவர்கள். இந்தப் பத்து நாட்களுக்குள்ளேயே எனக்கு இந்தப் பொறுப்பு சலித்துப்போய்விட்டது. இங்கே இருந்து சாதிக்கக் கூடியதைவிட அங்கேயிருந்து நான் சாதிக்கக் கூடியது மிக அதிகமாக இருக்கும் என்பது அவருக்குத் தெரியும். நான் ஏதோ மகிழ்ச்சியில் இருப்பதாக எண்ணிக்கொண்டு, "Your days are numbered" என்று விநாயகம் சொன்னார். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். "My steps are measured" அடிக்கு அடி நான் அளவு எடுத்து காலெடுத்து வைக்கிறேன். என்னால் காலெடுத்து வைக்க முடியவில்லையென்றால், கைதட்டி வலிவு உள்ளவர்களைக் கூப்பிட்டு 'என்னால் இனி மேலே செல்ல முடியாது. நீங்கள் பொறுப்பை எடுத்துக்கொள்ளுங்கள். கணக்கைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று பொறுப்பைக் கொடுத்துவிட்டுப் போய்விடுவேன். என்னைப் பார்த்து திரு. விநாயகம் அவர்கள் "Your days are numbered" என்று சொன்னால்—எனக்கு வருத்தம் அல்ல—பத்திரிகையில்

அந்தச் செய்தி வந்தால், வெளியில் உள்ளவர்கள் உங்களைப்பற்றி என்ன சொல்வார்கள் என்று எண்ணிப்பாருங்கள். நண்பர் கருத்திருமன் அவர்கள் நிறையக் கதைகளைச் சொன்னார்கள். நானும்கூட ஒரே ஒரு கதையைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ரொம்ப நாள் குழந்தை ஒன்று பேசாமல் இருந்தது. ஒரு சோதிடனை அழைத்துக் கேட்டார்கள். இந்த நாளில், இந்தக் குழந்தை பேசும் என்று அந்தச் சோதிடன் சொன்னான். அந்த நாளில் அந்தக் குழந்தையைச் சுற்றி, அதன் தாயும் தகப்பனும், அத்தையும் உட்கார்ந்து கொண்டு குழந்தை பேசாதா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நாழிகை பிறந்தது. குழந்தையும் வாயைத் திறந்தது. அது என்ன பேசப் போகிறது என்று தாய் ஆவலோடு கேட்கிறாள். முதல்தடவையாக, வாயைத் திறந்து அந்தக் குழந்தை பேச ஆரம்பித்தது. "அம்மா, அத்தை கழுத்து மாதிரி உன் கழுத்து எப்போது இருக்கும்?" என்று எடுத்த உடனே கேட்டது. அத்தை கழுத்து என்றால், அத்தை விதவை. அது போல் ஆகவேண்டும் என்று சொல்லியதாம் பேசாமல் இருந்த குழந்தை பேசியபொழுது. இந்தக் குழந்தை 'டேஸ் ஆர் நம்பர்டு' என்று சொல்லியிருக்கிறது. அவர்கள் சொல்லிய கருத்திலே குற்றம் இருக்காது என்று நினைக்கிறேன். ஆனால், அப்படிப் பேசியது குழந்தைத்தனமாகப் பேசியிருக்கிறார்கள் என்ற முறையிலே தெரிவித்துக்கொண்டு இதுவரை கருத்தளித்த எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் சார், முதலமைச்சர் அவர்கள் நான் பேசியதிலே ஒரு வார்த்தை மட்டும் எடுத்துச் சொன்னார்கள். அதோடு தொக்கியிருக்கிற வார்த்தையையும் சேர்த்துச் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். சட்டசபை நடவடிக்கைகளிலே கூட பார்த்தால், நான் பேசியிருப்பது தெரியும். அதையொட்டி இரண்டையும் சேர்த்து அவர்கள் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். நான் சொல்லியது என்னவென்றால், 'If they are incapable of delivering the goods to the people, then their days are numbered'. நாட்டுக்கு நன்மை செய்தால் ஒன்றும் தொல்லையில்லை, இல்லாவிட்டால் தான் அப்படி இருக்கும்--என்று சொன்னேன். ஆகையினால் இரண்டையும் சேர்த்துத்தான் சொல்லவேண்டும்.

**மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை:** ஆங்கில இலக்கணம் நண்பர் அவர்களுக்குத் தெரியும். ஆங்கிலத்திலே 'if' and 'but' என்று போட்டாலே அதை அடிப்படைப் பேச்சாக எடுத்துக்கொள்ள முடியாது. அதோடு நான் இன்னும் ஒன்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். முன்பு இருந்த கொள்முதல் கெடுபிடியை நீக்குவதற்காகத்தான் இரண்டு மூன்று நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஒன்று, 1, 2





ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர்களிடம் கொள்முதல் செய்யவேண்டாம் என்பது. இரண்டு, அதிகாரிகள் மரியாதையோடு நடந்துகொள்ளவேண்டுமென்று கடுமையான உத்திரவு போடப்பட்டிருப்பது. மூன்று, எந்தவிதமான முன் அறிவிப்பும் கொடுக்காமல் நெல்லையோ அரிசியையோ கொடுக்கவேண்டுமென்று நாங்கள் நுழைந்து எடுத்துக் கொள்வதற்கு முன்பாகவே அவர்களாக வந்து கொடுக்கலாம் என்பது. அதை அக்கிரமம் என்று மக்கள் கருதக்கூடாத அளவுக்கு, அவர்கள் தங்கள் தேவைக்குப் போக, அவர்களுக்கு எவ்வளவு வந்திருக்கிறது, எவ்வளவு தேவைக்கு வேண்டும், என்று பார்த்து மீதியிருப்பதை அவர்களாகக் கொடுக்க முன்வரவேண்டும் என்ற வகையிலேதான் அதற்கு காலம் கொடுக்க விரும்புகிறேன். கொள்முதல் நடைபெற்றுக்கொண்டே இருந்தாலும் அதற்கிடையிலே சர்க்காருடைய நோக்கம் அக்கிரமம் நடத்தி கொள்முதலைக் கடினமாக்குவது அல்ல. யாரிடத்திலும் நெல்லாவது அரிசியாவது இருந்தாலும், அவர்களுடைய குடும்பச் செலவிற்குப்போக, விவசாயக் கூலி அளவு போக, விதை நெல் தேவைக்கு மேல் இருப்பதை கொடுக்கக்கூடிய முறையிலேதான் அதை அறிவிப்பதற்கான காலம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் காலம் தமிழ் வருஷப் பிறப்பு வரை, அதாவது ஏப்ரல் 14 தேதி வரை காலம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். உணவு தானியத்தை வைத்துக்கொண்டிருப்பவர்களிடம் நண்பர்கள் எல்லோரும் எடுத்துச் சொல்லி அவர்களுடைய தேவைக்குப் போக மிச்சம் இருப்பதை அவர்கள் கொடுக்கிறோம் என்று அறிவிப்பார்களானால் அதுதான் உண்மையான தமிழ் வருஷப் பிறப்பு—தமிழனுடைய வருஷப் பிறப்பு--ஆகும். 14-ஆம் தேதி வரை காலம் இருக்கிறது, அதையும் நம்முடைய நண்பர்கள் மக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டுமென்று அதற்கு அவர்கள் துணை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** கவர்னர் அவர்களின் உரை மீது விவாதம் முடிந்து விட்டது. ஏனைய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அவை அனுமதியளிக்குமென்று கருதுகிறேன்.

அடுத்ததாக, திரு. எம். எஸ். மணி அவர்களுடைய நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின்மீது வாக்களிக்கவேண்டும். அதற்கு முன் திருத்தத் தீர்மானங்கள் இருக்கின்றன. முதலிலே திரு. டி. எம். நல்லசாமி அவர்களுடைய தீர்மானம். அவர் வற்புறுத்துகிறார்களா என்று கேட்கிறேன்.

**திரு. தோ. மு. நல்லசாமி:** வற்புறுத்தவில்லை.

(திருத்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது)

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து திருத்தத் தீர்மானங்கள் கொண்டு வந்த உறுப்பினர்கள்--திரு. ஆ. கு. சுப்பையா, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. வேலுசாமி ஆகிய மூவரும் அவையில்

இல்லாதலால் விதிகளின்படி திருத்தத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

இப்பொழுது முழுமுதற் தீர்மானம்---திரு. எம். எஸ். மணி அவர்களுடைய தீர்மானம். அதாவது, '1967-ஆம் ஆண்டு, மார்ச்சு திங்கள், 17-ஆம் நாளன்று இரண்டு அவைகளும் சேர்ந்த சட்ட மன்றக் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 5. அறிவிப்புகள்---(தொடர்ச்சி)

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** அடுத்து அறிவிப்புகள். மேலவைத் தலைவரிடமிருந்து கிடைத்துள்ள செய்திகளைப்பற்றி மூன்று அறிவிப்புகள் உள்ளன.

### (இ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவும்—அதாவது 1 இலக்கமிட்ட பேரவை மசோதாவும்—1967-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவும் மதாவது 4 என்ற இலக்கமிட்ட மசோதாவும்—28-3-1967 அன்று எவ்வித மாறுதலும் இல்லாமல் மேலவையில் நிறைவேற்றப்பட்டன என்றும் 1967-ம் ஆண்டு பேரவை—(தகுதியின்மை நீக்கல்) மசோதா—அதாவது 3 என்ற இலக்கமிட்ட பேரவை மசோதா—20-3-1967 அன்று எவ்வித திருத்தமும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது என்றும் மேலவையின் தலைவரிடமிருந்து செய்திகள் வந்துள்ளன.

### (உ) பொதுக் கணக்குக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்:** 1967-68-ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவுக்கு பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி—உறுப்பினர்களாகக் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள செய்தி கிடைத்திருக்கிறது:—

1. திரு. என். ஆர். தியாகராஜன்
2. திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர்
3. திரு. எஸ். ராஜமார்த்தாண்டன்
4. திரு. என். வி. நடராசன்
5. திரு. ஏ. ஆர். தாமோதரன்





### (எ) மதிப்பீட்டுக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** 1967-68-ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவுக்கு---எஸ்டிமேட் கமிட்டி—கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்களை நியமித்துள்ளதாக மேலவையின் தலைவரிடமிருந்து செய்தி கிடைத்துள்ளது.

1. திரு. கே. ராமதாஸ்
2. திரு. எம். அய்யாசாமி
3. திருமதி சரசுவதி பாண்டுரங்கம்
4. திரு. சி. பி. சிற்றரசு
5. திரு. டி. சந்தோஷம்

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்தக் கூட்டத் தொடர் இன்றுடன் முடிவடைகிறது. கடந்த 13 நாட்களாக 4 மசோதாக்கள், வரவுசெலவுத் திட்டம், கடந்த ஒட்டுக் கணக்கு மானியக் கோரிக்கைகள், கவர்னர் உரை, இவற்றின்மீது நடந்த விவாதங்களை மிகச் சிறந்த முறையிலும் உயர்ந்த முறையிலும் கண்ணியமிக்க முறையிலும், பிற மாநிலங்கள் பாராட்டத்தக்க முறையிலும் நடத்தியதற்கு, மாண்புமிக்க உறுப்பினர்கள் எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுக்களை, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பேரவை மீண்டும் கூடுகிற நாள் குறிப்பிடப்படாமல் (சைனி டை) தள்ளிவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், நாள் குறிப்பிடப்படாமல் பேரவை ஒத்தி வைக்கப் பட்டது.

### (7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*119. *Notification issued with Memo. No.* 30658/P-III/66-5, *L.A., dated the 2nd January* 1967 *making an amendment to the Madras Panchayats and Panchayat Unions (Preparation of Plans and Estimates, etc.) Rules,* 1963, *published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-832 of* 1963, *dated the 19th July* 1963, *at page* 850 *of Part V of the* Fort St. George *Gazette, dated the 28th August* 1963, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act,* 1958 (Madras Act XXXV of 1958.)] பிற்பகல் 1-50

### B. Reports, Notifications and Other Papers.

**Nil.**

123200

* Placed on the Table of the House on 29th March 1967.

2-5-1-78 | C

25/1783

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

Messrs ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK Co., Mylapore, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, PRIVATE, LIMITED Madras-2.
Messrs NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No, 2/4. Mount Road, Madras-2.

## IN MOFUSSIL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V. NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arco tdistrict.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE Trivandram.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29.
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

ஈ.சு எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 17/6/93 | | | |
| 21/2/94 | 23/2 | | |
| 25/4/95 | | | |
| 26.2.96 | | | |
| 5·7·96 | | | |
| 9-8-96 | | | |
| 27/4/07 | | | |

S.F. 259A-6—1,00,000—20-1-84.

கூட, அவர்களுக்குச் சாதாரணமாகக் கிடைக்கின்ற நன்மைகூட கிடைக்கவில்லை. அதை நிர்வகிக்கின்ற தர்மகர்த்தாக்களோ அல்லது அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அதிகாரிகளோ, தாங்கள் ஜமீந்தார்களாக எண்ணிக்கொண்டு, மிக மோசமான நிலையிலே நடந்துகொண்டிருக்கிறார்கள். சொந்த நிலம் வைத்திருப்பவர்கள்கூட அம்மாதிரி நடந்து கொள்வதில்லை. பரம்பரை தர்மகர்த்தாக்கள் எத்தனை ஊழல்கள் இருக்கின்றனவோ அத்தனையையும் செய்துவிட்டு, சாதாரண விவசாய மக்களுக்கு செய்ய வேண்டிய பல நல்ல காரியங்களை மனமுவந்து செய்யாமல் நடந்து கொண்டு வருகின்றார்கள். ஏழை விவசாயிகள் எல்லாம் அடிமையாக்கப்பட்டு, மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள். இந்தத் துறையில் தக்க கவனம் செலுத்தி, ஏழை விவசாய மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் என் தொகுதியாகிய மதுராந்தகம் வட்டத்திலிருந்து அரிசி ரயில் மூலமாக வேகமாகக் கடத்தப்படுகிறது. மதுராந்தகம் வட்டத்தில் உணவு நிலைமை நல்லபடியாக இருந்தபோதிலும், அரிசி வெளியிடங்களுக்கு கடத்திக்கொண்டு போவதினால், அங்கும் அரிசியின் விலை ஏறிக்கொண்டே போகிறது. பஸ்ஸிலோ, சாலைவழிகளிலோ அரிசி எடுத்துக்கொண்டு போகின்றவர்களை சோதனைச்சாவடியில் தடுத்து நிறுத்தி விடுகிறார்கள் என்பதால், ரயில் மூலமாக அரிசியைக் கடத்திக் கொண்டு போகிறார்கள். ரயிலில் சோதனை செய்வதில்லை. ஜங்ஷன்களில்தான் ரயில் அதிக நேரம் நிற்கும். அங்கேதான் சோதனை நடத்த முடியும். மற்ற இடங்களில் ரயில் அதிக நேரம் நிற்பது இல்லை. ஆகவே, ரயில் மூலம் அரிசியைக் கடத்திக்கொண்டு போவதைத் தடுக்க, ரயிலிலும் பிரத்தியேகமாகச் சோதனை செய்வதற்கான தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களுக்கும், ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கும் ஒரு கூட்டுறவு இருந்துகொண்டிருக்கிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையில்—கனம் உறுப்பினர்கள் முன்னாலே சொல்லியிருப்பவர்களைப் பார்க்கின்றபொழுது, "ரெவின்யூ இலாகாவிலே எந்த விவகாரம் போனாலும் உடனடியாகத் தீர்க்கப்படவில்லை. அங்கே போகின்ற பேப்பர்கள்—விவகாரங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால், ஆண்டுக் கணக்கில் காத்திருக்க வேண்டும்" என்று கூறினார்கள். அதே நேரத்தில் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தை எடுத்துச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு, எந்த வகையிலே மக்களுக்கு உடனடியாக நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்து வருகிறது. பஞ்சாயத்து யூனியனுக்கும், ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கும் ஒத்துப் போவதில்லை. குறிப்பாக, பஞ்சாயத்து யூனியன் ரோடு போட வேண்டுமென்றால், முதலிலே லேண்டை அக்யூர் செய்ய ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு தீர்மானம் அனுப்புவார்கள். அந்த இடத்தில் அந்த பேப்பர் காலதாமதமடைந்து விடுவதால் உரிய நேரத்தில் ஒன்றும் செய்ய முடிவதில்லை. எந்த வேலையும் ஒழுங்காக, நல்லபடியாக நடைபெறுவதில்லை. ஆகவே, பஞ்சாயத்து யூனியனுக்கும், ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கும் இருக்கும் இந்த ஒட்டுறவைப் பிரித்து, இதன் நிர்வாகம் வேறு—அதன் நிர்வாகம் வேறு என்ற அடிப்படையில் செய்யப்படுமானால், மக்களுக்கு உடனடியாக நல்ல பலன்கள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இம்மாதிரி உடனடியாகச் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

• **திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகக் கோரிக்கை எவ்வளவு முக்கியமான கோரிக்கை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, இந்த மாமன்றம் முடிவு செய்த கொள்கை, இரண்டாவது இந்த அமைச்சரவை முடிவு செய்த கொள்கை ஆகியவைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்து பொது





மக்களுக்கு நன்மை செய்வது மாவட்ட நிர்வாகம்தான். சென்ற காலத்திலிருந்த ஊழல் அமைப்புக்கள் எல்லாம் சீர்ப்படுத்தப்பட்டால்தான் நாம் நல்ல கொள்கைகளை எல்லாம் அமுல்படுத்தி, அதனால் நம் மக்கள் எல்லோரும் நன்மை—நல்ல பயன் அடைய முடியும். மாவட்ட நிர்வாகத்திலே அடிப்படையாக அமைந்திருப்பது கிராம நிர்வாகம் தான். கிராம நிர்வாகத்தின் அதிகாரிகள் கிராமக் கர்ணமும், கிராம மணியக்காரரும்தான். இவர்கள் எல்லாம் கிராமத்திலேயிருக்கிற விவசாயிகளுக்கு, விதி முறைகளை மீறி கெடுதலான பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். மாவட்ட நிர்வாகத்திலே ஊழல், நிர்வாகத் திறமையின்மை இருப்பதாகக் கூறினால் அதற்கு மூலகாரணம் கிராம நிர்வாகமே ஆகும். இப்போது கிராம மணியம் பரம்பரை பாத்தியதை முறை ஒழிக்கப்பட்டு விட்டது என்று கூறுகிறார்கள். ஆனால், புதிதாக யார் மணியக்காரராக வர முடியும்? புதிதாக யார் வேண்டுமானாலும் அந்தப் பதவிக்கு வர வாய்ப்பு இருந்தபோதிலும் இப்போதுள்ள விதிகளின் பிரகாரம், அந்தக் கிராமத்தில் இருக்கும் எவராவது தமக்கு வேண்டுமென்று விண்ணப்பம் போட்டால் அவருக்கே கொடுக்கப்பட வேண்டுமென்று ரெவின்யூ விதிகள் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கிராமத்திலுள்ள ஒருவரே மீண்டும் மணியக்காரராக வந்து, தனது சொந்த விரோதங்களை மனதில் வைத்துக் கொண்டு, அதனால் பொதுமக்களுக்குப் பல இடைஞ்சல்கள் செய்கிறார்கள். ஆகவே, இந்த முறையை மாற்றிவிட்டு, வேறு ஒரு புதிய முறையைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கர்ணங்களுக்கும், மணியக்காரருக்கும் கொடுக்கப்படுகின்ற ஊதியம் மிகமிகக் குறைவு. இவர்களுக்குக் குறைந்தது லோயர் டிவிஷன் கிளார்க் என்ற அளவிற்கோ, அல்லது கிராம சேவக் என்ற அளவிற்கோ சம்பளம் கொடுத்து, அரசாங்கமே இவர்களை அங்காங்கு நியமிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் இன்று கிராம நிர்வாகத்திலே இருக்கின்ற அந்தக் குறைகளைப் போக்க முடியும். முக்கியமாக முதலில் கிராம அமைப்புக்களை மாற்றியமைக்க வேண்டும். ஒரு சில கிராமங்கள் பெரிய அளவில் இருக்கின்றன. ஒரு சில கிராமங்களுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. குறைந்த வருமானம் கிடைக்கக்கூடிய கிராமங்களும் இருக்கின்றன. ஒரு சில கிராமங்களில் வரக்கூடிய வருமானம், அங்கிருக்கும் கிராமக் கர்ணம், மணியக்காரர், தோட்டி, தலையாரி இவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்திற்குக்கூட போதாத நிலையில் இருக்கிறது. ஆகவே, துணிச்சலாக, ரீசர்வே செய்து, ஜனத் தொகை—நிலப் பரப்பு—வருமானம் ஆகிய எல்லாம் ஒரே சீரான அடிப்படையில் சீரான கிராமங்களை அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட சீரான கிராமங்களுக்குப் பொறுப்பாக இருக்க, ரெவின்யூத் துறை அதிகாரி ஒருவரையோ, கிராம சேவக் ஒருவரையோ அமைத்துவிட்டால், அதனால் ரெவின்யூவும் வரும், பஞ்சாயத்தும் இருக்கும்—அதனுடைய வேலைகளும் நடைபெறும். வரிகளை வாங்கக் கூடிய பொறுப்பு கிராமங்களை நிர்வகிக்கும் அதிகாரியிடம் கூட்டாக ஒப்படைத்துவிட்டால் நிச்சயமாக ஊழல் குறைந்து நிர்வாகம் சீர்பட்டு விடும்.

அடுத்தபடியாக, கிராம நிர்வாக அமைப்புக்கு அடுத்தபடியாக இருப்பது பிர்க்கா என்ற அமைப்பு. அங்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்று ஒருவர் இருக்கிறார் அவர் ஏதோ போஸ்ட் ஆபீஸ் வேலைபோல் செய்துகொண்டிருக்கிறார். இந்த அமைப்பு முறையினால் அபிவிருத்தித் திட்டங்கள் காலதாமதம் அடைகின்றன. இந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்பது தேவையற்ற அம்சம். அதை அறவே ஒழித்துவிட்டு, நேரடியாக தாலுகாவின் மேற்பார்வையில் வைத்துக்கொண்டால் நல்லது. அங்கு தாலுகா கௌன்சில்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். தாலுகாவிலுள்ள தாசில்தார்களை கெஜட் ஆபீசர்களாக ஆக்கி, அவர்களையே தாலுகா யூனியன்களுக்கு கமிஷனராக ஆக்கிவிட்டால், எந்த வித காலதாமதமும் ஏற்படாது. இதனால் சீரான நிர்வாகமும் ஏற்படும். அடிப்படையிலே கிராமக் கவுன்சில், தாலுகா கவுன்சில் ஏற்படுத்த வேண்டும். கிராமப்புறத்தில் ரெவின்யூ

வருவாய்க்குத் தாசில்தார், கிராம மணியம் இரண்டு பேருமே பொறுப்பு ஏற்க வேண்டும். இந்த மாதிரியான அமைப்பினால் ஸ்தல நிர்வாகம்— அபிவிருத்தி வேலைகள் துரிதமாகவும், விரிவாகவும் நடைபெற வசதியாக இருக்கும்.

அடுத்தபடியாக ஆர். டி. ஓ. என்ற அமைப்பு இருக்கிறது. இதுவும் ஒரு போஸ்ட் ஆபீஸ் வேலை மாதிரிதான். இவருக்கு மேலே கலெக்டர் ஒருவர் இருக்கிறார். மாவட்ட ரீதியிலே, கலெக்டர் ஒருங்கிணைப்பு அதிகாரியாகச் செயல்படுகிறார். ஆகவே, ஆர்.டி.ஓ. என்ற அமைப்பு டிவிஷன் ரீதியிலே இருக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், நிச்சயமாக அந்த அமைப்பு வேண்டாம் என்றே சொல்லலாம். ஆகவே, ஆர்.டி.ஓ. அமைப்பை எடுத்துவிட்டு, கிராம நிர்வாகம், தாலூகா நிர்வாகம், ஜில்லா நிர்வாகம் என்ற ரீதியிலே அமைத்துக்கொள்ளலாம். ஜில்லா கலெக்டரிடத்தில் எல்லா அதிகாரமும் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்தச் சபைகள் எல்லாம் கூடி, மாவட்ட அளவில் டிஸ்ட்ரிக்ட் கவுன்சில் என்ற ஒரு அமைப்பை வைத்துக்கொண்டால், அதனால் மூன்று ஜனநாயக ஸ்தாபனங்களும் இயங்கும்; மூன்று வித நிர்வாகங்களும் செயல்படும். இங்கிலாந்து தேசத்தில் இருக்கும் 'கவுன்ட்டி கவுன்சில்' கூட அப்படித்தான் இருக்கிறதென்று நினைக்கிறேன். ஆகவே, இந்த அரசு இந்த முறையை துணிந்து செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு பிரச்சினை இந்த தேசத்திலே அடிபடுகிறது. டெக்னோக்ராட்ஸ் வெர்ஸஸ் ப்யூரோக்ராட்ஸ் என்று சொல்லுவதைப் போல, இப்பொழுதிருக்கும் ஜில்லா கலெக்டர் அந்த மாவட்டத்தில் இருக்கும் பல தொழில் நுணுக்க இன்ஜினீர்கள், விவசாய அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள் போன்றவர்களுடைய வேலைகளையும் மேற்பார்வை பார்க்கும் அதிகாரியாக இருக்கிறார். கலெக்டருக்குத் தொழில் நுணுக்க அறிவு இல்லாததால், அது பற்றிய வேலைகளில் சில சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த தேசத்திலே கூட, 'டெக்னோக்ராட்' என்று சொல்லப்படுகிற தொழில் நுணுக்க நிபுணர்களுக்கெல்லாம் தாங்கள் ஏதோ அதிகாரிகளால் ஆளப்பட்டு வருகிறார்கள் என்ற குறை இருக்கிறது. இங்கேயும் கூட, நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். தற்போது ஜில்லா கலெக்டருக்குள்ள வேலையை இரண்டு பகுதியாகப் பிரித்து, ரெவின்யூ வேலையை, அதாவது வரி வசூல் செய்கிற வேலையோடு நிர்வாக வேலைக்கான பொறுப்பையும் ஒருவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அபிவிருத்தி வேலைகளை மட்டும் கவனித்துக்கொள்ளக்கூடிய பொறுப்பு இன்னொரு கலெக்டரிடம் விடப்பட வேண்டும். விவசாய நிபுணர்கள், இன்ஜினீரிங் நிபுணர்கள், வைத்திய நிபுணர்கள் இப்படிப்பட்டவர்களுடைய வேலைகளையெல்லாம் ஒருங்கிணைக்கக் கூடிய வகையில், அபிவிருத்தி வேலைகளை இந்த இரண்டாவது கலெக்டரிடம் ஒப்படைத்தால், நிச்சயமாக நல்ல பலன் ஏற்படும். துரிதமாக அபிவிருத்தி வேலைகளெல்லாம் கவனிக்கப்பட்டு விடும். அதன் மூலம் பொது மக்களுக்கும் நன்மை ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

'கலெக்டர்' என்கிற பெயர் பிரிட்டிஷ்காரன் காலத்தில் ஏற்பட்ட பெயராகும். முக்கியமாக, இந்த கலெக்டர் என்கிற பதவி பொது மக்களிடம் இருந்து வரி வசூல் செய்வதற்காக மாத்திரம் ஏற்பட்டதாகும். மற்ற அபிவிருத்தி வேலைகளெல்லாம் அப்பொழுது இரண்டாம் பட்சமாகத்தான் இருந்தது. இப்பொழுது கலெக்டர் பதவியில் இருப்பவர்களுக்குப் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட காரணத்தினால், அவருக்குப் பல கடமைகள் இருக்கின்றன. ஆகவே, கலெக்டர் என்ற பெயரை எடுத்துவிட்டால், பழைய ஏகாதிபத்திய மனோபாவம் கூட ஒழிந்துவிடும். கிராமப்புறங்களில் உள்ள மக்கள், 'கலெக்டர்' என்ற பெயரைச் சொன்னாலே, பயப்படுகிறார்கள். அவரிடம் போகவும் அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே கலெக்டர் என்ற பெயரை எடுத்துவிட்டு, 'கமீஷனர்' என்று மாற்றிவிட்டால், மிகவும் நன்றாக இருக்கும்.

சென்ற நான்கைந்து வருஷங்களுக்கு முன்பு, அமெரிக்காவிலிருந்து யங் ஃபார்மர்ஸ் க்ளப் என்பதைச் சேர்ந்த ஒரு விவசாயி எங்களுடைய ஊருக்கு வந்து, எங்களுடன் தங்கி, அங்குள்ள விவசாய முறைகளைக்





கற்றுப் போவதற்காக வந்திருந்தார். அவர் கேட்ட பல விஷயங்களுக்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருந்தேன். மாவட்ட அளவில் கலெக்டர் என்பவர் இருக்கிறார் என்று நான் சொல்லிக்கொண்டு வந்தபோது, அவர், "வாட் ஈஸ் ஹீ கலெக்டிங் ?" என்று கேட்டார். அவர் எதை வசூல் செய்கிறார் ? என்று அவர் கேட்க, "அது அப்படியல்ல, பிரிட்டிஷ்காரன் இருந்த காலத்தில் "கலெக்டர்" என்ற பெயரை ஏற்படுத்திவிட்டுப் போனான், இப்பொழுது அது அப்படியே இருக்கிறது என்றாலும், பல அபிவிருத்தி வேலைகளுக்கு அவர்தான் பொறுப்பாக இருக்கிறார்" என்று நான் சொன்னேன். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், கலெக்டர் என்ற பெயர் தற்போதைய நிலைமையில் சரியாக இருக்காது என்பதற்காகத்தான். ஆகவே, கலெக்டர் என்ற பெயரை அகற்றிவிட்டு "கமிஷனர்" என்ற பெயர் வைத்தால் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். மற்ற பல மாநிலங்களில்கூட, "கமிஷனர்" என்ற பெயரையே வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த முறையை நம் மாநிலத்திலும் ஏற்படுத்திவிட்டால் நன்றாக இருக்கும்.

ஆகவே, அடிப்படையில் கிராம நிர்வாகம். அதற்கடுத்தபடியாக தாலுக்கா நிர்வாகம். நடுவிலே இருக்கக்கூடிய பிர்க்கா நிலையில் ரெவினியூ இன்ஸ்பெக்டர் இருக்கக்கூடாது. அதேபோல், ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் என்ற அமைப்பும் தேவை இல்லை. ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் என்ற பதவியை எடுத்துவிட்டு, நேரடியாக நிர்வாகப் பொறுப்பை ஜில்லா நிர்வாகம் என்ற அடிப்படையில் கொண்டுவந்தால், நிர்வாக அமைப்பும், ஜனநாயக அமைப்பும் ஒருங்கிணைந்து ? முறையாக இருக்கக் கூடும். அந்த முறையில், நிர்வாகச் சீர்திருத்தம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, "ரிலிஜியஸ் என்டௌமெண்ட்ஸ்" என்பதும் இதிலே வருகிறது என்ற அடிப்படையில் அதிலும் ஒரு யோசனையை மாத்திரம் நான் தெரிவிக்க விரும்புகிறேன் . . . . . . (மணியடிக்கப்பட்டது) நேரம் இல்லாததால், இத்துடன் என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

*திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: கனம் தலைவர் அவர்களே, ஜில்லா நிர்வாக மானியக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

எங்களுடைய தர்மபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்தில் இருந்து சமீபத்தில் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லா நிர்வாகம் சௌகரியமாக நடைபெற வேண்டும் என்பதை முன்னிட்டு பெரிய மாவட்டமாக இருந்த சேலம் மாவட்டத்தை இரண்டாக பிரிக்கவேண்டுமென்று முன்பிருந்த அரசு அவசர கால நிலைமையையும் கருதாது, எதிர்பாராத அதிகச் செலவு ஏற்படுவதையும் கருதாது, தர்மபுரி மாவட்டத்தை தனியாகப் பிரித்தார்கள். இப்போது ஏறக்குறைய இரண்டு ஆண்டு காலமாக தர்மபுரி மாவட்டம் தனியாகவே இயங்கி வருகிறது. சேலம் மாவட்டத்தோடு இணைந்திருந்த நேரத்தில் தர்மபுரி மாவட்டப் பகுதிகளுக்கு வேண்டிய அளவுக்கு தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை, நிர்வாக ஒழுங்கு அமைப்பு சரியாக இயங்கவில்லை என்ற காரணத்திற்காக தர்மபுரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் கல்வி, சமுதாயம், பொருளாதாரம், போக்குவரத்து போன்றவைகள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதால் நிர்வாகச் சீரமைப்புச் செய்யவேண்டி இருக்கிறது. நான்கு ரெவினியூ தாலுக்காக்களைக்கொண்ட மாவட்டமாக தற்போது அது இயங்கி வருகிறது. இன்னும் மூன்று ரெவினியூ தாலுக்காக்களை ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. ஊத்தங்கரை, டெங்கனிகோட்டை, பெண்ணாகரம் போன்ற பகுதிகளை தனித் தாலுக்காவாகச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அது ஒரு இன்டிபெண்டன்ட் டெபுடி தாசில்தார் பகுதியாக இயங்கும் வகையில் அரசாங்கம் முடிவு எடுத்திருப்பதாகக் கருதுகிறேன். ஊத்தங்கரைப் பகுதியை ஒரு தாசில்தார் தலைமையில் இயங்கக்கூடிய ஒரு தனி வட்டமாக

செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மிகவும் பின் தங்கிய வட்டமாகிய ஊத்தங்கரை போன்ற பகுதிகளை சென்ற அரசு பஞ்சப் பிரதேசங்களாக பிரகடனம் செய்திருந்தார்கள். அங்கு விவசாயிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மின்சார வசதி இல்லை. நீர்ப்பாசன வசதி இல்லை. விவசாயிகளின் முன்னேற்றத்துக்குத் தேவையான கல்வி வசதி பெருகவில்லை என்ற காரணத்திற்காக அந்தப் பகுதியிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாம் கூட பஞ்சப்படி முன்பு கொடுத்து வந்தார்கள். தற்போது அது நீக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் அந்த வட்டாரத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் மின்சார வுசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெவினியூ நிர்வாகமும் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகமும் கிராம மக்களுடைய வாழ்க்கை முன்னேறுவதற்கு முக்கியமான நிர்வாகங்களாக இருந்து வருகின்றன. ரெவினியூ நிர்வாகம் சரியாக இயங்குவதற்குத் தாலுக்காவினுடைய தலைமை அதிகாரி அந்தந்தத் தலைநகரில் இருப்பது தான் சிறந்தது. அந்த முறையில் ஊத்தங்கரை போன்ற பகுதியைத் தாலுகா தலைமை ஸ்தலமாக ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஊத்தங்கரைக்கு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்றும் இருக்கவேண்டும். இப்போது ஹாசூரில்தான் இருக்கிறது. ஊத்தங்கரைப் பகுதி மக்கள் ஏறக்குறைய ஐம்பது, அறுபது மைல் தூரத்திலுள்ள ஹாசூர் நீதி ஸ்தலத்திற்கு வரவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, ஊத்தங்கரையைத் தனித் தாலுக்காவாகச் செய்யும்போது, ஊத்தங்கரையிலேயே ஒரு நீதி ஸ்தலத்தை (சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்) ஏற்படுத்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஊத்தங்கரை பெரிய பஞ்சாயத்து யூனியனாக இயங்குகிறது. அது 58 கிராமப் பஞ்சாயத்துகளைக்கொண்ட ஒரு யூனியனாக இருக்கிறது. பாலக்கோடு பஞ்சாயத்து யூனியன் 56 கிராமப் பஞ்சாயத்துகளைக் கொண்டதாக இருக்கிறது. இதையெல்லாம் இரண்டு பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சமமாகப் பரிவர்த்தனை செய்து, சமமாகக் கிராண்டும் வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆரம்பக் கல்வி, சுகாதாரம், கிராம வைத்தியசாலை, விவசாய முன்னேற்றம் போன்ற பல கிராமாந்திர வேலைத் திட்டங்கள் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலே ஒப்படைக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தின்கீழ், பல விஸ்தரிப்பு அதிகாரிகளும், ஆணையாளரும், சேர்மன், அங்கத்தினர்கள் போன்றவர்களும் நிர்வாகத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த நிர்வாகத்தில், ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில், ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஒரு நியமனக் குழு இருக்கிறது. ஆசிரியர்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவதற்கும் ஒரு குழு (Ad-hoc Committee) அமைத்திருக்கிறார்கள். இடைக்காலத்தில் ஆசிரியர்களை மாற்றவேண்டும் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதி பெற்றுத்தான் மாற்றவேண்டும் என்ற முறையெல்லாம் இருக்கிறது. இதெல்லாம் ஒரு இழுபறி அதிகாரமாக இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. முன்பு ஜில்லா போர்டு தலைவருக்கு இருந்த மாதிரி ஒரு பொறுப்புள்ள அதிகாரம் தரப்படவேண்டும். ஆசிரியர்களை நியமிப்பதற்கும், மாற்றம் செய்வதற்கும், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் ஸ்டாச்சூடரி அதிகாரம் இருக்கவேண்டும். அப்படியில்லையென்றால், கல்வி இலாக்காவில் எப்படி செகண்டரி எஜுகேஷன் இயங்குகிறதோ அந்த முறையிலேயே இதையும் செய்துவிடுவது நல்லது என்ற அபிப்பிராயத்தை இந்தச் சமயத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நான் இரு முறை பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்து வருகிறேன். அதில் இருக்கக்கூடிய



சிரமங்கள், சிக்கல்கள் காரணமாக நிர்வாகம் சரியாக இயங்கவில்லை என்ற காரணத்தினால், ஒன்று அதிகாரிகளே பொறுப்பாக இருக்க வேண்டும்; இல்லையென்றால், அதிகாரத்தை ஒரு தனி இலாக்காவிடம் ஒப்படைத்து விடுவது சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

விவசாயிகளுக்கு மின்சார பம்ப் செட்களுக்கான கடன் வசதிகள் வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நாம் செய்கிறோம். அந்தக் கடன் வசதிகளைப் பெறுவதில் விவசாயிகளுக்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. விவசாயி மின்சார மோட்டார் வாங்குவதற்குக் கடன் பெற வேண்டும் என்றால், கடன் மனு போட்ட சம்பந்தப்பட்ட அந்த விவசாயி எந்த கிராமத்தில் இருக்கிறாரோ அந்தக் கிராமத்திற்கு மின்சாரம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறதா என்பதற்கான அத்தாட்சியை—லோடிங் சர்டிபிகேட் வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு அனுப்பவேண்டும் என்று இருக்கிறது. அந்த அத்தாட்சியை வைத்து சம்பந்தப்பட்டவர் விண்ணப்பித்து இருக்கிறாரா என்று பரிசீலித்து அதற்குப் பிறகு பட்டாதாரருக்கு கடன் அனுமதிக்கிறார்கள். அதற்குப் பிறகு வட்டார வளர்ச்சி அதிகாரி அந்தப் பட்டாதாரருக்கு சர்வீஸ் கொடுக்கப்படுகிறதா என்று கேட்கிறார்கள். இப்படி கேட்பதால் காலதாமதம் ஆகிறது. ஆகவே கடன் சாங்ஷன் செய்கிற அதிகாரிகளுக்கும் மின்சார சர்வீஸ் கொடுக்கின்ற அதிகாரிகளுக்கும் இடையே பெரிய காலதாமதம் ஆகிறது. அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. விவசாயிகளுடைய இப்படிப்பட்ட இடையூறுகளைப் போக்கவேண்டும்.

அடுத்தபடியாக தாலுகா தலைநகரங்களிலே ஆஸ்பத்திரிகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுடைய ஜில்லா ஒரு மலேரியல் பகுதி என்பது அரசாங்கத்திற்கு தெரியும். அங்கே தர்மபுரி ஜில்லாவில் அரூர், ஊத்தங்கரை, ஒசூர் போன்ற இடங்களில் காலரா, பிளேக் ஏற்பட்டு, அங்கே சுகாதார அதிகாரிகள் அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கேயெல்லாம் தலைமை ஆஸ்பத்திரிகள் இல்லை. சிறிய சிறிய ஆஸ்பத்திரிகள்தான் இருக்கின்றன. ஆகவே சுகாதார வசதிகளோடு கூடிய படுக்கை வசதிகளோடு கூடிய ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டி, அங்கே பயிற்சி பெற்ற முறையான வைத்தியரை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. சோ. அழகர்சாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது மாவட்ட நிர்வாகம் சம்பந்தப்பட்ட மட்டில் அதிகமான விவசாயிகளுடைய சாதாரண மக்களுடைய கோரிக்கைகளுக்குப் பரிகாரம் காணமுடியாத முறையில் காலதாமதம் ஏற்படுகிறது, அதை மாற்றவேண்டும். உதாரணமாக எடுத்துக்கொண்டால் முதியோர் பென்ஷன், தியாகிகள் பென்ஷன் இவற்றைப் பெறுவதற்காகக் கொடுக்கப்பட்ட மனுக்கள் எல்லாம் ஏறக்குறைய கொடுத்து இரண்டு மூன்று வருடங்கள் ஆகியும்கூட பதில் வராத நிலைமைதான் சில இடங்களிலே இருக்கின்றன. அது மட்டுமல்ல, குறிப்பாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களுக்குப் பட்டா வழங்கும் ஏற்பாடு முறையாக இருப்பதில்லை, சாகுபடி செய்யக்கூடியவர் ஒருவர், இன்னொருவருக்கு பட்டா இருக்கிறது. நிலம் விற்பனைக்கோ அல்லது அது கை மாறுகிற காலத்திலோ அந்த விவசாயிக்கு உண்டான பட்டாவில் எந்த எந்தப் பகுதிகள் இருக்கின்றன. எவ்வளவு நிலம் இருக்கிறது என்று பட்டா வழங்கினால் நலமாக இருக்கும். அப்படி இல்லாததால் சர்க்கார் கொடுக்கக்கூடிய பலவிதமான கடன்களை விவசாயிகள் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இது விஷயமாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.